DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
RE/MAX ACE

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் ஒலிக்கும் தமிழ் இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1335 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 5, 2021

# Canada Post எனப்படும் தேசிய தபால் சேவை நிறுவனத்தை இனி நான் பயன்படுத்த மாட்டேன்

## தனது கடவுச் சீட்டை தபாலில் பறிகொடுத்த இந்திய இளைஞர் ஊடகங்களுக்கு தெரிவிப்பு



**"Canada Post** எனப்படும் தேசிய தபால் சேவை நிறுவனத்தை இனி நான் பயன்படுத்த மாட்டேன். ஓட்டாவா நகரத்தில் இயங்கும் கனடிய குடிவரவு திணைக்களத்திலிருந்து எனது கடவுச் சீட்டை திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக நான் "எக்ஸ்பிரஸ்போஸ்ட் எனப்படும் துரித சேவைக்கு கட்டணம் செலுத்தினேன். எனது கடவுச்சீட்டு கனடா போஸ்ட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது என்பது உறுதியானது. அவர்கள் எனது கையொப்பத்தை பெற்றுக்கொண்டே அதனை எனக்கு கையளித்திருக்க வேண்டும். ஆனால் தபால் ஊழியர்கள் அவ்வாறு செய்யவில்லை. யாரோ தவறான ஒருவர் கையில் கனடா போஸ்ட் ஊழியர் கொடுத்துவிட்டார் அது ஒரு கடவுச் சீட்டு என்பதால் அதிக கவனத்துடன் எனக்கு விநியோகம் செய்திருக்க வேண்டும் டெலிவரி செய்ய வேண்டும். இது ஒரு முக்கியமான ஆவணம்." ஜோசப் கூறினார்.

இவ்வாறு ஊடகங்களின் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார், தனது கடவுச் சீட்டை தபாலில் இழந்த இந்திய இளைஞரான பைபன் ஜோசப். *(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

# "அரசியல்,சமூகம் ஆகிய தளங்களில் நடுநிலை தவறாது வெற்றி நடைபோடும் "உதயன்" பத்திரிகையை நாம் பாராட்ட வேண்டும்"

## உதயன் வெள்ளி விழா நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி புகழாரம்



"கடந்த 25 வருடங்களாக வாரந்தோறும் சிறப்பாக வெளிவரும் கனடா உதயன் பத்திரியானது. அரசியல் மற்றும் சமூகம் ஆகிய தளங்களில் நடுநிலை தவறாது வெற்றி நடைபோடுகின்றது. கனடாவில் மத்திய அரசாங்கம் சார்ந்த கட்சிகளையும் மாகாண அரசுகள் சார்ந்த கட்சிகளையும் அணைத்தும் ஆதரவு வழங்கியும் "உதயன்" வார இதழ் தொடர்ச்சியாக பங்காற்றி வருவதற்கு காரணம் இந்த உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரே ஆவார். எனவே ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களை, நாம் அனைவரும் பாராட்ட வேண்டும்"

இவ்வாறு கடந்த 30ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோ " நெற்வின்" விழா மண்டபத்தில் நடைபெற்ற உதயன் வெள்ளி விழா - மற்றும் "நண்பன்" விருது விழா ஆகிய நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி புகழாரம் சூட்டினார் *(தொடர்ச்சி உள்ளே 15ம் பக்கத்தில்)*

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# தாமோர் நகை அடைவு மாளிகை

## THAMOR PAWN BROKER

THAMOR

- கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
- நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
- குறைந்த வட்டி 2% இருந்து

தாமோர் வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்

உடனடியாக உங்கள் கைகளில்
குறைந்த வட்டியுடன் அடவு பிடித்துக்கொள்ள
தாமோர் அடவு மாளிகையை நாடுங்கள்



107 Dundas St, East (Second Floor)
Mississauga, ON, L5A 1W7

905-272-1222

Online service: www.remitbee.com

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### பெண்களுக்கான வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு
**ஜெயா:**
**(647) 669-2739**

### HELP WANTED

411 College St, Toronto ON ல் அமைந்துள்ள **Toby's Pub and Eatery** என்னும் உணவகத்திற்கு **Kitchen helper** தேவை.

Day time/night time
Full time/part time.
Please call after 12 pm.

**416-879-3768**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### தொழிற்சாலை வேலைக்கு ஆட்கள் தேவை

தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
**சிவா: (416) 402-7803**
**சசி: (416) 299-6742**

## GRIFFIN COLLEGE LONDON


(International Examination Board, UK)

Partnership with RSL Awards

### Now@ CANADA for the first time

16 Qualifications ( Indian Classical Dance, Vocal and Instruments) are regulated by UK Government RSL Award Credit points are available for university progression @ Canada

| INDIAN CLASSICAL DANCE<br>Bharathanatyam, Kuchipudi Kathak | CARNATIC MUSIC<br>Vocal / Veena / Violin / Keyboard / Flute / Saxophone/ Nadaswaram / Guitar | CARNATIC INSTRUMENTS<br>Kanjeera / Mirudangam / Tabla / Morsing / Ghatam / Thavil |
|---|---|---|
| Grade 1 to Grade 7 Certificate Course<br>• No Minimum Academic Qualification Required & Age No Bar<br>• Credit points available<br>• Regulated Certificate | Grade 1 to Grade 7 Certificate Course<br>• No Minimum Academic Qualification Required & Age No Bar<br>• Credit points available<br>• Regulated Certificate | Grade 1 to Grade 7 Certificate Course<br>• No Minimum Academic Qualification Required & Age No Bar<br>• Credit points available<br>• Regulated Certificate |
| Grade 8 Diploma<br>• 14 years and above<br>• Credit points available<br>• Regulated Certificate<br>Title: NATIYA THILAGAM | Grade 8 Diploma<br>• 14 years and above<br>• Credit points available<br>• Regulated Certificate<br>Title: ISAI KALAIMANI | Grade 8 Diploma<br>• 14 years and above<br>• Credit points available<br>• Regulated Certificate<br>Title: VADYA KALAIMANI |
| Performance Diploma Exam Atrukai<br>• 15 years and above<br>• 1 hour performance<br>Title: NATIYA VALARMANI | Performance Diploma Exam Atrukai<br>• 15 years and above<br>• 1 hour performance<br>Title: ISAI VALARMANI | Performance Diploma Exam Atrukai<br>• 15 years and above<br>• 1 hour performance<br>Title: VADYA VALARMANI |
| Professional Diploma (Teacher's Training)<br>Title: NATIYA MUDHUMANI | Professional Diploma (Teacher's Training)<br>Title: ISAI MUDHUMANI | Professional Diploma (Teacher's Training)<br>Title: VADYA MUDHUMANI |
| Bachelor's degree in Bharathanatyam | Bachelor's Degree in music | Bachelor's Degree in Instruments |



For more details regarding Exam application, Centre deatails, please contact Isaikalaimany Mrs. Rathika Naventhasarma +16474273925 and Naatiyakalaimani Mrs. Gnanambikai Gunaratnam M.A.,Dance,Dip. in Edu +16478572277 Website : www.griffincollege.org.uk

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கை அரசின் மதவாதப் போக்கிற்கு எதிராகக் குரல் எழுப்பும் எழுச்சிமிக்க பேராயர்

இலங்கையில் இனவாதத்தை கையில் எடுத்த வண்ணம் அரசியல் என்று தளத்திலும் அரசாங்கம் என்ற மேடையிலும் அலங்காரமாக காட்சி தரும் அரசியல்வாதிகளின் முகத்திரையை கிழித்தெறிய இதுவரை காத்திரமானவர்கள் எவரும் எழுந்து நின்று கைகளை உயர்த்திப் பேசவில்லை.

ஆனால் தற்போது இலங்கையின் தலைநகர்ப் பகுதியிலிருந்து ஆட்சி பீடத்திற்கு எதிராக உரத்த குரலொன்று கேட்கத் தொடங்கியுள்ளுத. அவர் தான் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அவர்கள்.

இலங்கையில் அவ்வப்போது பேரினவாதிகளால் கொழுந்து விட்டு எரியச் செய்யும் இனவாத அல்லது மதவாத தீயில் உடல்கருகி தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்கள் இலட்சக் கணக்கில் அடங்குவார்கள். குறிப்பாக இஸ்லாமிய பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமியர்களின் இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்களினால் ஏற்பட்ட உயிர் இழப்புக்களும் சொத்துக்களின் இழப்புக்களும் கணக்கில் அடங்காதவை.

இதைப் போன்றே. இந்துக்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் ஏராளம். எத்தனை ஆயிரம் இந்து ஆலயங்கள் எரிக்கப்பட்டும் இடித்தழிக்கப்பட்டும் போயின என்பதன் கணக்குகள் இலங்கையின் இந்து விவகார அமைச்சில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
இவ்வாறே. ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொண்டு வரும் போராட்டத்தில் நாங்கள் கொல்லப்பட்டாலும் தொடர்ந்தும் போராடுவோம் என்று கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் முன்கூட்டிய தகவல்கள் கிடைக்கப் பெற்ற போதும் பாதுகாப்பு தரப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் தங்களது பாதுகாப்பினை மட்டும் உறுதி செய்து கொண்டார் எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த கட்டுவாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து மேலும் தெரிவித்த அவர்,

தாக்குதல் நடைபெற்ற போது மைத்திரிபால சிறிசேனவும், பாதுகாப்பு தரப்பினரும் தங்கள் பாதுகாப்பினை மட்டும் கருத்தில் கொண்டு செயற்பட்டதாக குறிப்பிட்டார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதியும், பாதுகாப்புப் படையினரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து தங்களுக்கு இடையே மட்டும் கடிதங்களை பரிமாறிக் கொண்டனர் எனவும் தெரிவித்தார்.

இந்த அனைவரும் தண்டிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதாகத் தெரிவித்த அவர், இந்த ஆணைக்குழுவுக்காக 600 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல் படுத்தப்படாத காரணத்தினால் இந்தப் பணம் விரயமாகின்றது என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு தற்போதைய அரசின் அராஜகங்களுக்கு எதிராகவும் மைத்திரி-ரணில் கூட்டான குள்ளநரி வேலைகளுக்கு எதிராகவும் குரல் எழுப்பும் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அவர்களுக்கு வடக்கு கிழக்கிலிருந்தும் ஆதரவு பெருக வேண்டும் என்று விரும்புகின்றோம்.

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வரப்பட்ட போதை மாத்திரைகள் மீட்பு – இருவர் கைது!

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு போதை மாத்திரைகளை கடத்தி வந்த இருவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளதுடன் , அவர்களின் இரு சொகுசு கார்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பில் இருந்து பெருமளவான போதை மாத்திரைகள் யாழ்ப்பாணத்திற்கு காரில் கடத்தி வரப்படுவதாக யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

தகவலின் பிரகாரம் நடவடிக்கையில் இறங்கிய புலனாய்வு பிரிவினர் கார்களை அடையாளம் கண்டு அவற்றை மடக்கி பிடித்து சோதனையிட்ட போது , அவற்றுள் இருந்து பெருமளவான போதை மாத்திரைகளை மீட்டுள்ளனர்.

இதையடுத்து இரு கார்களிலும் பயணித்த யாழ்.நகர் பகுதியை சேர்ந்த ஒருவரையும் , கொழும்பை சேர்ந்த ஒருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் , அவர்களின் இரு கார்களையும் யாழ்ப்பாண பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கனடா போஸ்ட் எனப்படும் தேசிய தபால் சேவை நிறுவனத்தை இனி நான் பயன்படுத்த மாட்டேன்

## தனது கடவுச் சீட்டை தபாலில் இழந்த இந்திய இளைஞர் ஊடகங்களுக்கு விசனத்துடன் தெரிவிப்பு

"கனடா போஸ்ட் எனப்படும் தேசிய தபால் சேவை நிறுவனத்தை இனி நான் பயன்படுத்த மாட்டேன். ஒட்டாவா நகரத்தில் இயங்கும் கனடிய குடிவரவு திணைக்களத்திலிருந்து எனது கடவுச் சீட்டை திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக நான் "எக்ஸ்பிரஸ்போஸ்ட் எனப்படும் துரித சேவைக்கு கட்டணம் செலுத்தினேன். எனது கடவுச்சீட்டு கனடா போஸ்ட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது என உறுதியானது. அவர்கள் எனது கையொப்பத்தை பெற்றுக்கொண்டே அதனை எனக்கு கையளித்திருக்க வேண்டும். ஆனால் தபால் ஊழியர்கள் அவ்வாறு செய்யவில்லை. யாரோ தவறான ஒருவர் கையில் கனடா போஸ்ட் ஊழியர் கொடுத்துவிட்டார் அது ஒரு கடவுச் சீட்டு என்பதால் அதிக கவனத்துடன் எனக்கு விநியோகம் செய்திருக்க வேண்டும் கடவுச் சீட்டு என்பது ஒரு முக்கியமான ஆவணம்".
இவ்வாறு ஊடகங்களின் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார், தனது கடவுச் சீட்டை தபாலில் இழந்த இந்திய இளைஞரான மாணவர் பைபன் ஜோசப்.

ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாணவராக கனடாவுக்கு வந்த பைபன் ஜோசப் ஹலிபெக்ஸ் நகரத்தில் உள்ள பிரெட்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்.

இப்போது அங்கு வசிக்கும் அவர், ஜனவரி மாதம் இந்தியா சென்று தனது பெற்றோரைப் பார்ப்பதற்காக ஒரு விமானப் பயணத்தை பதிவு செய்துள்ளார். சில மாதங்களுக்கு முன்பே, அது 2000 டாலர்கள் மேல் செலுத்தி விமானச் சீட்டைப் பெற்றார, ஆனால் தற்போது அவரது கடவுச்சீட்டு தொலைந்து போன காரணத்தால் அவரால் இந்தியா செல்லமுடியுமா என்று உறுதியாக தெரியவில்லை எனவும் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்

தற்போது தனது கடவுச்சீட்டை இழந்துள்ள பைபன் ஜோசப் தற்காலிக விசாவிற்கான விண்ணப்பத்தையும் அவர் தனது அசல் இந்திய கடவுச்சீட்டையும் கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை திணைக்களத்திற்கு அனுப்பினார், அது கோரிக்கையை ஏற்று, கனடா போஸ்ட் கண்காணிப்பு எண்ணுடன் சரியான முகவரிக்கு திருப்பி அனுப்பியது.

"நான் இதை எதிர்பார்க்கவே இல்லை, " என்று பைபன் ஜோசப் நேற்று முன்தினம் புதன்கிழமை பெட்.'.போர்டில் தனது வீட்டில் செய்தியாளர்களிடம் கூறினார். அவர் தொடர்ந்து தனது கடவுச்சீட்டு தொலைந்து போன விடயத்தை செய்தியாளர்களிடம் விபரமாகக் கூறினார்.

"நான் கடந்த பல நாட்களாக எனது கடவுச்சீட்டு வந்துவிடும் என்று காத்திருந்தேன். குடிவரவு திணைக்களத்திலிருந்து எனது கடவுச்சீட்டு அக்டோபர் 18 அன்று அனுப்பப்பட்டதாக தபால் அலுவலகம் குறிப்பிட்டபோது நிம்மதியடைந்தேன்

ஆனால் எனக்கு அது கிடைக்காத படியால் அதைத் திரும்பப் பெற நான் எல்லாவற்றையும் செய்தேன், இந்த விடயத்தை கனடா போஸ்ட்டில் முறைப்பாடு செய்து அவர்கள் விசாரணை நடத்துகின்றார்கள். ஆனால் பயனில்லை' என்று தெரிவித்த பைபன் ஜோசப் தொடர்ந்தும் கவலையுடன் தனது சங்கடத்தை விபரித்தார்.

அவரும் பொலிஸைத் தொடர்பு கொண்டார், ஆனால் அவர்கள் அதைக் கேட்கவில்லை, கவனிக்கவும் இல்லை. வேறு யாராவது தவறுதலாக அதைப் பெற்றாரா என்று பார்க்க அக்கம் பக்கத்தினர் மத்தியில் விசாரித்துப் பார்த்தார். அதுவும் பலனளிக்கவில்லை.

அவர் முகநூல் போன்ற சமூக சமூக ஊடக குழுக்களில் இடுகையிடப்பட்டு, மாற்று பாஸ்போர்ட்டைப் பெறுவதைப் பார்த்தார், ஆனால் அதற்கு குறைந்தபட்சம் நான்கு முதல் ஆறு வாரங்கள் ஆகும் என்றார்கள் ஆனால் அவரது பயணத் திகதி நெருங்கிக் கொண்டிருக்கையில். தபால் நிலையத்தை பலமுறை தொடர்பு கொண்டதாகவும், ஆனால் உரையாடல்கள் சரியாக நடக்கவில்லை என்றும் பைபன் ஜோசப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் " கனடா போஸ்ட் வாடிக்கையாளர் சேவைப் பகுதியில் பணியாற்றுகின்றவர்கள் சிலர் என்னிடம் பேசிய விதம் மிகவும் அருவருப்பானது, ஏனென்றால் நானா தவறு செய்தேன், அவர்கள் தானே ." என்றும் கடவுச் சீட்டை இழந்துள்ள பைபன் ஜோசப் கூறினார்.

# யாழ்ப்பாணம் கிரிக்கெட் போட்டியில் மோதல் … கைது செய்யப்பட்ட சிறுவர்களுக்கு பிணை…

கிரிக்கெட் விளையாட்டில் மோதலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 11 சிறுவர்களை தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியில், பெற்றோரில் ஒருவர் பிணை முறியில் கையொப்பமிட்டு விடுவிக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நாவாந்துறையில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்ட சிறுவர்கள் இடையே ஓட்ட எண்ணிக்கையை மாற்றிச் சொன்னதாக ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியதால் கிரிகெட் விக்கெட்டுகளினால் தாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் சிறுவர் ஒருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நேற்றுமுன்தினம் 4 சிறுவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். விக்கெட் கட்டைகளினால் மோதலில் ஈடுபட்டனர் என்று சிறுவர்கள் மீது பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.
அவர்கள் மூவர் மீதான குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன், பெற்றோர் – பாதுகாவலர் ஒருவர் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பிணை முறியில் கையொப்பமிட்டு விடுவிக்க உத்தரவிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 7 சிறுவர்கள் கைது செய்யப்பட்டு மேலதிக நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.
அவர்களையும் பெற்றோர் – பாதுகாவலர் ஒருவர் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பிணை முறியில் கையொப்பமிட்டதன் அடிப்படையில் விடுவிக்க மேலதிக நீதிவான் நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தை பூதாகரமாக்கி இனங்களுக்கு இடையே மோதல் நிலையை உருவாக்கும் வகையில் செயற்படவேண்டாம் என்று பொலிஸார் கேட்டுள்ளனர்.

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- ✦ தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ✦ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- ✦ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- ✦ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- ✦ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- ✦ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario


ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**





உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னணியை தெரிந்துகொள்வது எமது உரிமை என்கிறார் கொழும்பு பேராயர்

ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னணியை முழுமையாக தெரிந்து கொள்வது தமது உரிமையாகும் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை மாத்திரமே தாம் எதிர்பார்ப்பதாகவும் அதிக பணத்தை வழங்க வேண்டும் என்றோ, ஏனைய வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்க வேண்டும் என்றோ தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

நீர்கொழும்பு - கட்டுவப்பிட்டி தேவாலயத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஆராதனைகளின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.


இதன்போது மேலும் தெரிவித்த அவர், “அப்பாவி மக்கள் எவ்வித காரணமும் இன்றி கொல்லப்படுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணி எது என்பதையே நாம் தொடர்ந்தும் வினவிக் கொண்டிருக்கின்றோம். இதனை தெரிந்து கொள்வது எமது உரிமையாகும்.

எனவே உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னணியை முழுமையாக வெளிப்படுத்துமாறு நாட்டின் தலைவர்களிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். இதனை மீண்டும் அரசியல் தலைவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்.



மாறாக அதிக பணத்தை வழங்க வேண்டும் என்றோ ஏனைய வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்க வேண்டும் என்றோ நாம் எதிர்பார்க்கவில்லை” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சாட்சியங்களின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும்



## யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன்

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபித்த ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பம் இடவில்லை என்ற போதிலும், ஏன், எவ்வாறு, எதற்காக இலங்கை தொடர்பாக பாதிக்கப்பட்ட 200 பேர் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதை 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையிலும் மற்றைய சாட்சியங்களின் அடிப்படையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,நீதியரசருமான க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

-அவர் சனிக்கிழமை 30ம் திகதி ஊடகங்களுக்கு வழங்கிய கேள்வி பதிலின் போது அவ்வாறு தெரிவித்தார்.
-அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு...

கேள்வி:

இலங்கையில் இறுதி யுத்தம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட முன்னாள், இந்நாள் முக்கிய பிரமுகர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பாதிக்கப்பட்ட 200 தமிழர்கள் சார்பில் என்ற Global Rights Compliance LLR (GRC) சட்ட நிறுவனம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு நடத்துநருக்கு சமர்ப்பித்துள்ள ஆவணம் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? இது சாத்தியமா?

பதில்:

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நடைபெற்றது இனப்படுகொலை தான் என்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை இயற்றியுள்ளது.

இந்த இனப்படுகொலை தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எல்லா தமிழ் கட்சிகளுமே கடந்த காலத்தில் வலியுறுத்தி வந்துள்ளன. அத்துடன், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என்றும் எல்லா தமிழ் தேசிய கட்சிகளும் கூட்டாகக் கடிதம் ஒன்றில் கையொப்பமிட்டு ஐ.நாவுக்கு அனுப்பியுள்ளன.

ஆகவே, இந்த பின்னணியில், Global Rights Compliance LLP (GRC) செய்திருக்கும் இந்த நடவடிக்கை மிகவும் சரியானதும் அத்தியாவசியமானதும் காலத்துக்குப் பொருத்தமானதும் ஆகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைத் ஸ்தாபித்த ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பமிடவில்லை என்ற போதிலும், ஏன், எவ்வாறு, எதற்காக இலங்கை தொடர்பில் பாதிக்கப்பட்ட 200 பேர் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதை 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையிலும் மற்றைய சாட்சியங்களின் அடிப்படையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும்.

அவ்வாறான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று உரிய சட்டக் கொள்கைகள், கோட்பாடுகள், வாதங்களுடன் இந்த முதலாவது தொடர்பாடலுக்கான ஆவணத்தை முறையாக Global Rights Compliance LLP (GRP) சமர்ப்பித்துள்ளது என்று நான் நம்புகின்றேன்.

கேள்வி: இந்த சமர்ப்பணத்தின் அடிப்படையில் அடுத்து என்ன நடைபெறும்?

பதில்:

இலங்கை மீது விசாரணை நடைபெறுமா என்பது தொடர்பில் இப்பொழுது எந்த எதிர்வு கூறலையும் செய்ய முடியாது. ஆனால், சர்வதேச நீதிமன்றம் இந்த ஆவணத்தை பரிசீலித்து எடுக்கவிருக்கும் முடிவிலேயே அது தங்கி இருக்கின்றது. சட்ட கோட்பாடுகளின் அடிப்படையிலும், எதிர்காலத்தில் மீண்டும் ஒரு இனப்படுகொலை இலங்கையிலோ அல்லது உலகின் வேறு எந்த நாட்டிலுமோ நடக்கக்கூடாது என்பதை கவனத்தில் கொண்டும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்யும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கேள்வி: இந்த சமர்ப்பணத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்:

அவசியமாக செய்யப்பட வேண்டிய ஒரு விடயத்தை நல்ல முறையில் Global Rights Compliance LLP (GRP) செய்திருக்கின்றது. பாதிக்கப்பட்ட 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையில் சர்வதேச நீதிமன்றத்திடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

ஆகவே, இந்த ஆவண சமர்ப்பணம் வலுவானதாக செய்யப்பட்டிருப்பதாகவே நான் உணர்கின்றேன்.மேலும் இவ்வாறான நடவடிக்கைகள் இந்தக் கால கட்டத்தில் அவசியமாகின்றன. இங்கு எமது வட கிழக்கு நிலங்கள் பறிபோகின்றன.

பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த வணக்கஸ்தலங்கள் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படுகின்றன. தொல்பொருளியலைத் திரிபுபடுத்தி தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களை சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களாக எடுத்துக் காட்டி பல ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களமும் வேறு காரணங்களை முன்வைத்து மற்றும் அரசாங்க திணைக்களங்கள் பலவும் எமது காணிகளைக் கையேற்று வருகின்றன.

அங்கு வாழும் தமிழ் மக்கள் இராணுவ ஒத்துழைப்புடன் விரட்டி அடிக்கப்படுகின்றனர். சிங்கள குடியேற்றம் தமிழர் தாயகத்தில் துரிதமாக நடைபெறுகின்றன.

இனப்படுகொலையின் பல்வேறு பரிமாணங்கள் இவை. இவ்வாறான விசாரணைகளின் போது தற்போது இங்கு நடைபெறும் விடயங்களும் உண்மையை உலகம் உணர உதவி புரியும். நான் இந்த நடவடிக்கையை முற்றும் வரவேற்கின்றேன்.

**- மன்னார் நிருபர்**

# யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடிய தமிழ் கட்சிகளின் தலைவர்கள்! கூட்டத்தில் இணையாத சில தமிழ்க் கட்சிகள்



தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றுகூடலொன்று தற்போது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் திண்ணையில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (Telo) ஏற்பாட்டில் குறித்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

13ஆம் திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக ஆரம்ப கட்டத்தில் அமல்படுத்தப்பட்ட நிலையில் நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்தை ஒருமித்த நிலைப்பாட்டில் கோருவதற்கான கலந்துரையாடலாக குறித்த கலந்துரையாடல் அமைந்துள்ளது.

இதில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, தமிழ் மக்கள் கூட்டணியின் பொருளாளர் வி.பி.சிவநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசு கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தியா செய்திகள்
India News

# "பாஜகவின் கதை முடிந்தது" வெற்றிக்களிப்பில் மம்தா பானர்ஜி!



நாடு முழுவதும் உள்ள மூன்று மக்களவை தொகுதிகளுக்கும் பல்வேறு மாநிலங்களில் காலியாக உள்ள 29 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் கடந்த அக்டோபர் 30ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற்றது. மத்தியப் பிரதேசத்தில் கந்த்வா, இமாச்சலப் பிரதேசத்தில் மாண்டி, தாத்ரா நாகர் ஹவேலி ஆகிய 3 மக்களவைத் தொகுதிகளுக்கும், மேற்கு வங்கத்தில் நான்கு சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் நடந்தது. இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது.

காலை முதல் தொடங்கிய வாக்கு எண்ணிக்கையில் 4 தொகுதிகளிலும் மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியே முன்னிலை வகித்து வருகிறது. பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் முன்னிலையில் இருப்பதால் கிட்டத்தட்ட வெற்றி உறுதியாகிவிட்டது. இதனைக் கொண்டாடும் விதமாக கட்சி தொண்டர்கள் இனிப்புகள் வழங்கியும் பட்டாசுகள் வெடித்தும் கொண்டாடி வருகின்றனர். இதுகுறித்து திரிணமூல் காங்கிரஸ் எம். பி. சவுகதா ராய் கூறுகையில், "மேற்குவங்கத்தில் இடைத்தேர்தல் முடிவு எதிர்பார்க்கப்பட்டது போலவே வந்துள்ளது. நாங்கள் கடுமையாக போராடி மாபெரும் வெற்றி பெறுகிறோம். பாஜக எப்போதெல்லாம் தோற்கிறதோ, அந்தளவிற்கு ஜனநாயகத்திற்கு நல்லது. மத்திய பாஜக அரசின் செயல்பாடுகளால் மக்கள் துன்பப்படுகிறார்கள். இதைத் தான் தேர்தல் முடிவுகளும் காட்டுகின்றன. மேற்கு வங்கத்தில் பாஜகவின் கதை முடிந்துவிட்டது. தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகள் எதுவும் இருக்கக்கூடாது என்று எங்கள் கட்சி அறிவுறுத்தியது. எதுவும் நடக்காது" என்றார். கடந்த மாதம் நடைபெற்ற இடைத்தேர்தலிலும் பாஜக படுதோல்வியடைந்தது கவனிக்கத்தக்கது.

# உத்தரபிரதேச மாநிலத்தில் ஜன்னல் வழியாக எச்சில் துப்பியவரை வீடு புகுந்து சுட்டுக்கொன்ற இளைஞர்



வெற்றிலை பாக்கு போட்டு குதப்பிக்கொண்டு இருந்தவர் ஜன்னல் வழியே அதை துப்ப அது இளைஞரின் மீது விழுந்ததால் ஆத்திரத்தில் வீட்டுக்குள் புகுந்து துப்பாக்கியால் சுட்டு கொலை செய்திருக்கிறார் இளைஞர். எச்சில் துப்பிய ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பீகார் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

உத்தரபிரதேச மாநிலத்தில் ஷாம்லி மாவட்டத்தைச் சேர்ந்தவர் இஷான் மாலிக். இவர் பீகாரின் சிவான் மாவட்டத்தில் குய்லா பகுதியில் வசித்து வருகிறார். அப்பகுதியில் சாலையோரத்தில் ரெடிமேட் துணி வியாபாரம் செய்து வருகிறார். இவர் நேற்று முன்தினம் இவர் தனது வீட்டில் சமைத்து கொண்டே வெற்றிலை பாக்கை போட்டு குதப்பிக்கொண்டு இருந்திருக்கிறார்.

அப்போது சமையல் அறையின் ஜன்னல் வழியாக வெற்றிலைபாக்கு எச்சிலை துப்பியிருக்கிறார். அந்த வெற்றிலை பாக்கு எச்சில் ஜன்னலுக்கு கீழே இருந்த கோலு மியான் என்கிற இளைஞர் மீது விழுந்திருக்கிறது. இதில் கடுமையாக ஆத்திரப்பட்ட அந்த இளைஞர், வீட்டிற்குள் சென்று இஷானிடம் சத்தம் போட்டிருக்கிறார். இதில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வாக்குவாதத்தில் ஆத்திரப்பட்ட கோலு மியான், தன்னிடமிருந்த நாட்டு துப்பாக்கியை எடுத்து இஷானை சுட்டுத் தள்ளி விட்டு தப்பி ஓடியிருக்கிறார். துப்பாக்கி சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடிவந்து பார்த்தபோது குண்டு பாய்ந்து இஷான் தரையில் விழுந்து துடிதுடித்து கொண்டிருந்திருக்கிறார். அவரை உடனடியாக மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் அவரை பரிசோதித்த மருத்துவர்கள் இஷான் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். தகவல் அறிந்த சிவான் மாவட்ட போலீசார், வழக்குப்பதிவு செய்து 18 வயதான கோலு மியானை கைது செய்தனர். நாட்டு துப்பாக்கி வைத்திருந்ததால் வேறு ஏதேனும் குற்ற செயல்களில் ஈடுபட்டு இருப்பாரா என்று விசாரணை நடத்தின. ர் ஆனால் விசாரணையில் அவர் மீது குற்ற வழக்குகள் எதுவும் இல்லை என்று தெரிய வந்து உள்ளது ஆனாலும் விசாரணை கொலை செய்த குற்றத்திற்காகவும் அவர் நாட்டு துப்பாக்கியை வைத்து கைது செய்து அவர்கள் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர் துப்பிய ஒருவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கிறது.

# 2022ம் ஹஜ் பயணத்துக்கு சென்னையிலிருந்தும் விமான சேவை — நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு வலியுறுத்தல்




இதுதொடர்பாக எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில பொதுச்செயலாளர் அகமது நவவி வெளியிட்டுள்ள அறிக்கையில், "கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக புனித ஹஜ் பயணம் நடைபெறாத சூழலில், 2022-ம் ஆண்டில் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பம் செய்வதற்கான இணையதளங்களை ஒன்றிய அரசின் ஹஜ் கமிட்டி அறிவித்துள்ளது. அதேவேளையில் 2022-ஆம் ஆண்டு ஹஜ் பயணத்துக்கான விமானங்கள் புறப்படுவதற்கான இடங்கள் 21-இல் இருந்து 10 ஆக குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி படி சென்னை, திருச்சி விமானநிலையங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தைச் சேர்ந்த ஹஜ் பயணிகள் பெங்களூரு, கொச்சின் ஆகிய இடங்களிலிருந்து செல்லும் விமானங்களில் பயணிக்க வேண்டிய நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு தமிழகத்திலிருந்து ஹஜ் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. இந்திய பெருநகரங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சென்னை விமானநிலையம் புறக்கணிக்கப்பட்டிருப்பதும், ஹஜ் பயணிகளின் சிரமங்களை கணக்கில் கொள்ளாது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையும் கண்டிக்கத்தக்கது.

கொரோனா பெருந்தொற்றுக்கிடையில் பல்வேறு நாடுகளிடையே விமானப் போக்குவரத்து துவங்கியுள்ளது. இந்தியாவிலிருந்தும் தடுப்பூசி செலுத்தி, கோவிட் சோதனை மேற்கொண்ட பின்னர் வெளிநாடுகளில் பணிபுரிவோர்கள் விமானப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அதுமட்டுமின்றி, புனித ஹஜ் பயணம் அடுத்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் தான் துவங்கும் என்கிற நிலையில், கொரோனா தொற்றை காரணங்காட்டி தமிழகத்திலிருந்து ஹஜ் பயணத்துக்கான விமானங்கள் சேவை ரத்து செய்யப்படுவது ஏற்கத்தக்கதல்ல.

தமிழகம் மற்றும் புதுச்சேரியிலிருந்து ஹஜ் கமிட்டி மூலமாகவும், தனியார் சேவை மூலமாகவும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானோர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்லும் நிலையில், அவர்கள் அனைவரும் பெங்களூர் அல்லது கொச்சி விமான நிலையங்கள் மூலமாக பயணிக்க வேண்டும் என்பது தமிழக ஹஜ் பயணிகளுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தும். ஆகவே, தமிழக அரசு உடனடியாக இந்த விசயத்தில் தலையிட்டு, 2022ம் ஆண்டு ஹஜ் பயணத்துக்கான விமானங்கள் புறப்படுவதற்கான இடங்களில் சென்னை விமான நிலையத்தையும் இடம்பெறச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஏ.கே.கரீம்**
**மாநில செயலாளர்**

சினிமா

# மனோ வெ. கண்ணதாசன் இயக்கத்தில் "இறுதிப் பக்கம்"

திரைப்பட உலகில் ஒரு புதிய கதை சொல்லல் முறையில் உருவாகியிருக்கிறது "இறுதிப் பக்கம்" என்கிற திரைப்படம்.ட்ரீம் கிரியே'ன்ஸ் சார்பில் இப்படம் உருவாகியுள்ளது.

படத்திற்குக் கதை எழுதி இயக்கியிருக்கிறார் மனோ வெ. கண்ணதாசன். அவர் படத்தைப் பற்றி கூறும்போது, "பொதுவாக பெரும்பாலான திரைப்படங்களில் ரசிகர்கள் திரையில் பார்க்கிற பாத்திரங்கள் யாரையும் எளிதில் வகைப்படுத்தி குணத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் புறவயத் தன்மையுடன்தான் இருக்கும். ஒன்று நல்லவனாக இருப்பான், அல்லது கெட்டவனாக இருப்பான், அல்லது நல்லவன் கெட்டவனாகத் தெரிவான், கெட்டவன் நல்லவனாக மாறுவான். இப்படி பார்க்கிறவர் கற்பனையில் உருவகித்துக் கொள்ளும்படித் தான் பாத்திரங்களின் அமைப்பு இருக்கும். ஆனால் கதைகள், நாவல்கள் படிக்கும் போது சோதனை முயற்சியான படைப்புகளைப் படிக்கும்போது படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கதை புலப்படும். வேறு விதமான கதைகளை, பாத்திரங்களின் இயல்புகளை அகவயமாக உணர்வார்கள். வெளியே தெரியும் கேள்வி.

அப்படித் திரைப்பட உலகில் ஒரு முயற்சிதான் இந்த "இறுதிப் பக்கம்". ஒரு கொலை நடந்து இருக்கும். அந்தக் கொலையைச் செய்தது யார்? என்பதுதான் வெளியே தெரியும் கேள்வி. ஆனால் ஆளாளுக்கு வெவ்வேறு வகையான மன நிலையில் அதைப் பார்ப்பார்கள். வேறு வகையான கேள்விகள் இருக்கும். ஆனால் யாராலும் கொலையாளியை ஊகிக்க முடியாது. அப்படி ஒரு படமாக "இறுதிப் பக்கம் இருக்கும்" என்கிறார். இவர் மென்பொருள் பொறியாளர்.

கைநிறைய சம்பளத்துடன் வேலைவாய்ப்பு கிடைத்தும் அதை உதறித் தள்ளிவிட்டு தன் ஆழ்மனதில் உறங்கிக் கொண்டிருந்த சினிமா விருப்பத்தின்படி திரையுலகத்திற்கு வந்துள்ளார்.இவர் யாரிடமும் உதவி இயக்குநராக இல்லாததால் அனுபம் மிக்கவர்களைப் படக்குழுவாக்கி பலமான கூட்டணியாக அமைத்து, அந்தத் திறமைசாலிகளைப் பக்கபலமாக வைத்துக்கொண்டு இப்படத்தை உருவாக்கி இருக்கிறார். மனோ வெ.கண்ணதாசன் மேலும் பேசும்போது "ஒரு திரைப்படத்திற்கு முக்கியமாக இரண்டு விஷயங்கள் தேவை. ஒன்று நல்ல கதை. இன்னொன்று படக்குழு. அந்த படக்குழு மட்டும் சரியாக அமைந்து விட்டால் 70% படம் முடிந்ததுபோல் நம்பிக்கை வந்து விடும். அப்படி எனக்கு நல்ல திறமைசாலிகள் கொண்ட படக்குழு தேடினேன் அமைந்தது. இப்படத்தின் ஒளிப்பதிவாளர் பிரவின் பாலு, ஏராளமான குறும்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்து அனுபவம் பெற்றவர். இப்போது ஏ.ஜி.எஸ்ஸின் "நாய் சேகர்" படத்திற்கு அவர் தான் ஒளிப்பதிவாளர். இதற்கு இசையமைத்துள்ள ஜோன்ஸ் ரூபர்ட், ஹரிஷ் கல்யாண் நடித்த "பொறியாளன்" "மாயன்" போன்ற படங்களுக்கு இசையமைத்தவர். எடிட்டர் ராம்பாண்டியன் "ஆண்டவன் கட்டளை", "கிருமி" போன்ற படங்களில் உதவி எடிட்டராகப் பணியாற்றியவர். இப்படி அனுபவம் உள்ள பலம் வாய்ந்த படக்குழு அமைத்துக் கொண்டு இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறேன். படத்தில் நாயகியாக நடித்திருக்கும் அம்ருதா ஸ்ரீநிவாசன் அவர் நடித்த வெப்சீரிஸ் பார்த்து நான் அவரது திறமையை மிகுந்த திறமைசாலி என்று இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் தயாரிப்பில் உருவான "கள்ளச்சிரிப்பு" அறிந்திருந்தேன். மற்றும் ராஜேஷ் பாலச்சந்திரன், விக்னேஷ் சண்முகம், ஸ்ரீராஜ் உள்ளிட்டவர்களும் நடித்து இருக்கிறார்கள்.

பிடித்திருந்தால் மட்டும் நான் யாரிடமும் உதவி இயக்குநராக பணியாற்றிய அனுபவம் இல்லாதவன். அதனால் எனது திரைக்கதையை அமைத்துக்கொண்டு ஒவ்வொருவரிடமும் காட்டி பிடித்திருந்தால் மட்டும் பணியாற்றுங்கள் என்ற ரீதியில் தான் அனைவரையும் அணுகினேன். கதை மேல் ஏற்பட்ட நம்பிக்கை மட்டுமே அவர்களை பணியாற்றச் சம்மதித்து இந்த படம் உருவாகி இருக்கிறது. என்கிறார்.
"இறுதிப் பக்கம்" படத்தின் ட்ரெய்லரைப் பார்த்துப் பிடித்துப்போய் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் தனது ட்விட்டர் பக்கத்தில் இந்தப் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டு வாழ்த்தியுள்ளார். இதைத் தங்கள் உழைப்பிற்குக் கிடைத்த அங்கீகாரமாக எண்ணி நெகிழ்ந்து போய் உள்ளது படக்குழு. படத்தை ஆக்சன் ரியாக்சன் பிலிம்ஸ் சார்பில் ஜெனிஷ் வெளியிடுகிறார்.படம் இறுதிக்கட்டப் பணிகளில் தீவிரமாக உள்ளது. விரைவில் வெளியாகும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் தீபாவளி கொண்டாட்டம் பிரகாசிக்கவில்லை

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் கொரோனா தொற்று பரவல் காரணமாகவும் வியாழக்கிழமை (4) மன்னார் மாவட்டத்தில் தீபாவளி கொண்டாட்டங்களில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.

குறிப்பாக பொருட்கள் மற்றும் ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளமையினால் மக்கள் பொருட்களின் கொள்வனவு மற்றும் ஆடை கொள்வனவில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.




மேலும் தொடர்ச்சியாக மன்னாரில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற மையினால் இம்முறை தீப ஒளி திருநாள் கொண்டாட்டங்களில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.



அதே நேரம் கொரோனா தொற்று பரவல் காரணமாக ஆலயங்களில் சிறிய அளவிலான விசேட வழிபாடுகள் இடம்பெற்றதுடன் மக்கள் குறைந்த அளவிலேயே ஆலயங்களுக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# மட்டக்களப்பில் ஒரு திடீர் இராணுவ ஆக்கிரமிப்பு. பறவைகள் மீதும் அடக்குமுறையா?

## பறவைகள் சரணாலயத்திற்குள் திடீரென்று இராணுவ முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்தியில் உள்ள மாந்தீவு பறவைகள் சரணாலயத்திற்குள் புதிதாக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மாந்தீவு சரணாலயத்திற்குள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான தொழுநோய் வைத்தியசாலை மற்றும் முருகன் கோயில், கத்தோலிக்க தேவாலயம் உட்பட மதஸ்தளங்களும் காணப்படுகின்றன. அத்தோடு இலங்கையில் வரலாற்று ரீதியாக குறித்த பிரதேசம் பறவைகள் சரணாலயமாக உள்ளது.

இன் நிலையில் குறித்த பிரதேசத்தில் திடீரென இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை மாந்தீவு பிரதேசத்திற்குள் செய்தி சேகரிக்க



சென்ற ஊடகவியலாளர்களுக்கு அங்கு நின்ற இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளதோடு பாதுகாப்பு அமைச்சில் அனுமதி எடுத்து வருமாறு கோரியுள்ளனர்.

இதுவரை காலமும் சுகாதார அமைச்சுக்கு சொந்தமாக இருந்து வந்த மாந்தீவு பிரதேசம் எப்போது பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டது என்ற விடயம் யாருக்கும் தெரியாத நிலையில் அங்கு விமானப்படைக்கு சொந்தமான இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இது குறித்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டபோது குறித்த பிரதேசத்தில் விமானப்படைக்கு சொந்தமான தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்று தற்காலிகமாக இயங்கி வருவதாகவும் நிரந்தர இராணுவ முகாம் ஒன்றுக்கான அனுமதி கோரப்பட்ட போதும் அதற்கான எந்த உத்தியோக பூர்வ அனுமதியும் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுகாதார அமைச்சுக்கு சொந்தமான குறித்த பிரதேசத்தில் விமாப்படை முகாம் அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதனை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு மறுப்பு தெரிவித்து வந்த நிலையில் தற்போது குறித்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலி வடக்கு காணிகள் விடுவிக்கப்படும்: அமைச்சர் டக்ளஸ்

இலங்கை செய்திகள்
Sri Lanka News




வலி வடக்கில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உள்ளதாகவும் அவற்றை விடுவிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் காணிகளற்ற குடும்பங்களுக்கு அரச நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளுக்கான உறுதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற குறித்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர், "வலி வடக்கில் மக்களுடைய சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ள நிலையில் அது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியுடன் பேசினேன். அவர் படிப்படியாக விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது நிரந்தர நியமனம் கிடைக்காத வடக்கு சுகாதார தொண்டர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசினேன்.

சுகாதார தொண்டர்களின் நிரந்தர நியமனத்திற்கு தெரிவுவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகபாதிக்கப்பட்டவர்களினால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எனவே பாராபட்சமற்ற முறையில் வெளிப்படைத் தன்மையுடன் மீண்டும் நேர்முகத் தேர்வுகளை மீண்டும் நிரந்தர நியமனங்களை வழங்குவது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடினேன். அவர் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இவ்வாறு, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஒத்துழைப்புடன் மக்களுக்கு தேவையான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கத் தயாராக இருக்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற தீபாவளிப் பண்டிகை நிகழ்வு

நாட்டில் நிலவுகின்ற கோவிட்-19 தொற்றுப் பரம்பலைக் கவனத்திற்கொண்டு, அதற்குரிய நடைமுறைகளோடு கூடியதாக, இலங்கைத் பிரதமரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷ வாசஸ்தலமாகிய அலரி மாளிகையில், பிரதமர் தலைமையில், இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களோடு தீபாவளிப் பண்டிகை நிகழ்வு சிறப்புற நிகழ்ந்தேறியது.



சிறப்புமிகு இந்த நிகழ்வினை, இலங்கைத் திருநாட்டின் பிரதமரின் பாரியார், சிராந்தி ராஜபக்ச மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து, தீபாவளிப் பண்டிகை நிகழ்வினைக் கொண்டாடி மகிழும் வகையில் பிரதமர் மற்றும் அவரது பாரியார் இந்து சமய அறநெறிப் பாடசாலை சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கி வைக்கப்பட்டதுடன், நிகழ்வின் விசேட அம்சமாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால்,



இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சுபீட்சமானதொரு எதிர் காலம் நோக்கிய பயணத்திற்கு, துணை செய்யும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற புதிய பாடத்திட்ட நடைமுறைக்கு அமைவாக வெளிடப்பட்ட இந்து சமய அறநெறிக் கல்விப் பாடநூல்கள் மற்றும் செயல் நூல்கள் ஆகியன, இலங்கைத் திருநாட்டின் பிரதமரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமாகிய மகிந்த ராஜபக்ஷ அவர்களால் நிகழ்விலே கலந்துகொண்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# ஆண்டுகள் 20 ஆனாலும் தத்தளிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு பகுதி 2

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)



பல ஆண்டுகளாகத் தென் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் அவசர உணவாக அறியப்படுவது உப்புமா அல்லது கிச்சடி. இதை விரைவாகச் செய்யலாம். இதற்கு அடிப்படையானது கோதுமையிலிருந்து தயாரிக்கப்படும் ரவை. அத்துடன் வெங்காயம், தக்காளி மற்றும் பச்சைமிளகாய் (கொச்சிக்காய்) இருந்தால் சில நிமிடங்களில் சுடச்சுடச் சுவையான இந்த உணவைத் தயார் செய்துவிடலாம். இப்போது இந்தியா மட்டுமின்றி பிரிட்டன் உட்பட பல நாடுகளில் பிரபலமாகிவரும் கிச்சடி உப்புமாவின் ஒரு மேம்பட்ட பரிமாணமாகும். இரண்டிற்கும் இடையே பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. கிச்சடியில் வெங்காயம், தக்காளி, மிளகாய் ஆகியவற்றிற்கு அப்பால் நாம் விரும்பும் காய்களைச் சேர்க்க முடியும். உதாரணமாக கேரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு, பச்சைப் பட்டாணி, காலி.்.ப்ளவர், லீக்ஸ் போன்றவை அதற்குச் சுவை கூட்டும். வீட்டில் மீதமிருக்கும் அல்லது குறைந்த அளவில் வேறு வகையில் பயன்பாட்டிற்கு உதவாது என்று கருதப்படும் எந்த பச்சைக் காய்கறியும் அதில் சேரும்.

அதைச் செய்வது (உருவாக்குவது/தயாரிப்பது) சுலபம், பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருக்கும், சரியாகத் தயாரிக்கப்பட்டிருந்தால் சுவையாகவும் இருக்கும். ஆனால் சேர்க்கப்படும் பொருட்கள் சரியான வீதத்தில் இல்லாமல் இருந்தால் கிச்சடி சந்தோஷத்திற்கு பதிலாக சங்கடத்தை ஏற்படுத்தும். எனினும் இதற்கெல்லாம் அப்பாற்பட்டு கிச்சடிக்கு ஒரு சிறப்பு குணாம்சமும் உண்டு. அதாவது அந்த கலவையில் என்ன வேண்டுமானாலும் இருக்கலாம் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்ல வேண்டும் என்பதில்லை. சுருங்கச் சொன்னால் எது எதோடு வேண்டுமானாலும் சேர்ந்து கொள்ளும் ஒரு முறை சேர்ந்தது போல் மறுமுறை சேர வேண்டும் அல்லது சேர்க்கப்பட வேண்டும் என்பதில்லை. இதை அடிப்படையாக வைத்துத் தான் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு ஒரு குறுகிய நோக்கத்திற்காக உருவாக்கப்படும் அரசியல் கூட்டணியை "கிச்சடி" பொலிடிக்ஸ் என்று அழைக்கும் முறை இப்போது வழக்கத்தில் வந்துவிட்டது. கிச்சடிக் கூட்டணியில் கொள்கை என்பதற்கெல்லாம் இடமில்லை. அதில் ஒரே நோக்கம் வாக்கு வங்கி சிதறாமல் இருப்பது, மற்றும் எப்படியோ ஆட்சிக்கு வருவது ஆகியவை மட்டுமே. பெரிய கட்சிகள் விரும்பினால் சிறிய கட்சிகளை சேர்த்துக் கொள்ளும், தேவையில்லை என்று எண்ணும் போது அவற்றை கழற்றிவிடும்.




இந்த கிச்சடி இலக்கணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பொருந்தும். ஏன்- எப்படி ?.... அடிப்படையில் அதிலிருந்த/இருக்கும் கலவை...இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அக்டோபர் 2001 இல் நான்கு தமிழ்க் கட்சிகள், விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் - ஒரு கிச்சடி கூட்டணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற் அரசியல் கூட்டணி உருவாக்கப்பட்டது. அதில் அரசியல் ரீதியாக எதிரும் புதிருமாக இருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியோருடன் ஆயுதக் குழுவாக இருந்து அரசியல் கட்சியாக உருமாறிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி ஆர் எல் எ.்.ப்) மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) ஆகியவை இணைந்தன. இதில் ஆளுமை என்கிற வகையில் அதிகம் பலம் வாய்ந்ததாக உதய சூரியன் சின்னத்தைப் வைத்திருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் அதில் அங்கம் வகித்திருந்த இலங்கை தமிழரசுக் கட்சி ஆகியவையே இருந்தன. ஈபிஆர்எல்எ.்.ப் மற்றும் டெலோ அன்றும் சரி இன்றும் சரி பெயரளவிலேயே அரசியல் கட்சிகளாக அதில் இருந்தன, கூட்டணி பலத்திலேயே அவர்களின் அரசியல் தங்கியிருந்தது. அதாவது "கிச்சடி" பொலிட்டிக்ஸ், சிறிய கட்சிகள் தமது இருப்பிற்காகவும், பெரிய கட்சிகள் அவர்களின் வாக்கு வங்கியை தமது சுயலாபத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுதலும் ஜனநாயக அரசியலில் ஒரு கேலிக் கூத்து. உதாரணமாக இந்தியாவில் காங்கிரஸ் கட்சி கேரள மாநிலத்தில் இடதுசாரி மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டு ஆனால் மேற்கு வங்கத்தில் அவர்களுக்கு எதிரான நிலை போன்றவை இந்த "உப்புமா அரசியலை" எளிதாகப் புரிந்துகொள்ள உதவும்.

குறை பிரசவத்தில் பிறந்த குழந்தை போன்றே த தே கூவும் ஆரம்பம் முதலே தத்தளித்தது. அந்த கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் - அன்று முதல் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் சம்பந்தர், சைக்கிள் கட்சி என்றழைக்கப்படும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் நல்லையா குமரகுருபரன், டெலோ சார்பில் ஸ்ரீகாந்தா மற்றும் ஈபிஆர்எல்எ.்.ப்பின் கந்தையா (சுரேஷ்) பிரேமச்சந்திரன் ஆகியோர் கையெழுத்திட்டனர். கையெழுத்திட்ட நாலவரில் குமரகுருபரன் சைக்கிள் கட்சியிலிருந்து வெளியேறி மற்ற கட்சிகளுக்கு சென்றுவிட்டார். ஸ்ரீகாந்தாவும் டெலோவிலிருந்து விலகி வேறு கட்சிகளுக்கு சென்று தற்போது அரசியலில் இருந்து ஒதுங்கிய நிலையில் உள்ளார். சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ பி ஆர் எல் எ.்.ப் கட்சியும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிட்டது.

ஆகவே 2001 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது இல்லை என்பதே உண்மை மற்றும் யதார்த்தம். கூட்டமைப்பு இப்படி உடைந்து போனதற்குப் பல காரணங்கள் உள்ளன. காலவோட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் பல மாறுதல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் அழுத்தம் காரணமாக அந்த கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி வெளியேற்றப்பட்டார். பின்னர் அவர் நீதிமன்றம் சென்று அதில் வெற்றி பெற்றது தனிக்கதை. அதன் பிறகு கூட்டமைப்பின் பிரதான கட்சியாக இன்றுவரை இலங்கை தமிழரசுக் கட்சியே இருந்து வருகிறது. அக்கட்சியின் தலைவர் என்ற முறையில் சம்பந்தர் கூட்டமைப்பின் தலைவராகவும் இரண்டு தசாபத்தங்களாத் தொடருகிறார். கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக 2004 ஆம் ஆண்டு முதல் வீடு உள்ளது. அதற்கு முன்னர் அவர்கள் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர்.



தொடக்கத்திலிருந்த இரண்டு கட்சிகள் வெளியேறியதை அடுத்து புளாட் அமைப்பு கூட்டமைப்பில் இணைந்து கொண்டது. கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது அதற்கு விடுதலைப் புலிகளின் ஆதரவும் அதன் மூலம் கிடைக்கப்பெற்ற பலமும் போர் முடிந்த பிறகு மெல்ல மெல்லச் சரிய ஆரம்பித்தது. பத்மினி சிதம்பரநாதன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, அரியநேந்திரன் போன்ற பலரால் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக முடியவில்லை. ஆனாலும் வடக்கு-கிழக்குப் பகுதியிலிருந்து 2001, 2004, 2010, 2015 மற்றும் 2020 நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிகப்படியான இடங்களை வென்றது.

ஆனால் மாகாணசபைத் தேர்தல்களில் பார்த்தால், கூட்டமைப்பின் நிலை ஆரோக்கியமாக இல்லை என்பதை உணரக் கூடியதாக உள்ளது. கிழக்கில் போருக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து வந்த விநாயகமூர்த்தி முரளிதரனுடன் (கருணா) இருந்து பின்னர் அவருடன் முரண்பட்டு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றிய சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாண சபைக்கு 2008 ஆம் ஆண்டு முதல் முறையாக நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வென்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முதலமைச்சரானார். அதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் முதல் முதலமைச்சர் என்ற பெயரையும் அவர் பெற்றார். கிழக்கு மாகாணம் மூவின மக்களும் செறிந்து வாழும் பகுதி என்றாலும், அந்த தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்தது அல்லது அவ்வாறு செய்யுமாறு விடுதலைப் புலிகளால் அழுத்தம் கொடுக்கப்பட்டது. முக்கிய தமிழ்க் கட்சிகளின் கூட்டணியாக பார்க்கப்பட்ட த தே கூ இத்தேர்தலில் போட்டியிடாததால், கிழக்கில் சிவநேசதுரை சந்திரகாந்தன் "பிள்ளையான்" தலைமையிலான அரசு பதவியேற்று ஆட்சிக் காலத்தை நிறைவு செய்தது.



அத்தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடாமல் புறக்கணித்தது சரியல்ல, அது தவறான செயலாகும் என்ற விமர்சனம் இன்றளவும் உள்ளது. அதன் மூலம் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் பிரதான தமிழ்க் கூட்டணியாக இருக்க வேண்டும் என்று உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்றில் ஒரு இடத்ததை இழந்ததோடு மட்டுமின்றி தனது பலவீனத்தையும் வெளிப்படுத்தியது. அதன் பிறகு 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கூட்டமைப்பு பங்குபெற்றாலும் மூவின மக்கள் பெரும்பாலும் சரிசமமாக வாழும் கிழக்கு மாகாணத்தில் எதிர்கட்சியாக மட்டுமே வரமுடிந்தது. அடுத்து 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலும் அதற்கு பின்னர் நடைபெற்ற அரசியல் கூத்துகளும் உலமறிந்தது.

இன்றைய நிலையில் கூட்டமைப்பில் பிராதான கட்சியாக இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உட்கட்சி மோதல் தொடர்ந்து அதிகரித்து வருவதை மறுக்க முடியாது. அதற்கு பல காரணங்கள். இதில் நீறுபூத்த நெருப்பாக வடக்கு-கிழக்கு மோதலும், வடக்கிற்குள்ளேயே யாழ்ப்பாணம்-வன்னி மோதல், கிழக்கே மட்டக்களப்பு-திருகோணமலை மோதல் என்பது அனைவரும் அறிந்ததே. அதுமட்டுமின்றி கூட்டமைப்பிற்குள்ளே இருக்கும் கட்சிகளுக்கு இடையேயும் கடுமையான முரண்பாடுகள் உள்ளன. கூட்டமைப்பின் நிலைமை ஆரோக்கியமாக இல்லை என்பதற்கு அண்மைக் காலத்தில் மிகச் சிறந்த உதாரணம் கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு அவர்களுக்கு கிடைத்த ஒரு போனஸ் ஆசனத்தை யாருக்கு அளிப்பது என்பதில் எழுந்த சர்ச்சை. கடும் வார்த்தைப் பிரயோகங்கள், வெளிப்படையான ஏச்சுக்கள் ஆகியவற்றை அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்கள் கண்டனர். தேர்தலில் தோல்வியடைந்த மாவை சேனாதிராஜாவுக்கே அந்த ஆசனம் அளிக்கப்பட வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் குரல் கொடுக்க அது நிராகரிக்கப்பட்டு, கிழக்கே அப்பாறை மாவட்டத்திற்கான தமிழர் பிரதிநிதித்துவமாக தவராசா கலையரசனுக்கு அந்த இடம் அளிக்கப்பட்டது. மாவை அந்த ஆசனத்தைக் கோரியதில் நியாயம் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம், ஆனால் அந்தச் சம்பவம் கையாளப்பட்ட விதம் கூட்டமைப்பிற்குள் ஆழமான உரசல்கள் இருப்பதைக் காட்டியது. உரசல் விரிசலானது, அதை இன்றுவரை ஒட்டவைக்க முடியவில்லை.

கூட்டணி அல்லது கூட்டமைப்பு என்றால் அதிலுள்ள அனைவரும் சமமாக நடத்தப்பட்ட வேண்டும் என்பதே பொதுவான விதி அல்லது மரபு என்று சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் கூறினாலும், அவர்களுக்குச் செவிசாய்க்க சம்பந்தர் தயாராக இல்லை. இலங்கை தமிழரசுக் கட்சிக்கு இசைவாகச் செயல்பட்டால் கூட்டணியில் இருக்கலாம் அல்லது வெளியேறலாம் என்பதே அவரது நிலைப்பாடாகத் தோன்றுகிறது. மேலும் ஆயுதமேந்தியவர்களுக்கு கட்சியில் முக்கியப் பொறுப்புகள் ஏதும் அளிக்கப்படாது என்பதிலும் அதன் தலைவர் உறுதியாக இருந்தார். இதனால் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியேறி கடந்த தேர்தலில், கூட்டமைப்பால் முதலமைச்சராகப்பட்ட விக்னேஸ்வரனுடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்புக்கு எதிராகத் போட்டியிட்டு இருந்த வாக்கு வங்கி மற்றும் செல்வாக்கையும் இழந்தார்.

வடக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் கட்சியில் இரண்டாம் இடத்தில் இருப்பதாகக் கருதப்படும் மாவை சேனாதிராஜாவை ஓரங்கட்சி அரசியல் அனுபவமே இல்லாத ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் முதல்வராக நிறுத்தப்பட்டார். இதிலும் பிரச்சனை எழுந்தது. இந்த முன்னெடுப்பிற்கு கூட்டமைப்பிற்குள்ளே முழு ஆதரவு இருக்கவில்லை. ஆனால் தலைவர் சம்பந்தர் தான் எடுப்பதே முடிவு அதுவே இறுதியானது என்கிற வகையில் செயல்பட்டார் என்கிற விமர்சனத்திற்கு ஆளானார். பின்னர் விக்னேஸ்வரன் அவருடனேயே முரண்பட்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறி சுரேஷ் பிரேம்சச்சந்திரன் மற்றும் வேறு சிலருடன் இணைந்து புதுக்கட்சி ஆரம்பித்து, கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மீன் சின்னத்தில் போட்டியிட்டு அவர் மட்டுமே வென்றார். அவரது செயல்பாடுகளாலும் கூட்டமைப்பு மேலும் வலுவிழந்தது.

இப்படி இடியப்ப சிக்கலில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு எதிர்காலம் என ஒன்று உள்ளதா?..........தொடரும்......

# கீழடி தமிழர்களின் தொன்மையை கிமு 6 ஆம் நூற்றாண்டுக்கு பின்னோக்கி நகர்த்தியுள்ளது!

- கனடா நக்கீரன்

தமிழர்களுக்குப் பழம்பெருமை பேசுவதில் அலாதியான ஆசையிருக்கிறது. உலகில் தோன்றிய முதல் குரங்கு தமிழ்க் குரங்கு அது பேசிய மொழி தமிழ்மொழி என ஒரு சாரார் பழம்பெருமை பேசுகிறார்கள். இப்படி விவாதிப்பவர்கள் ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றிய "புறப்பொருள் வெண்பா மாலை' என்னும் நூலில் ஒரு பாடலை மேற்கோள் காட்டுகிறார்கள். இது தமிழ் இலக்கணம் கூறும் அகப்பொருள், புறப்பொருள் எனும் இரு பொருளிலக்கண வகைகளுள் புறப்பொருள் இலக்கணம் கூற எழுந்த நூலாகும்.



பொய்அகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்
வையகம்போர்த்த வயங்கு ஒலிநீர் - கையகலக்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்த குடி" - (பு. வெ. மாலை: சூத்திர விளக்க பாடல் 35)

இந்த உலகம் தோன்றிய காலத்தில், பூமியை மூடி ஆரவாரித்து ஒலி எழுப்பிய கடல் நீர் விலகிச் செல்ல மலை தோன்றி, மண்தோன்றாத அப்பழங்காலத்தே, வாளாண்மை என்னும் வீரத்துடன் எல்லாக் குடிகளுக்கும் முதலில் தோன்றிய மூத்தகுடி நம் குடி. அதனால் பொய் சொல்வோரின் பொய் நீங்கிப்போக, நம் குடி ஒவ்வொரு நாளும் புகழ் பெருகிச் சிறப்படைதலில் என்ன வியப்பு இருக்கின்றது? என்பதே இவ்வெண்பாவின் பொருளாகும். கல் என்றால் மலை என்று பொருள் கொள்ளப்படுகிறது. உயர்வு நவிர்ச்சி **(Hyberpola)** அல்லது புனைந்துரைத்தல் என்பது ஒன்றைப் பற்றி மிகவும் உயர்த்தி, அளவுக்கு மேல் மிகுத்துக் கூறுவது ஆகும்.

திருக்குறளில், குடிமை என்னும் அதிகாரத்தில் சொல்லபப்டும் சில கருத்துக்கள் தமிழ்க் குடிகளது பழமையைக் காட்டுகின்றன. திருக்குறள் கடைச் சங்க காலத்துக்குப் பிந்திய நூல். ஆனால், அது திருவள்ளுவர் காலத்துக்கும் முற்பட்டு வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தினரது வாழக்கை முறையைப் பிரதிபலிக்கிறது. எடுத்துக் காட்டாக குறள் 955 இல் "பழங்குடியினர்" வறுமைக் காலத்திலும் தம் குணத்திலிருந்துக் குறைய மாட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பழங்குடியினர் யார்?

இந்தக் குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் பழங்குடியினர் என்றால் தொன்று தொட்டு வரும் குடியில் பிறந்தவர்கள் என்கிறார். அப்படித் தொன்று தொட்டு வருதல் என்றால் என்ன? அதற்கும் ஒரு விளக்கம் தருகிறார் பரிமேலழகர். "சேர, சோழ, பாண்டியர் போல் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்கிறார். அதாவது சேர, சோழ, பாண்டியர் என்றாலே தொன்று தொட்டு வருபவர் என்று பொருளாகும். அவர்கள் மனிதப் படைப்புத் தொடங்கிய காலத்திலிருந்தே இருந்து வருபவர்கள். அவ்வாறு ஆதி நாளிலிருந்து வழி வழியாக இருந்து வரும் குடிகள் பழங்குடிகள் என்கிறார்.

தமிழ்மொழியும் தமிழர் பண்பாடும் பழமையானது என்பது உண்மைதான். ஆனால் பாபிலோனியர், சுமேரியர் (இன்றைய இராக், சிரியா), எகிப்தியர் போன்ற நாகரிங்களோடு ஒப்பிடும் போது எவ்வளவு பழமையானது என்பது கேள்வியாகும். எகிப்தியர்களின் பிரமிட் காலம் கிமு 2700 க்குப் பிறகு கட்டத் தொடங்கி கி மு 1700 வரை பிரமிடுகளைக் கட்டினர்.

இன்றைய தமிழகத்துக்குத் தெற்கே குமரிக் கண்டம் என்றொரு கண்டம் இருந்ததாகவும் இந்தக் கண்டம்தான் லெமூரியா கண்டம் என்றும் கூறி வருகிறார்கள். குமரிக்கண்டத்தை கடல் கொண்டுவிட்டதாகவும் அதன் அடியில் தமிழர்கள் கட்டிய கூட வானளாவிய கோபுரங்கள் அரண்மனைகள் புதையுண்டு கிடப்பதாக தமிழர்களில் ஒரு சாரார் கூறுகிறார்கள்!

பழந்தமிழ் நிலப்பரப்பை காலத்துக்குக் காலம் கடற்கோள்கள் தாக்கி அழித்திருக்கின்றன. முதல் கடற்கோள் முதல் தமிழ்ச் சங்கம் அமைத்த தென்மதுரையை இரையாக்கியது என்றும் இரண்டாவது கடற்கோள், நாகநன்னாட்டை காவு கொண்டது என்றும் மூன்றாவது கடற்கோள், இடைச்சங்கம் அமைத்த கபாடபுரத்தை விழுங்கியது என்றும் இப்படி ஓர் ஆழிப்பேரலையில்தான் குமரிக்கண்டம் எனப்படும் லெமூரியா கண்டம் கடலில் மூழ்கியது என்கிறார்கள்.

கடல்கொண்ட தென்னாடு என்பது பண்டைய பழந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக இருந்து கடலுக்குள் அமிழ்ந்து போனதாகக் கருதப்படும் ஒரு நிலப்பகுதியைக் குறிக்கிறது. இப்பகுதியில் 49 நாடுகள் இருந்ததாகவும், பிற்காலத்தில் ஏற்பட்ட கடல்கோளினால் இந்த 49 நாடுகளும் கடலினுள் அமிழ்ந்தாகவும் தமிழ் இலக்கியங்களில் இருந்து அறியப்படுகிறது. குறிப்பிடப்படும் 49 நாடுகள் என்பது இன்று நாம் நாடு என அழைக்கும் நாடுகள் என்ற பொருளில் அல்ல.

காலத்துக்குக் காலம் தமிழகத்தின் தென்பகுதியை கடல் கொண்டுள்ளது என்பது இலக்கியங்கள் மூலம் தெரிகிறது. கிபி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் இந்தச் செய்தியைச் சொல்கிறது.

வடிவே லெறிந்த வான்பகை பொறாது
ப.்.றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி ! (சிலப். 11:17-22)

ஆனால் லெமூரியா கண்டம் என்ற ஒன்று (தொடர்ச்சி 20ம் பக்கம்)

DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy



DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan

ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

# மீண்டும் கூடிக் கதைக்கவிருக்கும் தமிழ்க் கட்சிகள்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை உல்லாச விடுதியில் 7 கட்சிகள் கூடின. 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுப்பது அச்சந்திப்பில் நோக்கமாக இருந்தது. தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அதில் அழைக்கப்படவில்லை.தமிழரசுக் கட்சி அழைக்கப்பட்ட போதிலும் பங்குபற்றவில்லை. மனோ கணேசனும் ரவுப் ஹக்கீமும் சந்திப்புக்காக கொழும்பிலிருந்து வந்திருந்தார்கள். எனினும், எதிர்பார்த்தபடி ஒரு இறுதித்தீர்மானம் எடுக்கப்படவில்லை. தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு ஒரு தீர்மானத்தை எடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. இதுதொடர்பில் முடிவெடுப்பதற்கு தமிழரசுக்கட்சி கால அவகாசம் கேட்ட படியால் அக்கட்சியையும் இணைத்துக் கொண்டு இறுதி முடிவை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தியாவை நோக்கி எப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை முன்வைப்பது என்பது தொடர்பில் முடிவெடுப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதே சரி.

இச்சந்திப்பை ஒழுங்குபடுத்தியது டெலோ இயக்கம். நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இயக்கத்துக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்தன. இது காரணமாக அந்த இயக்கத்தின் பேரம் பேசும் சக்தி அதிகரித்திருப்பதாக தோன்றுகிறது. அந்த இயக்கத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தனது கட்சியின் உயர்ந்திருக்கும் பேரம் பேசும் சக்தியை சாத்தியமான வழிகளில் பிரயோகித்து தமிழ் அரசியலில் தமது கட்சியின் ஸ்தானத்தை மேலும் பலப்படுத்துவதற்காக உழைக்கும் ஒருவராகக் காணப்படுகிறார். டெலோவின் முயற்சியால் கடந்த ஏப்ரல் மாதத்திருந்து ஐந்து கட்சிகள் ஏதோ ஒரு ஒருங்கிணைப்பின் கீழ் செயற்பட்டு வருகின்றன. ஜெனிவா கூட்டத்தொடரின்போது அவை ஒரு கூட்டுக் கடிதத்தையும் அனுப்பியிருந்தன. அதன் அடுத்த கட்டமாக இந்தியாவை நோக்கி இப்படி ஒரு கோரிக்கையை முன்வைப்பது என்று மேற்படி கட்சிகள் தீர்மானித்தன.

மேற்படி சந்திப்புக்களில் சிலவற்றில் மாவை சேனாதிராஜா பங்குபற்றியிருக்கிறார். அவர் பொதுவாக சந்திப்புகளுக்கு எதிரானவராக காணப்படவில்லை. ஆனால் முடிவெடுக்கும் தருணங்களில் அவர் சம்பந்தரையும் சுமந்திரனையும் மீறிச்சிந்திக்க முடியாதவராக காணப்படுகிறார். அதனால் கடந்த ஜெனிவா கூட்டத்தொடரின் போது கடிதம் அனுப்பும் விவகாரத்தில் தமிழரசுக்கட்சி கூட்டுக்குள் இருந்து பின்வாங்கியது. இப்போதும் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கூட்டத்திலும் தமிழரசுக்கட்சி பங்குபற்றவில்லை. ஏனெனில் கூட்டமைப்புக்குள் உள்ள ஒப்பீட்டளவில் பெரிய கட்சி அது. மூத்த கட்சியும் அது. ஏனைய சிறிய கட்சிகளின் முயற்சிகளின் பின் செல்ல அது தயாரில்லை என்று தோன்றுகிறது. அதேசமயம் பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்புக்கு வெளியே இருக்கும் கட்சிகளோடு ஏன் ஒருவித ஒருங்கிணைப்பை நாடுகின்றன என்பதை குறித்து தமிழரசுக் கட்சி தன்னை சுய விசாரணை செய்து கொள்வதாகவும் தெரியவில்லை. கூட்டமைப்பு இப்போது இதயத்தால் ஒன்றிணைந்த ஒரு கூட்டாக இல்லை. அது தேவை கருதிய ஒரு கூட்டாகத்தான் இருக்கிறது. அதன் தலைவரான சம்பந்தர் பௌதிக ரீதியாக நடமாட முடியாத ஒருவராக மாறிவிட்டார். நடைமுறையில் சுமந்திரன்தான் செயற்படும் தலைவராக இருக்கிறார். கூட்டமைப்பின் செயற்படு தலைவராக மட்டுமல்ல தமிழரசுக் கட்சியின் முடிவுகளின் மீதும் செல்வாக்குச் செலுத்தும் ஒருவராக சுமந்திரன் காணப்படுகிறார். எனவே மேற்படி கட்சிகள் ஒன்றுகூடி இந்தியாவுக்கு ஒரு கோரிக்கையை முன் வைப்பது என்ற விடயத்தில் சுமந்திரனை தவிர்த்துவிட்டு சென்றிருக்க முடியாது. சுமந்திரனை ஏதோ ஒரு விதத்தில் உள்ளீர்த்தே அந்த முடிவை எடுத்திருக்க வேண்டும். ஆனால் சுமந்திரனை விலக்கிக்கொண்டு சம்பந்தனிடம் அதற்குரிய ஆதரவு கேட்கப்பட்ட பொழுது சுமந்திரன் நிலைமைகளை குழப்பிவிட்டார் என்று மேற்படி கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் இருக்கும் இந்தியத் தூதுவர் சம்பந்தரை அவருடைய இல்லத்தில் சென்று சந்தித்தார்.தீபாவளி பண்டிகையை ஒட்டிய ஒரு சந்திப்பு என்று கூறப்பட்ட போதிலும் கூட மேற்படி ஐந்து கட்சிகளின் ஒருங்கிணைந்த முயற்சியை நோக்கி அவரைத் தூண்டும் உள்நோக்கம் அந்த சந்திப்பில் இருந்து இருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. எனினும் சந்திப்புக்கு பின்னரும் தமிழரசுக்கட்சி கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த சந்திப்பில் பங்குபற்றவில்லை. அக்கட்சி தனக்கு கால அவகாசம் தேவை என்று கேட்டிருந்தது. அதன்படி அக்கட்சியின் கருத்தையும் பெற்றுக்கொண்டு ஒன்றிணைந்த ஒரு கோரிக்கையை முன் வைக்கலாம் என்று கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி சந்திப்புகளின் தொகுக்கப்பட்ட ஒரு சித்திரத்தை ஆராய்ந்தால் மிகத் தெளிவான சில விடைகள் கிடைக்கின்றன. முதலாவது கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளை சம்பந்தப்பட்ட கட்சிகளே செய்யுமாக இருந்தால் அதற்கு ஒரு வரையறை உண்டு. தேர்தல் நோக்கங்களைக் கொண்ட கட்சிகள் தங்களுக்கிடையே ஒரு பலமான ஐக்கியத்தை ஏற்படுத்த முடியுமென்றால் அது எப்பொழுதோ ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான ஓர் ஐக்கியம் ஏற்படாத ஒரு பின்னணியில்தான் தமிழ்தேசிய பரப்பில் மூன்று தரப்புகளை காணமுடிகிறது. இந்நிலையில் கட்சிகளாக விரும்பி ஒரு கூட்டை உருவாக்கக் கூடிய வாய்ப்புகள் பெருமளவு குறைவு என்பதே கடந்த 12 ஆண்டுகால அனுபவம் ஆகும். மாறாக பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் முயன்றால் அவ்வாறான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்யலாம் என்பது கடந்த ஆண்டுகளில் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு முழுவதிலும் குறிப்பாக கடந்த தேர்தல் முடிவுகளின் பின் கட்சிகள் தங்களுக்கிடையே சந்தித்து ஏதோ ஒரு புதிய ஒருங்கிணைப்புக்குப் போக முயற்சிக்கின்றன.ஆனால் அவர்களால் ஒரு பலமான ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியவில்லை என்பதுதான் நமக்கு கிடைக்கும் தெளிவான சித்திரம் ஆகும். இதன்படி கட்சிகள் அல்லாத் தேர்தல் உள்நோக்கங்கள் இல்லாத சிவில் சமூக முன்னெடுப்புக்களால்தான் மேற்படி கட்சிகளை ஏதோ ஒரு கூட்டுக்குள் கொண்டு வரலாம் என்பது மறுபடியும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைத்து தொடர்பில் கட்சிகள் மத்தியில் ஒத்த கருத்து இல்லை என்று தெரிகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த சந்திப்பின்போது இது தெளிவாக தெரிந்திருக்கிறது. விக்னேஸ்வரனின் கட்சி 13ஐ ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. அது முழுநிறைவான ஒரு கூட்டாட்சியை கேட்கிறது. ஆனால் 13ஐ தற்காலிகமான ஒரு தொடக்கமாக அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் போல் தெரிகிறது. இதே நிலைப்பாடு ஏனைய கட்சிகள் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. அடுத்த வாரம் தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு ஒரு பொது கோரிக்கையை தீர்மானிக்கும்போதும் இந்தப் பிரச்சினை மேலெழும். 13ஐ முழுமையாக அமல்படுத்துவது என்பதனை எந்த அடிப்படையில் ஒரு கோரிக்கையாக முன் வைப்பது என்பது.

இக்கோரிக்கை எங்கிருந்து வருகிறது? அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது கூட்டமைப்புடனான சந்திப்பில் ஒரு விடயத்தை சூசகமாக தெரிவித்ததாக தெரிகிறது. அதாவது தமிழ்த் தரப்பு ஒருமித்த குரலில் ஒரு கோரிக்கையை முன்வைக்கும் போதுதான் இந்தியா அது தொடர்பில் ஏதாவது தீர்மானத்தை எடுக்கலாம் என்று அவர் சூசகமாக தெரிவித்திருக்கிறார். அந்த அடிப்படையில்தான் இந்த 13 விவகாரம் கையில் எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இந்தியா கடந்த 34 ஆண்டுகளாக 13ஆவது திருத்தத்தைத்தான் ஒரு தீர்வாக முன்வைத்து வருகிறது. எனவே இந்தியாவை மீண்டும் தலையிட வைப்பதற்கு 13ஆவது திருத்தத்தை ஓர் ஊக்கியாக பயன்படுத்தலாம் என்று மேற்படி ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள் இருக்கும் சில கட்சிகள் கருதுவதாகத் தெரிகிறது.

இனப்பிரச்சினையில் இந்தியாவை மீண்டும் தலையிட வைப்பது, அல்லது இந்தியாவை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை முன் வைப்பது போன்ற அனைத்து விடயங்களும் நீண்டகால நோக்கில் தமிழ் மக்களின் வெளியுறவுக் கொள்கை சார்ந்த விவகாரங்கள் ஆகும். இதுதொடர்பில் கட்சி நிலைப்பாடுகளுக்கு அப்பால் முழுத் தமிழ்த் தரப்பும் ஒருமித்த ஒரு பொது கொள்கைக்குப் பொது அணுகுமுறைக்கு போகவேண்டும். ஆனால் 13வது திருத்தம் தொடர்பில் தமிழ் கட்சிகள் மத்தியில் ஒத்த கருத்து கிடையாது. அதேசமயம், இந்தியாவின் பிராந்திய நலன்களை குறிப்பாக புவிசார் நிலன்களை பாதுகாக்கவேண்டும் என்ற விடயத்தில் எல்லாத் தமிழ் கட்சிகளும் ஏறக்குறைய ஒரே நிலைப்பாட்டில் உள்ளன என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

பொதுவாக கடும்போக்காளர்கள் என்று கருதப்படும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது இந்த விடயத்தை மிகத்தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. இந்திய-இலங்கை உடன்படிக்கையை அக்கட்சி ஏற்றுக்கொள்கிறது. ஆனால் 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவின் பிராந்திய நலன்களை பாதுகாக்கும் விடயத்தில் அக்கட்சியானது இந்தியாவோடு ஒத்துழைக்கும் என்பதனை அக்கட்சியின் தலைவர் அழுத்தமாகக் கூறி வருக்கிறார். ஆனால் இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்காக ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனையும் அக்கட்சி தெளிவாக தெரிவித்துவிட்டது.

தமிழரசுக்கட்சி இந்திய இலங்கை உடன்படிக்கை எழுதப்பட்ட காலத்திலேயே 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அக்கட்சியானது இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு விரோதமான ஒரு கட்சி அல்ல. அக்கட்சியானது தனது வெளியுறவுக் கொள்கை இதுதான் என்பதனை தெளிவாக வரையறுத்து கூறாவிட்டாலும் கூட அதன் பல தசாப்தகால நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால் அது இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு பாதகமாக சிந்திக்கும் ஒரு கட்சி அல்ல.

மற்றது விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி. விக்னேஸ்வரன் அவருடைய நிலைப்பாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை.ஆனால் அதை தீர்வின் தொடக்கமாக ஏற்றுக் கொள்வதாக தெரிகிறது. அதே சமயம் இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு எதிராக அக்கட்சி எந்த ஒரு நிலைப்பாட்டையும் இதுவரையிலும் எடுக்கவில்லை.

எனவே தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் கட்சிகளில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் என்று பார்த்தால் அரங்கில் உள்ள பெரும்பாலான கட்சிகள் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு ஆதரவாகவே காணப்படுகின்றன. ஆனால் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்காக 13வது திருத்தத்தை ஒரு உச்சமான தீர்வாக ஏற்றுக் கொள்வதில் கட்சிகளுக்கிடையே கருத்து பேதங்கள் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களின் அடிப்படையில் கொழும்பின் மீது இந்தியா அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைப்பதில் மேற்படி கட்சிகள் மத்தியில் பெரியளவிற்கு முரண்பாடுகள் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் அவ்வாறு இந்தியாவை அழுத்தம் பிரயோகிக்க வைக்கத்தக்க ஒரு கோரிக்கையானது 13ஐ அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமா இல்லையா என்பதில்தான் கட்சிகளுக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் உண்டு.

எனவே இப்பொழுது ஒரு தெளிவான சித்திரம் கிடைக்கிறது. இந்த கட்சிகள் இந்தியாவை அணுகுவது தொடர்பிலும் இந்தியாவுக்கும் அப்பால் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், சீனா உள்ளிட்ட எல்லா வெளி அரசுகளையும் எவ்வாறு அணுகவேண்டும் என்பது தொடர்பிலும் ஒரு பொருத்தமான வெளியுறவுக் கொள்கை தமிழ் கட்சிகள் மத்தியில் கிடையாது.

இலங்கை இனப்பிரச்சனை என்பது சாராம்சத்தில் ஒரு புவிசார் அரசியல் பிரச்சினைதான். தமிழ் மக்கள் அனுபவிக்கும் எல்லா துயரங்களுக்கும் காரணம் அவர்களுடைய புவிசார் அமைவிடம்தான். எனவே ஒரு புவிசார் அரசியல் விவகாரத்தை அணுகுவது தொடர்பில் பொருத்தமான ஒரு வெளியுறவுக்கொள்கை வேண்டும்.

ஈழத் தமிழர்களின் புவிசார் அரசியல் என்பது இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான புவிசார் அருகாமையின்- புநழபசயா- யைட ிசழஓைஅவைல- அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தியாவை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை முன் வைப்பது, அல்லது இந்தியாவிடம் எதை எதிர்பார்ப்பது? அல்லது இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான நலன்சார் பொதுப் புள்ளிகளை கண்டு பிடிப்பது போன்ற அனைத்தும் ஈழத்தமிழர்களின் நீண்டகால அரசியல் நோக்கில் அவர்களுடைய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரங்கள் ஆகும்.

எனவே ஈழத் தமிழர்களுக்கு இப்பொழுது தேவையாக இருப்பது கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தேசமாக சிந்திக்கின்ற வெளியுறவுக் கொள்கைதான். அதை அமல்படுத்தத் தேவையான ஒரு வெளியுறவு பொதுக்கட்டமைப்புத்தான்.அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்குவது என்றால் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தலைவர்கள் உள்ளடங்களாக தாயகத்திலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் அக்கறையுள்ள எல்லோரும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். தமிழ் மக்கள் அரசியலை அரூபமாக சிந்திக்காமல் தூலமாக பிரயோக வடிவத்தில் சிந்திக்க வேண்டும். அதாவது கட்டமைப்புக்குள்ளால் சிந்திக்க வேண்டும். ஒரு பொதுவான வெளியுறவுக் கொள்கை ஒரு பொதுவான வெளியுறவு கட்டமைப்பு போன்றன இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் இந்தியாவை நோக்கி எப்படிப்பட்ட ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைப்பது என்பது தொடர்பில் தெளிவற்ற நிலைமை காணப்படுகிறது. எனவே இந்த இடத்தில் தமிழ் மக்கள் ஆழமாக சிந்திக்க வேண்டியது பொருத்தமான கட்டமைப்புகளை எப்படி உருவாக்கலாம் என்பதுதான்.

பொருத்தமான கட்டமைப்புகள் இருந்தால் எந்த ஒரு நெருக்கடிக்குள் இருந்தும் விடுபடலாம் என்பதற்கு ஸ்ரீலங்காவில் அண்மைக்கால உதாரணம் உண்டு. டெல்டா திரிபு வைரஸ் நாட்டின் கழுத்தை நெரித்தது. ஒருபுறம் பொருளாதார நெருக்கடி. இன்னொரு புறம் வைரஸ் நெருக்கடி. மூன்றாவதாக ராஜதந்திர நெருக்கடி. இந்த மூன்று நெருக்கடிகளையும் சமாளிப்பதற்கு அரசாங்கம் அதன் வெளியுறவு அணுகுமுறைகளில் சுதாகரித்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவற்றிற்குரிய கட்டமைப்புகளையும் நிபுணத்துவ அறிவையும் அவர்கள் பயன்படுத்தினார்கள். அந்த மாற்றங்களை முன்னெடுக்க கூடிய நபர்களை உரிய பதவிகளில் நியமித்தார்கள். அதன் விளைவாக அண்மை மாதங்களில் அரசாங்கம் அதன் வெளியுறவு அணுகுமுறைகளில் ஒப்பீட்டளவில் மாற்றங்களை காட்டியிருக்கிறது.

அவர்கள் ஒரு அரசுடைய தரப்பு. அவர்களிடம் எல்லாவற்றுக்கும் கட்டமைப்புக்கள் உண்டு. ஆனால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களிடம் உரிய பொருத்தமான வெளியுறவுக் கொள்கையும் கிடையாதுவெளியுறவுக் கட்டமைப்பும் கிடையாது. இதுதான் பிரச்சினை.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் தந்தையை தாக்கிய இளைஞனை கொலை செய்த மகன்!



பத்தேகம நாகொடை வீதியின் பழைய பஸ் நிறுத்தத்திற்கு அருகில் உணவகம் ஒன்றுக்கு முன்னால் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். 26 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் வீட்டுக்கு சென்று மன்னா கத்தி ஒன்றை எடுத்து வந்து உணவக உரிமையாளரை தாக்கியுள்ள நிலையில் உணவக உரிமையாளரின் மகன் உலக்கை ஒன்றில் குறித்த இளைஞனை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த தாக்குதல் சம்பவம் விற்பனை நிலையத்தில் அமைந்துள்ள சிசிரிவி கெமராவில் பதிவாகி உள்ளது.

சம்பவம் தொடர்பில் பத்தேகம, கொட கொட பிரதேசத்தை சேர்ந்த உணவக உரிமையாளரின் 25 வயதுடைய மகன் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# "ஒரே நாடு ஒரே சட்டம்" செயலணியின் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கத்தோலிக்க ஆயர்கள் கோரிக்கை

CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

"ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற செயலணியின் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக குறித்த பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டரீதியாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்படாமல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியினால், "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற நோக்கத்தை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இல்லாது போயுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டவரின் கடந்த காலங்களை கருத்திற்கொள்ளாமல், தமிழ், ஹிந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்காமை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதால் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனவே, இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அந்த அறிக்கையூடாக கோரிக்கை விடுத்துள்ளது.

# இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட சேதன பசளை உற்பத்திகள் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு அறிமுகம்!



நச்சுத் தன்மையற்ற இயற்கை வழியில் இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட சேதன பசளை உற்பத்திகள் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

புதன்கிழமை மதியம் 1.30 மணிக்கு பலாலியில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாதுகாப்பு படைகளின் பிரதானியும் ராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவினால் சேதன பசளை உற்பத்திகள், கூட்டெருக்கள், இலைக் கரைசல்கள் என்பன சம்பிரதாயபூர்வமாக விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கையின் விவசாயத்திலே முழுமையாக சேதனப் பசளையினை உபயோகப்படுத்த வேண்டும் என்ற ஜனாதிபதியின் நோக்கத்திற்கமைவாக இராணுவத்தினரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளே இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி ஜகத் கொடித்துவக்கு, யாழ் மாவட்ட விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள் உட்பட பல உயர் இராணுவ அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

# மன்னாரில் கேரள கஞ்சா பொதியுடன் பாடசாலை மாணவன் கைது



மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் மூர்வீதி பகுதியில் ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை தன் வசம் வைத்திருந்த 17 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் செவ்வாய்க்கிழமை (2) மாலை மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த குறித்த 17 வயது பாடசாலை மாணவனிடம் இருந்து 4 கிலோ 700 கிராம் கேரள கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ளவீரசிங்கவின் பணிப்பில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டார மற்றும் மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு தற்காலிக பொறுப்பதிகாரி சி.ஐ.மணலகுமார, உப பொலிஸ் பரிசோதகர் ராமநாயக்க உப பொலிஸ் பரிசோதகர் வணசிங்க தலைமையிலான குழுவினர் மேற்பட்ட கஞ்சா பொதியை கைப்பற்றியதோடு, குறித்த மாணவனையும் கைது செய்துள்ளனர்.

மேற்படி கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் சந்தேக நபர் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதே வேளை இராணுவ புலனாய்வு பிரிவினரின் இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கடந்த திங்கட்கிழமை மதியம் மன்னார் தள்ளாடி சந்தியில் வைத்து 1 கிலோ 665 கிராம், கேரள கஞ்சா போதைப்பொருளை தம்வசம், வைத்திருந்த மற்றும் கொண்டு சென்ற குற்றத்தில் புத்தளத்தில் வசிக்கும் 46 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் பிரதான பாலத்தடி யில் சோதனை நடவடிக்கை என்ற போர்வையில் மக்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் இராணுவத்தினர்



மன்னார் பிரதான பாலத்தடி யில் அமைந்துள்ள இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொள்ளும் சோதனை சாவடியில் சோதனை என்ற பெயரில் தொடர்ச்சியாக மக்களை இராணுவத்தினர் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் இருந்து போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் நோக்குடன் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்து மன்னார் பிரதான பாலத்தடி யில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து மன்னாரில் இருந்து வெளி இடங்களுக்கு செல்பவர்களும், வெளி இடங்களில் இருந்து மன்னாரிற்கு வருகின்றவர்களும் குறித்த சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினர் பலத்த சோதனைகளை மேற்கொள்கின்றனர். குறிப்பாக வாகனங்கள் மற்றும் உடமைகள் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

மேலும் சிறு வியாபார நடவடிக்கைகள், மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், குறித்த சோதனை நடவடிக்கை காரணமாக பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

தற்போதைய சூழலில் போதைப் பொருள் கடத்தல் பல்வேறு வகையில் பாதுகாப்பான முறையில் இடம் பெற்று வருகின்ற நிலையில் அன்றாட தொழில் நடவடிக்கைகு என மன்னார் வருகை தரும் மக்கள், கர்ப்பிணி தாய்மார்கள் என அனைவரும் பாரபட்சம் இன்றி சோதிக்கப்படுவது மன்னார் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அதே நேரம் மழை காரணமாக குறித்த சோதனை சாவடி பகுதி முழுவதும் மழை நீர் தேங்கிய நிலையில் காணப்படுகின்றது.

எனினும் மக்களையும் வாகனங்களையும் மழை நீர் மற்றும் சேற்றுக்குள் இறக்கி கடுமையாக சோதனை மேற்கொள்ளப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னாரில் இருந்து வியாபார நடவடிக்கை களுக்காக வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்ற சகல பொருட்களும் குறித்த சோதனைச் சாவடி பகுதியில் இராணுவத்தினரால் இறக்கப்பட்டு சோதனைகளுக்கு பின்னர் மீண்டும் ஏற்றப்படுகின்றது.

எனவே குறித்த சோதனை சாவடியில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்காத வகையில் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அப்பகுதியில் உள்ள சோதனைச் சாவடியை அகற்றி அல்லது வேறு பகுதிக்கு மாற்றி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**





# தீபாவளியை கொண்டாட ரயில், பேருந்துகளில் புறப்பட்டனர்: 6 லட்சம் பேர் சொந்த ஊர் பயணம்



தீபாவளி பண்டிகையை சொந்த ஊரில் கொண்டாட தமிழகத்தின் முக்கிய நகரங்களில் இருந்து லட்சக்கணக் கானோர் புறப்பட்டுச் சென்றனர். சென்னையில் இருந்து மட்டும் 6 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளனர். கனமழையையும் பொருட்படுத்தாது ஏராளமான பொதுமக்கள் கடைகளில் குவிந்தனர்.தமிழகத்தில் தீபாவளிப் பண்டிகை இன்று (4ம் தேதி) கொண்டாடப்படுகிறது. கடந்த ஒரு வாரமாகவே தீபாவளி விற்பனை களை கட்டியிருந்தது. புத்தாடை, ஆபரணங்கள், இனிப்புகள், பட்டாசுகள் வாங்குவதில் மக்கள் ஆர்வமாக இருந்தனர். இதனால், வர்த்தகப் பகுதிகளிலும் கடைகளிலும் கூட்டம் அலைமோதியது. சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட மாநகரப் பகுதிகளில் ஒருவாரமாக பெய்த கனமழையையும் பொருட்படுத்தாமல் துணிக் கடைகளில் மக்கள் குவிந்தனர்.

தீபாவளிக்கு முந்தைய நாளான நேற்றும் துணி, பட்டாசு, இனிப்பு கடைகளில் இறுதிகட்ட விற்பனை அனல் பறந்தது. சென்னையில் வண்ணாரப்பேட்டை, புரசைவாக்கம், தி.நகர், திருவல்லிக்கேணி, ராயப்பேட்டை, அடையாறு, பள்ளிக்கரணை, புறநகர் பகுதிகளான போரூர், குரோம்பேட்டை, தாம்பரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் குவிந் திருந்தனர்.தீவுத் திடலில் நடந்து வரும் பட்டாசு சந்தையிலும் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. குழந்தைகளையும் அழைத்து வந்து, அவர்களின் விருப்பத்தைக் கேட்டு பெற்றோர்கள் பட்டாசு வாங்கிக் கொடுத்தனர்.சென்னை உள்ளிட்ட பல்வேறு மாநகரப் பகுதிகளில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் கரோனா பரவல் தடுப்பு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு இருந்தன. அக்குழுக்கள், கூட்டம் அதிகமான இடங்கள், கடைகளில் சமூக இடைவெளியை கடைபிடிக்குமாறும், முகக் கவசம் அணியுமாறும் மக்களை அறிவுறுத்தினர். முகக் கவசம் அணியாதவர்களுக்கு தலா ரூ.200 அபராதம் விதித்தனர். கரோனா வழிகாட்டு முறைகளை கடைபிடிக்காத பல கடைகளுக்கு எச்சரிக்கையும் விடப்பட்டது.

மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் காவல்துறை சார்பில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு திருட்டு செயல்களில் யாரேனும் ஈடுபடுகின்றனரா என கண்காணித்தனர்.கல்வி, வேலை தொடர்பாக நகரப் பகுதிகளில் வசிப்பவர்கள், தீபாவளியை தங்கள் சொந்த ஊரில் கொண்டாடுவதற்காக புறப்பட்டு சென்ற வண்ணம் இருந்தனர். நீண்ட நாட்களுக்கு முன்பே ரயில், பேருந்துகளில் பயணிக்க முன்பதிவு செய்திருந்தனர். சென்னை, கோவை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் வசிக்கும் மக்கள் கடந்த 1ம் தேதி முதலே சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு சென்ற வண்ணம் இருந்தனர். முக்கிய நகரங்களில் இருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டன.

சொந்த ஊர்களுக்கு செல்வோருக்கு வசதியாக சென்னையில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கடந்த 3 நாட்களாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டன. சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2 ஆயிரம் பேருந்துகளுடன் தேவைக்கு ஏற்றார்போல் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டன.கூட்ட நெரிசலை குறைக்க கோயம்பேடு, பூந்தமல்லி, மாதவரம், கே.கே.நகர், தாம்பரம் ஆகிய பேருந்து நிலையங்களில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு பேருந்துகள் பிரித்து இயக்கப்பட்டன. பயணிகளின் வருகைக்கு ஏற்ப பேருந்துகள் வரிசையாக இயக்கப்பட்டன. பயணிகள் அதிகமாக செல்லும் வழித்தடங்களை தேர்வு செய்து, கூடுதல் பேருந்துகளை இயக்க போக்குவரத்து அலுவலர்கள் ஏற்பாடு செய்தனர். சென்னையில் இருந்து கடந்த 3 நாட்களில் மட்டும் 3,500 சிறப்பு பேருந்துகளையும் சேர்த்து மொத்தம் 9,800 அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டன. நேற்று நள்ளிரவை தாண்டியும் விடிய, விடிய பேருந்துகள் இயக்கப்பட்டன.

சென்னையில் இருந்து அரசுப் பேருந்துகளில் மட்டும் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் பயணம் செய்துள்ளனர்.சென்னையில் கோயம்பேடு, தி.நகர், பெருங்களத்தூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து வெளியூர்களுக்கு ஆம்னி பேருந்துகள் இயக்கப்பட்டன. அவற்றிலும் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது. இதுமட்டுமின்றி, பலர் தங்கள் சொந்த வாகனங்களிலும் புறப்பட்டு சென்றனர். இதனால், சில இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.அதேபோல ரயில்களிலும் நேற்று கூட்டம் அலைமோதியது. சென்னை சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் ரயில் நிலையங்களில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது. ஒரு சில விரைவு ரயில்களில் மட்டுமே முன்பதிவு இல்லாத பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தன.

சென்னையில் இருந்து ரயில்கள் மூலம் சுமார் 70 ஆயிரம் பேர் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்துள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையை சொந்த ஊர்களில் கொண்டாட சென்னையில் இருந்து மட்டும் சுமார் 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சென்றுள்ளனர்.சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் பண்டிகை முடிந்து மீண்டும் திரும்புவதற்கு வசதியாக போதிய அளவில் சிறப்புப் பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவிலேயே முதல் முறை: தமிழகக் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு சர்வதேச தரச்சான்று

தமிழ்நாடு காவல்துறையின் மாநிலக் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு வழங்கப்பட்ட ISO 27001:2013 சர்வதேச தரச்சான்றைத் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காவல்துறை தலைமை இயக்குநருக்கு வழங்கினார்.இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

''தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (3.11.2021) தலைமைச் செயலகத்தில், சென்னை எழும்பூரில் அமைந்துள்ள மாநிலக் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு British Standards Institution வழங்கிய மிஷிஸி 27001:2013 சர்வதேச தரச்சான்றைக் காவல்துறை தலைமை இயக்குநர் செ.சைலேந்திர பாபுவிடம் வழங்கினார்.சென்னை எழும்பூரில் அமைந்துள்ள மாநிலக் காவல் கட்டுப்பாட்டு அறையில், அவசர கால உதவி எண்கள் 100, 112 மற்றும் 101 அழைப்புகள் கையாளப்படுகின்றன. இது நவீன ஒருங்கிணைந்த தரவுத் தளம் மற்றும் இதர தொழில்நுட்பக் கட்டமைப்புகளுடன் நிறுவப்பட்டுள்ளது. இந்த நவீன ஒருங்கிணைந்த தரவுத் தளத்தில் இதுநாள் வரையில் 1.12 கோடி அவசர கால அழைப்பு விவரங்கள் மற்றும் 14.5 லட்சம் 'காவலன்' செயலி பயன்படுத்துவோரின் தகவல்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நவீன ஒருங்கிணைந்த தரவுத் தளத்தின் தகவல்கள் பாதுகாப்பு அமைப்பிற்கு British Standards Institutionனால் ISO 27001:2013 சர்வதேச தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. இச்சான்றானது, இந்தியாவிலேயே முதல் முறையாகத் தமிழ்நாடு காவல்துறையின் மாநிலக் காவல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாட்டிற்குப் பெறப்படுகிறது என்பது குதமிழகத்தில் இலங்கை தமிழர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.வேலூர் அடுத்த மேல்மொணா வூரில் இலங்கை தமிழர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் தொடக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக பங்கேற்று புதிய திட்டங்களை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.




இந்த நிகழ்ச்சிக்கு சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமை தாங்கி பேசும்போது, ''திமுக அரசு பொறுப்பேற்றதும் இலங்கை தமிழர் முகாம்களை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க முதல்வர் உத்தரவிட்டார்.அதன்பேரில் இந்த திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் அறிவித்ததுடன் தொடக்க விழா நிகழ்ச்சியை நான் வேலூரில் தொடங்கி வைக்கிறேன் என்றார்.அதேபோல், வெளிநாடு வாழ் தமிழர் நலனுக்கான குழு அமைத்து பேசி வருகிறோம். இதில், 120 நாடுகளில் வசிக்கும் தமிழர் பிரதிநிதிகள் பங்கேற்று பேசும்போது, முதல்வர் மீது அவ்வளவு நம்பிக்கையுடன் பேசுகிறார்கள். வெளிநாடு வாழ் தமிழர்கள் பலர் இங்குள்ள கிராமங் களை தத்தெடுக்க ஆர்வமுடன் உள்ளனர்'' என்றார்.

நி க ழ் ச் சி யி ல் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் முன்னிலை வகித்து பேசும்போது, ''பெரும் திட்டங்களை தீட்டுவது, கோடிக்கணக்கில் செலவு செய்வது, விவசாயிகள், வியாபாரிகளை பார்ப்பது என்று மட்டுமில்லாமல் வாழ்க்கையின் ஓரத்தில் ஒதுக் கப்பட்டு வறுமையால் வாடி, நிற்பதற்கு இடமில்லாமல் ஒழுகு கின்ற வீட்டுக்குள் வாழ்பவர்களை தேடித்தேடி கண்டுபிடித்து அவர்களுக்கு முதல்வர் உதவி செய்கிறார்.

நம்முடைய தொப்புள் கொடி உறவு, நம்முடைய ரத்தத்தின் ரத்தம், தமிழன் என்ற உணர்வோடு எல்லா சிறப்பையும் பெற்று இலங்கை தீவில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்கள் இன்று நாடற்ற வர்களாக, உயிரற்றவர்களாக, உறவுகள், சொத்துக்களையும் சுகத்தையும் இழந்து உயிரை கையில் பிடித்துக் கொண்டு இந்த தமிழ் மண்ணுக்கு வந்த நேரத்தில் அவர்களுக்காக போராடியவர் கருணாநிதி. ஆனால், இன்றைக்கு அகதிகள் என்ற பெயரை இலங்கை தமிழர்கள் என்று பெயர் சூட்டி முதல்வர் ஸ்டாலின் பெருமை படுத்துகிறார்.

எங்களுக்கு இங்கு ஓட்டுரிமை இல்லை, குடும்ப அட்டை இல்லை, இருக்க வீடில்லை எங்களை யார்? காப்பாற்றுவார்கள் என ஏங்கிக்கிடந்தவர்களின் இதயத்தை வருடி நான் இருக்கிறேன் என்று முன் வந்துள்ளார் முதல்வர். அவர்கள் முதல்வரை முதல்வராக பார்க்காமல் கடவுளாக பார்க் கிறார்கள். இலங்கை தமிழர் களுக்கு இங்கு எல்லா உரிமையும் இருக்கிறது'' என்று தெரிவித்தார். றிப்பிடத்தக்கது.இந்த நிகழ்ச்சியில், உள்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சைபர் கிரைம்) அமரேஷ் புஜாரி, காவல்துறை கூடுதல் இயக்குநர் (தொழில்நுட்ப சேவை) வினித் தேவ் வான்கடே, காவல்துறை துணைத் தலைவர் (தொழில்நுட்ப சேவை) எஸ்.மல்லிகா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்''. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# ஒன்றாரியோ மாகாண சட்ட சபையின் உறுப்பினர் விஜேய் தணிகாசலத்தின் தொகுதி அலுவலகத்தில் அவரைச் சந்தித்த உதயன் பிரதம ஆசிரியர்

கனடிய செய்திகள்
Canadian News



கனடாவில் தமிழ் மக்கள் அதிகளவில் வாழ்ந்து வருவதும். அதிக சனத் தொகையைக் கொண்டதுமான ஒன்றாரியோ மாகாணத்தின் சட்ட சபையில் தெரிவு செய்யப்பெற்ற உறுப்பினரும் மாகாண போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான விஜேய் தணிகாசலத்தின் தொகுதி அலுவலகத்தில் உதயன் பிரதம ஆசிரியர். அவரைச் சந்தித்து உரையாடினார்.

அப்போது உதயன் பிரதம ஆசிரியர் விஜேய் தணிகாசலம் அவர்களுக்கு உதயன் வெளளிவிழா ஞாபகார்த்த அன்பளிப்பையும் உதயன் வெள்ளிவிழா சிறப்பு மலரின் பிரதியொன்றையும் வழங்கினார்.


பின்னர் விஜேய் தணிகாசலம் அவர்கள் ஒன்றாரியோ அரசு சார்பான பாராட்டுச் சான்றிதழை வழங்கி உதயன் பிரதம ஆசிரியருக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.



தொடர்ந்து சில நிமிடங்கள் இருவரும் உரையாடினர். அதன்போது. உதயன் பிரதம ஆசிரியர். ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்னர். விஜேய் தணிகாசலம் அவர்கள் சமர்ப்பித்து அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட “தமிழ் இனப்படுகொலை தொடர்பான கல்வி வாரம்” மசோதாவிற்காக அவருக்கு மீண்டும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன். உதயன் வெள்ளிவிழாச் சிறப்பிதழின் பக்கங்களில் உள்ள விடயதானங்களை அவரிடம் காண்பித்தார்.

# நினைவஞ்சலிக் கூட்டம்



## அமரர் திரு. சபா அருள்சுப்பிரமணியம் ஆ.யு.

கனடாத் தொல்காப்பிய மன்றத்தின் தலைவராக விளங்கிய அமரர். சபா அருள்சுப்பிரமணியம் அவர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் நவம்பர் மாதம் 08 ஆம் திகதி (08/11/2021 திங்கட்கிழமை) மாலை 7.00 தொடக்கம் 9.00 வரை சூம் (ZOOM) இணையச் செயலியூடாக இடம்பெற இருக்கின்றது.

இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில இணைந்து கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**விடயம்:** அமரர். சபா அருள்சுப்பிரமணியம் அவர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம்
**காலம்:** நவம்பர் 08, 2021 (திங்கட்கிழமை)
**நேரம்:** மாலை 07:00 தொடக்கம் 9.00 வரை (ரொறன்ரோ நேரம்)

Join Zoom Meeting:
https://us02web.zoom.us/j/88957344122?pwd=US85MkN0WENSUnljN2lWYUwzRkNXZz09

Meeting ID: 889 5734 4122
Passcode: arul

இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு அமரர் திரு. சபா அருள்சுப்பிரமணியம் அவர்கள் தொடர்பான நினைவுரைகளை ஆற்ற விரும்புவர்கள் கீழே தரப்பட்டுள்ள எமது செயற்குழு உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

**கிரு. சி. சண்முகராஜா: (416) 939-9171**
**திரு. வ. சுகந்தன்: (647) 850-0152**



# தமிழகத்தின் மிகமூத்த பஞ்சாயத்துத் தலைவியா, அல்லது மிகஇளைய பஞ்சாயத்துத் தலைவியா தங்கள் பணியில் சிறக்கப்போகிறார்கள்?

குரு அரவிந்தன்



சிவந்திபட்டி பெருமாத்தாள்



சாருகலா

ஒரு காலத்தில் வீட்டுக்குள் அடைந்து கிடந்த பெண்கள் இன்று ஒவ்வொரு துறையிலும் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள் என்பதற்குத் தமிழகத்தில் கிராமிய மட்டத்தில் நடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இலங்கையில்கூட இதுபோ-லப் பெண்கள் ஒருபோதும் தேர்தல் களத்தில் ஈடுபட்டதில்லை. சமீபத்தில் தமிழகம் முழுவதும் குறிப்பாக, ஒன்பது மாவட்டங்களுக்கான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய இடங்களுக்கு ஊரக உள்ளாட்சித் தேர்தல் இடம் பெற்றது. இதில் மாவட்ட ஊராட்சி வட்டார உறுப்பினருக்கான 140 இடங்கள், 74 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றிய வட்டார உறுப்பினருக்கான 1381 இடங்கள், கிராம ஊராட்சித் தலைவருக்கான 2901 இடங்கள், கிராம வட்டார உறுப்பினருக்கான 22,581 இடங்களுக்கு என்று மொத்தம் 27,003 இடங்களுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டது. மொத்தம் 79,433 பேர் இந்தத் தேர்தலில் போட்டியிட்டனர். இவற்றில் இரண்டு கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கும், 21 கிராம ஊராட்சி வட்டார உறுப்பினர் பதவிக்கும் யாரும் போட்டிபோட முன்வராததால் அங்கு தேர்தல் நடைபெறவில்லை.

இத்தேர்தலின் போது, 204 பஞ்சாயத்துத் தலைவர்களுக்கான போட்டியும் இடம் பெற்றது. நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் முக்கியமாக இரண்டு தேர்தல் தொகுதிகள் மக்களின் கவனத்தைக் கவர்ந்திருந்தன. பெண்களுக்கு முதலிடம் தந்த இந்தத் தொகுதிகளில் வய-தில் கூடிய முதிய பெண்மணி ஒருவரும் வய-தில் மிகக்குறைந்த இளம் பெண்மணி ஒருவரும் பஞ்சாயத்துத் தலைவர்களாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதுதான் பலரின் கவனத்தையும் கவர்ந்தன. மக்களுக்காகச் சேவையாற்ற ஆண், பெண் என்ற பாகுபாடோ அல்லது வயதோ ஒருபோதும் தடையாக இருந்ததில்லை. ஆனா-லும் இவர்களுக்குத் தேவையான பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய கடமை நகர்பாதுகாவலருக்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிவந்திப்பட்டி என்னும் கிராமத்தின் ஊராட்சி மன்ற தலைவராக தொண்ணூறு வயது மூதாட்டி பெருமாத்தாள் என்பவர் வெற்றிபெற்றிருந்தார். இந்த வெற்றியின் மூலம் தமிழ்நாட்டின் மிகமூத்த பஞ்சாயத்து தலை-வி என்ற சாதனையை இவர் படைத்திருக்கின்றார். மொத்தமாகப் பதிவான வாக்குகள் 2060 இல் இவருக்கு 1568 வாக்குகள் கிடைத்திருந்தன. ஏழு பரம்பரையாக இவர்களின் குடும்பத்தினர் பஞ்சாயத்து சபையில் இடம் பெற்றிருப்பதாகத் தெரிவித்த அவர், தனது ஊரான சிவந்திப்பட்டி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை முடிந்தளவு செய்து கொடுக்கப் போவதாகவும் உறுதி அளித்திருக்கின்றார்.

தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வெங்கடாம்பட்டி ஊராட்சி பகுதியில் தற்பொழுது கோவையில் முதுநிலை பெறியியல் பட்டப்படிப்பு படித்து வரும், லட்சுமியூரைச் சேர்ந்த 21 வயதான சாருகலா என்ற இளம் பெண்மணி சுயேட்சையாகப் போட்டியிட்டார். 90 வயது மூதாட்டி அங்கே வெற்றி பெற்றுப் பஞ்சாயத்துத் தலைவராகப் பாதவி ஏற்க, இங்கே 21 வயதான, மிகவும் குறைந்த வயதான பெண்மணி வெற்றி பெற்றுப் பஞ்சாயத்துத் தலைவராகப் பதவி ஏற்றிருக்கிறார். இந்தத் தேர்தலில் 3336 வாக்குகள் பெற்ற சாருகலா 796 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கடந்த 15 வருடகாலமாக ஒருவரே ஆட்சிப் பதவியில் இருந்ததை இதன் மூலம் இவர் தகர்த்திருக்கின்றார். முதலில் தனது வட்டாரத்தில் இருக்கும் 23 கிராமங்களுக்கும் குடிநீர் வசதி-யை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் தனது முதலா-வது பணி என்று அவர் குறிப்பிட்டார். மேலும் அரச உதவியோடு அங்குள்ள மாணவர்களுக்கு உயர் கல்வி பெற்றுக் கொடுப்பதும் இவரது லட்சியமாகும். இவரது தகப்பனார் ஒரு விவசா-யி, தாயார் பூலாங்குளத்தில் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார்.

முக்கியமான அரசியல் கட்சிகளான திமுக, பாரதிய ஜனதா, அமமுக போன்ற கட்சி வேட்பாளர்களுடன் போட்டிபோட்டுச் சுயேட்சையாகவும் உமாதேவி என்ற ஒரு பெண்மணி வெற்றி பெற்றிருக்கின்றார். இவர் ஐ.ஏ.எஸ் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும், நேர்முகப் பரீட்சையில் எடுபடவில்லை. அதனால் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற பெருவிருப்போடு ஊராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். நெல்லை மாவட்டம் மானூர் யூனியனுக்குட்பட்ட 5வது வட்டாரத்தில் உமாதேவி என்ற பெண்மணியே வெற்றி ஈட்டியிருக்கின்றார். சுண்டங்குறிச்சி, பன்னீரூத்து, மேல இலந்தைக்குளம் ஆகிய கிராமங்கள் இந்த வட்டாரத்திற்குள் அடங்குகின்றன. இவர் ஐஏஎஸ் அதிகாரியான உமாசங்கரின் சகோதரியாவார். இந்தத் தேர்தலில் 2219 வாக்குகள் பெற்ற இவர் 1001 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

இராதாபுரம் யூனியனின் 17-வது வட்டாரத்தில் வேட்பாளராகச் சௌமியா ஜெகதீஷ் என்பவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் அவர் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு நேரில் போகவில்லை. அதன் பின்னர் நடந்த தேர்தல் பிரசாரத்துக்கும் அவர் எங்குமே போகவில்லை. தேர்தல் விளம்பரங்களிலோ அல்லது நாளிதழ்களிலோ கூட அவரது புகைப்படம் வெளிவரவில்லை. அதனால் வாக்காளர்களுக்கு அவர் யார் என்பதுகூடத் தெரிந்திருக்கவில்லை. இதில் ஆச்சரியம் என்வென்றால் தேர்தல் களத்துக்கே வராத சௌமியா ஜெகதீஷ் யூனியன் கவுன்சிலராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். அடுத்த ஆச்சரியம் என்னவென்றால், பெண் கவுன்சிலர் சௌமியா, யூனியன் தலைவராகத் தேர்வாகும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிகின்றது.

இன்னுமொரு மாவட்டமான கடலூர் மாவட்டத்தில் உள்ள மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தில்லைநாயகபுரம் ஊராட்சி மன்ற தலைவராக இருந்த நாகூரான் என்பவர் இறந்துவிட்டதால், இடைத்தேர்தல் நடந்தபோது, அவரது மனைவி மகாவதி என்பவர் போட்டியிட்டார். நாலு வேட்பாளர்கள் இதில் போட்டியிட்டனர். பதிவான மொத்த வாக்குகளான 828 வாக்குகளில் மகாவதிக்கு 268 வாக்குகள் கிடைத்ததால் அவர் வெற்றி பெற்றார். அடுத்து வந்த கலையரசி என்பவருக்கு 266 வாக்குகள் கிடைத்ததால் இரண்டு வாக்குகளால் அவர் பின்தள்ளப்பட்டார். இதில் கவனிக்கபப்பட வேண்டியது என்னவென்றால் 10 வாக்குகள் செல்லாதவை என்று தேர்தல் அதிக-ாரிகளால் அறிவிக்கப்பட்டதேயாகும். கலையரசிக்கு அதிஷ்டம் அருகே இருந்தும் கைக்கெட்டவில்லை.

அரசியலில் வெற்றி தோல்வி எல்லாம் சகஜம் தான்! மக்கள் ஆட்சியில் மக்களின் முடிவே இறுதியானது என்றாலும், அது எப்போதும் பெரும்பான்மை மக்களின் முடிவாகவே இருக்கும். பெயரளவில் மக்கள் ஆட்சி என்று சொல்லப்பட்டாலும், ஒருபோதும் சிறுபான்மையினர் பாதுகாக்கப்படுவதில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.


கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

அறிவித்தல்.

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்-21. 11.2021.

மாவீரர், பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் வணக்க நினைவேந்தல், எதிர் வரும் 21.11.2021 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 2.00 மணிவரை தொடர்ந்து நடை பெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அனைவருக்கும் அறியத் தருகின்றது.

இந்த மதிப்பளிப்பு நாள், கனடியச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, சுகாதார விதி முறைகள் பேணப் பட்டு,முறையான ஒழுங்கமைப்பு விதிகள் நடைமுறைப் படுத்தப் பட்டு நடை பெறும். மாவீர்களின் பெற்றோர்கள், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நின்று மாவீரர்களை நினைவேந்துவோம்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619.
CTRO@tamilremembrance.com
மண்டப முகவரி.
Metropolition Centre.
3840 Finch Ave. East.
M1T 3T4.




சரணம் சரணம்
சாய் சரணம்

எங்களது S7 PRODUCTIONS நிறுவனம் சாய் பாபாவின் அற்புதங்கள், திரைப்படத்தை 5 மொழிகளில் பிரம்மாண்ட முறையில் தயாரிக்க உள்ளோம்.

சாய் பாபா பக்தர்கள்
1 ரூபாய் முதல்
நன்கொடை வழங்கலாம்.

சாய்பாபா பக்தர்கள்
தங்கள் வாழ்வில் சாய்பாபா நிகழ்த்திய அற்புதங்களை எங்களுக்கு எழுதி அனுப்பவும். நாங்கள் அதனை பரிசீலித்து திரைப்படத்தில் காட்சிகளாக வைக்கப்படும்.

Accounts Details
The South Indian Bank Limited
ST. THOMAS MOUNT Branch, Chennai - 16.
A/C No. : 0500730000000351
IFSC. : SIBL0000540 (or)
Cheque / DD: S7 PRODUCTIONS
G-Pay & Phone Pay :9445859988

தொடர்புக்கு முகவரி:
S7 PRODUCTIONS
No.24/25, AVM Studio,
Cine Lab Campus, NSK Salai,
Vadapalani,Chennai - 26.
Tamilnadu, India.
Contact & Whatsapp:
044-48685857 / 9445859988

# "அரசியல்,சமூகம் ஆகிய தளங்களில் நடுநிலை தவறாது வெற்றி நடைபோடும் "உதயன்" பிரதம ஆசிரியரை நாம் பாராட்ட வேண்டும்"

## உதயன் வெள்ளி விழா நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி புகழாரம்






"கடந்த 25 வருடங்களாக வாரந்தோறும் சிறப்பாக வெளிவரும் கனடா உதயன் பத்திரியானது. அரசியல் மற்றும் சமூகம் ஆகிய தளங்களில் நடு-நிலை தவறாது வெற்றி நடைபோடுகின்றது. கனடாவில் மத்திய அரசாங்கம் சார்ந்த கட்சிகளையும் மாகாண அரசுகள் சார்ந்த கட்சிகளையும் அணைத்தும் ஆதரவு வழங்கியும் "உதயன்" வார இதழ் தொடர்ச்சியாக பங்காற்றி வருவதற்கு காரணம் இந்த உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரே ஆவார். எனவே ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களை, நாம் அனைவரும் பாராட்ட வேண்டும்".

இவ்வாறு கடந்த 30ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோ "நெற்வின்" விழா மண்டபத்தில் நடைபெற்ற உதயன் வெள்ளி விழா - மற்றும் "நண்பன்" விருது விழா ஆகிய நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி புகழாரம் சூட்டினார்.








அன்று மாலை "உதயன்" வெள்ளி விழா மற்றும் "நண்பன்" விருது விழா ஆகியன சிறப்பான இடம்பெற்றன.

அழைக்கப்பெற்ற சிறப்பு விருந்தினர்களாக மத்திய அமைச்சர் மேரி இங். ஒன்றாரியோ மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவி அன்றியா ஹார்வர்த். தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரி ஆனந்தசங்கரி. மற்றும் சல்மா சாகிட். மாகாண பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் லோகன் கணபதி. அரிஸ் பாபிக்கியன் மற்றும் குளொவர். நகரசபை உறுப்பினர் ஜனிபர் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். உதயன் பிரதம ஆசிரியரும் தமிழ்நாட்டின் "நண்பன்" ஊடக நிறுவனத்தின் கனடா அமைப்பாளருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் அனைவவரையும் வரவேற்று உரையாற்றினார். தன்னோடு தொடர்ச்சியாக செயற்பட்டும் ஆதரவு வழங்கியும் "உதயன்" பத்திரிகையை தங்கள் தோள்களில் சுமந்து வரும் வர்த்தகப் பிரமுகர்கள் கலை இலக்கிய நண்பர்கள் எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் தனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய அனைத்து அரசியல் தலைவர்களும் உதயன் பத்திரிகையின் நடுநிலை சார்ந்த தன்மையை பாராட்டினார்கள்.

அன்றையதினம் வழங்கப்பெற்ற தமிழ்நாட்டின் "நண்பன்" விருதுகளை ஐவர் பெற்றுக்கொண்டனர். செல்வி அபினா நிமல்ராஜ். திருவாளர்கள். சோம. சச்சிதானந்தன். ஜெயானந்தன் பூத்தப்பிள்ளை. ஜெயச்சந்திரன் தியாகராஜா. விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை. ஆகியோர் பெற்றுக்கொண்டனர். அவர்களுக்கான விருதுகளையும் ஏனைய கௌரவங்களையும் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் அரசியல் சமூகத்தலைவர்கள் ஆகியோர் வழங்கி மகிழ்வித்தனர். அன்றைய நிகழ்வின் பிரதான ஸ்பொன்சர்கள் செய்தோர் மற்றும் அடுத்த நிலை சார்ந்த ஸ்பொன்சர் செய்தோர் ஆகிய வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் அனைவரும் மேடைக்கு அழைக்கப்பெற்று உதயன் பிரதம ஆசிரியர் அவர்களால் கௌரவிக்கப்பெற்றார்கள்.

கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்புக் கௌரவங்கள். வாழ்த்துரைகள் ஆகி-யன இடம் பெற்றன.





நிகழ்ச்சிகளை வானொலி அறிவிப்பாளரும் நடி-கருமான அன்ரன் பீலிக்ஸ் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் ஈஷ்ட் எப் எம் 102.7 வானொலி நிலைய அதிபர் நடா ராஜ்குமார் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள். அவர்கள் இருவரும் உதயன் பத்திரிகையின் நடு-நிலை சார்ந்த ஊடகப் பணியையும் பிரதம ஆசிரி-யர் அவர்களின் சேவை நோக்கையையும் வியந்து பாராட்டினார்கள்.






உதயன் தொடர் எழுத்தாளர் பாஸ்டர் அல்பிரட் சொரிபிம் மற்றும் பாஸ்டர் சோதி மற்றும் பணியாளர் சங்கர் சிவானந்தன் ஆகியோர் சிறப்புக் கௌரவங்களைப் பெற்றார்கள்.

சிறப்பு நிகழ்ச்சியாக "பைரவி" நுண்கலைக் கூடத்தின் இசைக் குழுவின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.







## Buying a Home after Bankruptcy

# கனடாவில் வங்குரோத்து நிலைக்குச் சென்றதன் பின்னர் வீடொன்றை வாங்குதல்



வங்குரோத்து நிலைக்குச் செல்லுதல் என்பது உங்கள் வாழ்க்கையின் முடிவு அல்ல. வங்குரோத்திற்குப் பிறகு உங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். உங்களுக்கு தேவையானது உங்கள் நிதியை எவ்வாறு நிர்வகிப்பது மற்றும் உங்கள் கால்களில் எவ்வாறு வலுவுடன் நிற்பது என்பது பற்றிய தெளிவான புரிதல் மட்டுமே. வங்குரோத்திற்குப பிறகு நீங்கள் விரும்பிய வீட்டை வாங்குவதற்கு இது உங்களுக்கு ஒரு சிறந்த உதவியை வழங்கும்.

வீடு வாங்குவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க, வங்குரோத்திற்குப் பிறகு நீங்கள் பின்பற்ற வேண்டிய சில முறைகள் உள்ளன. மேலும் சென்று அந்த முறைகளைப் பார்ப்போம்.

### கடனிலிருந்து வெளியேறுதல்

முதல் விஷயமாக, நீங்கள் திவால்நிலைக்குத் தாக்கல் செய்ய வேண்டும், பின்னர் உங்கள் நிலுவையில் உள்ள கடனை வெளியேற்றுவதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும். கனடாவில் உங்கள் கடனை அடைக்க நான்கு விருப்பங்கள் உள்ளன. இங்கே, உங்கள் சில கடமைகளில் இருந்து விடுபட முடியும். எனவே, உங்கள் நிதியை மீண்டும் கட்டியெழுப்புவதன் மூலம் நீங்கள் ஒரு சிறந்த நிவாரணத்தைப் பெற முடியும். நீங்கள் ஒரு வங்குரோத்து நிலை சார்ந்த வழக்கறிஞருடன் கலந்துரையாடலாம் மற்றும் ,தை எவ்வாறு தொடரலாம் என்பதைக் கண்டுபிடிக்கலாம். அதன் பிறகு, நாளின் முடிவில் மிகச் சிறந்த முடிவுகள் உங்களுக்கு வழங்கப்படும்.

### கடன் அறிக்கையைப் பாருங்கள்

உங்கள் கடன் அறிக்கையை நீங்கள் தொடர்ந்து பார்க்க வேண்டும். நீங்கள் ஒரு புதிய வீட்டைப் பெறுவதற்கு அடமானக் கடனைப் பெறுவதற்கு முன், கடன் வழங்குபவர்கள் கடன் அறிக்கையைப் பார்ப்பார்கள். கடன் அறிக்கையானது கடன் வரலாற்றின் விரிவான வரலாற்றைக் கொண்டிருக்கும். இதன் விளைவாக, உங்கள் கடன் வழங்குபவர் உங்கள் கடன் தகுதியைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள முடியும். வங்குரோத்து நிலைக்கு தாக்கல்கள் செய்த விபரங்கள் உங்கள் கடன் அறிக்கையில் 10 ஆண்டுகளுக்கு இருக்கும் என்பது உண்மைதான். இருப்பினும், உங்கள் வீட்டு அடமானக் கடனைப் பெற நீங்கள் 10 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டியதில்லை.

உங்கள் கடன் அறிக்கை புதுப்பித்ததாகவும் துல்லியமாகவும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் நீங்கள் விடயங்களை துரிதப்படுத்த முடியும். நீங்கள் கடன் அறிக்கையையும் தாராளமாகச் சரிபார்க்கலாம். உண்மையில், நீங்கள் வருடத்திற்கு ஒரு இலவச கடன் அறிக்கையைப் பெற்று அதைப் பார்த்துவிட்டு தொடர வேண்டும்.

### உங்கள் கிரெடிட்டை மீளவும் உருவாக்குங்கள்

உங்கள் கிரெடிட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வண்ணம் நீங்கள் இப்போது வேலையை ஆரம்பிக்க வேண்டும். இது உங்கள் அடமானக் கடனுக்கு ஒப்புதல் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க உதவும். அடமானக் கடனுக்குத் தகுதிபெற, நீங்கள் நம்பக்கூடிய ஒருவர் என்பதை கடன் வழங்குபவருக்கு நிரூபிக்க வேண்டும். இருப்பினும், வங்குரோத்து நிலைக்குப் பிறகு உங்களுக்குக் கிடைக்கும் கடன் பெறுவதில் உள்ள விருப்பங்கள் மிகவும் குறைவாக இருப்பதை நீங்கள் கவனிப்பீர்கள். இருப்பினும், உங்கள் கிரெடிட்டை நேரத்துடன் மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்.

வங்குரோத்து நிலைக்குப் பிறகு உங்கள் கிரெடிட்டை மீண்டும் கட்டியெழுப்ப உங்களுக்குக் கிடைக்கும் சிறந்த முறைகளில் ஒன்று பாதுகாப்பாக கிரெடிட் கார்டைப் பயன்படுத்துவதாகும். உங்கள் சேமிப்புக் கணக்கில் இருக்கும் பணத்திற்கான பாதுகாப்பின் அடிப்படையில் இந்த கிரெடிட் கார்டைப் பயன்படுத்துவீர்கள். மறுபுறம், தவணை கடன்கள் உங்கள் கிரெடிட்டை மீண்டும் கட்டமைக்க உதவும். இருப்பினும், நீங்கள் கிரெடிட் கார்டு செலுத்துதல் மற்றும் தவணை கடனை சரியான நேரத்தில் செலுத்துகிறீர்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**உங்களிடத்தில் ஏதாவது கடன் அல்லது**
**கிறடிட் பிரச்சனைகள் இருந்தால் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்**
www.gtacredit.com **அல்லது (416) 650.1100**






# சனிக்கிழமை நடைபெற்ற 'உதயன்' வெள்ளி விழா மற்றும் 'நண்பன்' விருது விழா









கடந்த சனிக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெற்ற 'உதயன்' வெள்ளி விழா மற்றும் 'நண்பன்' விருது விழா ஆகியவற்றில் கனடிய மத்திய அமைச்சர் ஒருவர் உட்பட எட்டு அரசியல் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் ஐந்து சேவையாளர்கள் 'நண்பன்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர்

அழைக்கப்பெற்ற சிறப்பு விருந்தினர்களாக மத்திய அமைச்சர் மேரி இங். ஓன்றாரியோ மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவி அன்றியா ஹார்வர்த். தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரி ஆனந்தசங்கரி. மற்றும் சல்மா சாகிட். மாகாண பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் லோகன் கணபதி. அரிஸ் பாபிக்கியன் மற்றும் குளொவர். நகரசபை உறுப்பினர் ஜனிபர்

ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் 'உதயன்' பிரதம ஆசிரியருக்கு பாராட்டுப் பத்திரங்கள் வழங்கிக் கௌரவித்தனர்.




# Public Toilets Pose Huge Public Risk, New Research Finds

- Siva Parameswaran Senior International journalist (London)

The fear of Covid-19 is yet to go away globally, and worries continue to rise as new variants of the deadly virus is identified by scientists. Every nation in the planet advises their citizens the importance of hand washing and sanitising. Now, new research in Australia has found there are more dangers of open toilet lids, uncovered rubbish bins and defective plumbing drains in spreading infections in public washrooms.

Researchers from the ANU and University of South Australia assessed 38 different studies from 13 countries that investigated the risk of infectious disease transmission in public washrooms. Their findings have been published in Science of the Total Environment.

Scientists involved in the research reviewed the risks of bacterial and viral transmission in public washrooms and have found that bio-aerosols can potentially be transmitted throughout a multi-storey building by defective plumbing and that leaving toilet lids open after flushing can disperse contaminated droplets beyond a metre.

According to the findings uncovered rubbish bins in public bathrooms are also flagged as a risk, particularly if located under or close to electric hand dryers. Apart from considering the risks of COVID-19 transmission in bathrooms, the global review by the researchers also analysed other infectious disease risks from public toilets in restaurants, workplaces, commercial premises and universities. The results showed widespread evidence of contaminated surfaces as a cause of faecal-oral transmission, but no documented instances of airborne-related infectious disease transmission.

As more countries start the re-opening of their borders researchers called for more studies assessing SARS-CoV-2 transmission risks in public washrooms. Prof. Erica Donner of the University of Southern Australia and co-author of the research paper says anecdotal evidence suggests that public washrooms have been avoided by users in the past 18 months due to perceived risks of COVID-19 transmission.

"Some people have been worried about using public washrooms during the pandemic, but if you minimise your time in the bathroom, wash and dry your hands properly, and don't use your mobile phone, eat or drink, then the risks should be low, especially if the bathroom is well maintained," Prof Donner says.

"While there is limited evidence of COVID-19 transmission via public washrooms, they are rife with bacteria, especially those that are used frequently and not cleaned properly."

However, a wide range of intestinal, skin, and soil bacteria and respiratory viruses were identified in public washrooms, posing risks of transmission. Leaving toilet lid open after flushing, ineffective hand washing or hand drying, poor surface cleaning, blocked drains and uncovered rubbish bins all contribute to heavy bacterial and viral loads in washrooms.

Prof. Donner warns that the study has identified potential and risk, but not yet conclusively found evidence that could potentially cause serious health issues.

"Although there is a potential risk of aerosols spreading from toilet flushing and hand drying, we found no evidence of airborne transmission of intestinal or respiratory pathogens in public bathrooms in the literature we reviewed," Prof Donner says.

The study which investigated bacterial dispersal in public washrooms, showed jet air dryers can potentially spread droplets as far as three metres and toilet flushing spreading particles as far as 1.5 metres and remaining in the air for more than 30 minutes.

"However, there is no doubt that thorough hand washing, and effective hand drying is critical in stopping the spread of diseases.

Amidst fears that Covid-19 cases could increase, as borders are opened, public can protect themselves by continuing to practice good hygiene. This includes hand washing and sanitising, disinfecting door handles, toilet lids and other frequently touched surfaces- Prof. Donner says.

"These habits will not only lower the risk of COVID-19 infection but also limit the risk of bacterial infections."

And, the scientists warn not to remove your face mask in public places, even more so in public washrooms.





மீண்டும் இணையத் தயாராகுங்கள்

டொரோண்டோவிலிருந்து தோஹா வரையிலான எங்களுடைய இடைநில்லா விமானங்கள் மூலமும், கொழும்பு மற்றும் அதற்கு அப்பால்* உள்ள இடங்களுக்குச் சிக்கலில்லாத இணைப்புப் பயண வசதிகளை அளிப்பதன் மூலமும் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் இணையப் போகும் தருணங்களைத் திட்டமிடுவது முன்பை விட எளிதானதாக மாறியுள்ளது.

உங்களுடைய பயணம் முழுவதும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பை அளிக்கும் பொருட்டு உயிர் காப்பு அம்சங்களை அளிக்கும் எங்களுடைய முன்னோடியான **Air Canada CleanCare+** திட்டம் மூலமாக உங்களுடைய விமானப் பயணத்தை மன அமைதியுடன் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**AEROPLAN® உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு AIR CANADA விமானப் பயணத்திற்கும் புள்ளிகள் வழங்கப்படும்.**

கூடுதலாக, புள்ளிகளை வேகமாகச் சேர்த்து அதைப் பரிசுப்பொருளைப் பெறும் பொருட்டு மீள சமர்ப்பிக்க உங்கள் புள்ளிகளை 8 குடும்ப உறுப்பினர்களின் புள்ளிகளோடு ஒன்றிணைத்துக்கொள்ள முடியும். உங்களைப் போன்ற பயணிகளுக்காகவே **Aeroplan®** உருவாக்கப்பட்டுள்ளது.

**aircanada.com/aeroplan** -ல் சேர்வது எளிதானது மற்றும் இலவசமானது.

AEROPLAN

A STAR ALLIANCE MEMBER

AIR CANADA

*தோஹாவிற்கு அப்பால் இணைப்பு விமானங்கள் Qatar Airways ஆல் இயக்கப்படுகின்றன.
®Aeroplan மற்றும் Aeroplan ஆகியவை Aeroplan Inc. இன் பதிவு செய்யப்பட்ட வணிகச்சின்னங்கள் ஆகும்.

மெய்நிகர்

Toronto District School Board

உயர் பாடசாலைகளுக்கான

OPEN HOUSES

அத்துடன் தகவல் அமர்வுகள்

tdsb.on.ca/OpenHouses

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
Pre-Arranging – A Wise Choise

FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# கீழடி தமிழர்களின் தொன்மையை கிமு 6 ஆம் நூற்றாண்டுக்கு பின்னோக்கி நகர்த்தியுள்ளது!

9ம் பக்கத் தொடர்ச்சி

உண்மையாகவே இருந்ததா என்றால் அந்தக் கேள்விக்கான பதில் "இல்லை" என்பதுதான்.

மொரிஷியஸ் தீவுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், இந்தியப் பெருங்கடலுக்குள் புதைந்திருக்கும் குறுங்கண்டம் ஒன்றுக்கு "மொரீஷியா" என்று அறிவியலாளர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். 2013இல் கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கண்டம் இதுவாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இங்கிலாந்தைச் சேர்ந்த விலங்கியலாளர் பிலிப் ஸ்கேட்லர் என்பவர் "மடகாஸ்கரின் பாலூட்டிகள்" **(The Mammals of Madagascar)** என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

அதில் "லெமூர்" விலங்குகளின் படிமங்கள் இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவு நாடான மடகாஸ்கரிலும் இந்திய நிலப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால் மடகாஸ்கர் ஓர் அங்கமாக இருக்கும் ஆப்பிரிக்க கண்டத்தின் பெருநிலப்பரப்பில் இல்லை. எனவே கடந்த காலங்களில் மடகாஸ்கர் மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நிலப்பரப்புகளையும் இணைத்த, ஒரு கண்டம் இருந்திருக்கலாம். அப்போது லெமூர் விலங்குகள் இரு பகுதிகளுக்கும் சென்று வந்திருக்கலாம் என்று கூறினார். அந்த கண்டத்தின் பெயர்தான் லெமூரியா என்றும் அது பின்னாளில் கடலுக்குள் மூழ்கி அழிந்து விட்டது என்றும் பிலிப் ஸ்கேட்லர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இது தவறான முடிவு எனப் பின்னாளில் மேற்கொண்ட ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. **(https://www.bbc.com/tamil/science-56016605)**

இருந்தும் அண்மையில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை தனியாகவும் இந்திய தொல்லியல் துறையுடன் இணைந்தும் மேற்கொண்டு வரும் அகவாழ்வு ஆராய்ச்சி காரணமாக தமிழ் ஆர்வலர்களின் கனவு ஓரளவாவது நினைவாகி வருகிறது.

தமிழ்நாட்டில் 35 க்கும் மேலான தொல்லியல்துறைக் களங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. வரலாற்றுக் காலத்துக்கு முந்திய தொல்லியல் களங்கள், தொடக்க கால, மத்திய கால தொல்லியல் களங்கள் மற்றும் அண்மைக் கால அகழ்வாய்வுகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இவற்றில் ஆதிச்சநல்லூர் (1876), ஆனைமலை (1969), கோவலன் பொட்டல் (1980), கொடுமணல் (1992 - 1998), மரக்காணம் (2005-2006), கீழடி (2015 -2021) குறிப்பிடத்தக்க தொல்லியல் களங்களாகும்.

அண்மைக் காலம்வரை இந்திய வரலாற்றுப் பாடநூல்களில் ஆரியர்க்கு முன் அநாகரிக மக்கள் வாழ்ந்தனர் என்ற வாக்கியம் சிறப்பிடம் பெற்றிருந்தது. பின்னர் சிந்து சமவெளி நாகரிகம் ஒரு பாடமாக இடம் பெற்றுப் பழைய எண்ணத்தை மாற்றியது. இப்போது தமிழ்நாட்டில், குறிப்பாக கீழடியில் மேற்கொண்ட ஆய்வு கீழடி நாகரிகம் 2600 ஆண்டுகள் பழமையானது எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது இந்திய வரலாற்றையே தலைகீழாக மாற்றி அமைத்துள்ளது.

கீழடியில் வாழ்ந்த மக்கள் படிப்பறிவோடு வாழ்ந்து வந்துள்ளனர் என்கிற முக்கிய தகவல்கள் வெளிவந்துள்ளது. கீழடியில் கிடைத்த 6 பொருட்கள் கிமு 3 - கிமு 6 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.



தற்போது கீழடியில் கிடைத்த ஆய்வு முடிவுகளின்படி, தமிழ் பிராமி கிமு 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே 2,600 ஆண்டுகளுக்கு முன்பாக கீழடியில் வாழ்ந்தவர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தார்கள், எழுதத் தெரிந்திருந்தார்கள் என்ற முடிவுக்கு தொல்லியல் துறை வந்துள்ளது.

கீழடியிலிருந்து கிட்டத்தட்ட 70 எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை (53%) காளை, எருமை, ஆடு, பசு ஆகியவற்றினுடையவை. ஆகவே கீழடியில் வாழ்ந்த சமூகம் பெரும்பாலும் ஆடு, மாடுகளை வளர்த்த சமூகமாக இருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் ஆய்வாளர்கள்.

கீழடியில் கிடைத்த ஓடுகள், செங்கற்கள், காரை ஆகியவை ஆய்வுசெய்யப்பட்டன. அவற்றில் மண், சுண்ணாம்பு, இரும்பு, மெக்னீசியம், அலுமினியம் ஆகியவை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் கிடைத்த வரிவடிவங்களில் சிந்து சமவெளியில் கிடைத்த வரிவடிவங்களே மிகப் பழமையானவை. சிந்துவெளி பண்பாடு மறைந்து தமிழ் பிராமி எழுத்து தோன்றியதற்கு இடையில் கீறல் வடிவில் ஒரு வரிவடிவம் இருந்ததாக தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். சிந்து சமவெளி எழுத்துகளைப் போலவே இவற்றின் பொருளும் இதுவரை முழுமையாகப் புரியவில்லை. செப்புக்கால பண்பாட்டிலும் தொடர்ந்து பெருங்கற்கால பண்பாட்டிலும் இக்குறியீடுகள் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர், அழகன் குளம், கொற்கை, கொடுமணல், கரூர், தேரிருவேலி, பேரூர் உள்ளிட்ட இடங்களில் கிடைத்த பானை ஓடுகளில் இந்த வரிவடிவங்கள் கிடைத்துள்ளன. இலங்கையில் திசமஹாரா, கந்தரோடை, மாந்தை, ரிதியகாம போன்ற இடங்களிலும் இது போன்ற குறியீடுகள் கிடைத்துள்ளன. கீழடி அகழாய்வில் 1001 ஓடுகள் இத்தகைய வரி வடிவங்களுடன் கிடைத்துள்ளன. *(வளரும்)*




# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?



கலாநிதி துன்னாலையூர்
ராம் தேவலோகேஸ்வரக்குரு
(சாரதாபீடம் சோதிடநிலையம்)

நவக்கிரஹங்களின் சுபக் கிரஹமான குருபகவான் வருடம் ஒரு ராசியாக சஞ்சாரம் செய்து பன்னிரு ராசிக்கும் பலாபலன்களை கொடுப்பார். அந்த வகையில் வாக்கிய பஞ்சாக்கப்படி 13.11.2021 ஐப்பசி 27ஆம் நாள் சனிக்கிழமை மாலை 7.00 மணி 43 நிமிட நேரத்தில் மகரராசியில் இருந்து கும்ப ராசிக்கு குருபகவான் பெயர்ச்சி பெறுகின்றார். இதன் மூலம் பன்னிரு ராசிகளுக்கும் பலா பலன்கள் நன்மையும், சிரமநிலையும், அமையும் நிலையிருக்கும். இதில் நாம் உற்று கவனிக்க வேண்டிய விடயம் கடந்த 04.10.2018இன்று துலா ராசியில் இருந்து விருட்சிகராசிக்கு பெயர்ச்சியான குருபகவான் கடந்த மூன்று வருடமாக ஒரு வருடம் ஒரு ராசியில் எனும் தமது சஞ்சார நிலை இல்லாதவராக, வக்ரமாக, அதிகாரமாக 3ம், 4ம், 6ம் என விருட்சிகம், தனுசு, மகரம், கும்பம் என இந்த நான்கு ராசிகளிலும் மாறி மாறி சூழற்சி நிலையை கொண்டு சஞ்சரித்து கொண்டு இருக்கின்றார்.

இந்த வக்ர, அதிகார, சுழற்சி நிலையானது 13.04.2022அன்று மீனராசிக்கு குருவின் பெயர்ச்சியோடு தான் நிறைவு பெறுகின்றது. அதுவரை உலகின் இயல்பு நிலைகள் ஆங்காங்கு சிறு சிறு சிரம நிலைகளை கொண்டிருக்கும். எனவே 13.11.2021 மகரத்தில் இருந்து கும்பராசிக்கு பெயர்ச்சி பெறும் குருபகவான் 13.04.2022 வரை சுமார் 6 மாத காலம் கும்பராசியில் பிரயோகிக்கின்றார். இந்த பெயர்ச்சி உங்களின் ராசிகளுக்கு எப்படி அமையும் என்பதை அறிவோம்.

## மேடம் (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)




செவ்வாய்க் கிரஹகத்தின் ஆதிபத்தியம் பெற்ற மேடராசி அன்பர்களே! ஆளுமையும், அறிவும் செயற்திறனும், தீரகமாக கொண்ட உங்களுக்கு குருவின் சஞ்சாரம் லாபஸ்த்தானம் எனப்படும் 11ஆம் இடம் அமைகின்றது. எனவே எடுக்கும் முயற்சிகளில் அனுகூலமான நன்மைகள் இருக்கும். குடும்ப நிலை சார்ந்த மகிழ்வுகள் அமைகின்ற நிலையிருக்கும். தொழில் நிலையில் மேன்மையான நிலை அமையும். கடன் பிரச்சினைகளுக்கு சுமகமான தீர்வுகள் அமையும் எதையும் சமாளித்து செயற்படக் கூடிய அனுகூலங்கள் அமையும். குடும்ப நிலை சார்ந்த சுபகாரியங்களுக்கு உரிய பலன் அமையும். புதிய தொழில், புதிய முதலீடுகள் வெற்றிகளைக் கொடுக்கும். மனதிலே மகிழ்வான நற்பலன் ஏற்படும். எதிர்பார்ப்புகளில் நல்ல வெற்றிகள் அமையும். கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலைகள் இருக்கும். நீண்ட கால சிக்கல் நிலைகள் ஓரளவிற்கு நீங்கும். பெண்களுக்கு குடும்ப மகிழ்வும், மனமகிழ்வும் சிறப்பாக அமையும். மாணவர்களின் கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். பரீட்சைகளில் மிகச் சிறப்பான பெறுபேறுகள் அமையும் நிலையிருக்கும். பொதுவாக எல்லா வகையிலும் இந்தக் குருவின் பெயர்ச்சி அனுகூலமான நற்பலன்களை தரும். உங்களின் தேவைகள் பூர்த்தியாகும் நிலையிருக்கும். நல்ல தர்ம சிந்தனையோடு செயல்பட்டு உங்கள் நற்பலன் உங்களை முழுமையாக சேர வழி செய்யுங்கள்.

## இடபம்: (கார்த்திகை 2,3,4ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம்)




சுக்கிரனின் ஆதிபத்தியம் கொண்ட இடபராசி அன்பர்களே! நற்துணிவும், துணிந்த செயல்பாடும் எதையும் சாதுர்யமாக அணுகும் செயலும் கொண்ட உங்கள் ராசிக்கு ஜீவனஸ்த்தானமாகிய 10ஆம் இடம் குருவின் சஞ்சாரம் அமைகின்றது. தொழில் நிலை சார்ந்த சிறு சிறு அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். தேவையற்ற சிறு சிறு பிரச்சினைகள் அமையும். திடீர் பிரயாணங்கள் எதிர்பாராது அமையும். குடும்ப நிலையில் சற்று மத்திமமான பலன்கள் இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை அமையும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும் பலன் இருக்கும். எந்த விடயம் எடுத்தாலும் சற்று இழுபறிகள் இருக்கும். உங்களின் குடும்ப ஸ்தான நிலையை குருவின் பஞ்சம, பாக்கிய, ஸ்தான பார்வையாக கொள்வது எதிர்பாராத திடீர் நன்மைகளும், அதிஸ்ட பலன்களும் அமையும் நிலை அமைந்திருக்கும். பெண்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான நற்பலன்கள் அமையும் நிலைகள் இருக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் சிறு சிறு மந்த நிலை இருக்கும். சற்றும் கூடுதலான முயற்சி எடுக்க வேண்டும். புதிய முயற்சிகளில் சற்று இழுபறியான நிலைகள் இருக்கும். பொறுமையுடன் நிதானத்துடன் செயற்படுவது மிகவும் நல்லது. பொதுவாக பெரும் சிரமங்கள் இருக்காது. அதற்கு ஏற்ப தர்ம நெறியோடு செயல்பட்டு வெற்றி பெறுக.

## மிதுனம்: (மிருகசீரிடம் 3,4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1.2,3ஆம் பாதம்)




புதனின் அதிபத்தியம் கொண்ட மிதுனராசி அன்பர்களே! புத்திக் கூர்மையும், எதையும் நமக்குள்ளாகவே வைத்து செயற்படும் குண இயல்பும் கொண்ட உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தானமாகிய 9ஆம் இடத்திலே குருபகவான் அமைகின்றார். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகளும் அனுகூலமான நிலைகளும் அமையும். தொழில் நிலை சார்ந்த முன்னேற்றம், லாபங்கள் மிகவும் சிறப்பாக அமையும். குடும்ப நிலையில் மனமகிழ்வும் சுபகாரிய பலனும் அமையும். உறவினர்களின் மூலமாக நன்மைகள் ஏற்படும் கடன் நிலைகளில், சுமகமான பலன்கள் அமையும். புதிய முயற்சிகளிலும் முதலீடுகளிலும் அனுகூலமான நன்மைகள் அமையும் நிலையுண்டு. அத்தோடு குரவின் 5ம், 9ம் பார்வை உங்களின் ராசியை நோக்கி அமைவது எதிர்பாராத வகையில் திடீர் நன்மைகளை அதிஸ்ட பலன்களை நீங்கள் பெறக்கூடிய வாய்ப்புகள் அமையும். மனதிலே மகிழ்வான நற்பலன்கள் அமையும் நிலையுண்டு. எதிர்பாராத திடீர் பிரயாணங்கள் அமையும். பெண்களுக்கு மன மகிழ்வும் நன்மைகளும் அமையும். மாணவர்களின் கல்வி நிலையில் நல்ல முன்னேற்றமும், மேன்மைகளும் ஏற்படும். பொதுவாகவே உங்களின் எதிர்பார்ப்பு களை வெற்றிகொள்ளும் நிலைப்பாடு சிறப்பாக இருக்கும். தர்ம நெறியோடும் நல்ல செயலோடும் மிகவும் சிறப்பான நற்பலன்களை பெற்று மகிழ்வுறுங்கள்.

## கடகம்: (புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)




சந்திரனின் ஆதிபத்தியம் கொண்ட கடகராசி அன்பர்களே!
உங்களின் ராசி நிலைக்கு அட்டமஸ்த்தானமாகிய 8ஆம் இடம் குருபகவான் அமைகின்றார். எந்த விடயம் என்றாலும் சற்று பொறுமையும் நிதானமும் கொண்டே செயற்பட வேண்டும். எடுக்கும் முயற்சிகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். தேவையற்ற வீண் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைகள் இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலைகள் அமையும். பண வரவு சற்று மத்திமமனதாகவே அமையும். கடன் நிலைகளில் சிக்கல் இழுபறி நிலையிருக்கும். எதிர்பாராத திடீர் செலவீனங்கள் அமையும். உடல் நிலை சார்ந்த சிறுசிறு உபாதையிருக்கும். தொழில் நிலையில் தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். உறவினர்களுடன் மனச்சஞ்சல நிலைகள் அமையும் பலனிருக்கும். பெண்களுக்கு மனச் சஞ்சலமான நிலைகள் இருக்கும். குடும்ப உறவினர்களுடன் குழப்ப நிலை இருக்கும். பொதுவாக எந்த விடயமாக இருப்பினும் மிகவும் பொறுமை நிதானமுடன் செயற்பட வேண்டும். மாணவர்களின் கல்வி நிலையில் சற்று இழுபறி மந்த நிலைகள் இருக்கும். சற்றுக் கூடுதலான முயற்சி எடுத்து செயற்படுவது மிக நல்லது. மனச்சஞ்சலம் எதையும் நம்பாத குணம், மற்றவர் மனம் புரியாத செயல் கொண்ட நீங்கள் மிகவும் பொறுமை நிதானமுடன் செயல்பட்டு வெற்றி பெறுங்கள்.

## சிம்மம்: (மகம், பூரம், உத்தரம் 1,2ஆம் பாதம்)




சூரியனின் ஆதிபத்தியம் கொண்ட சிம்மராசி அன்பர்களே!
எதையும் துணிந்து ஆளுமையுடன் செயல்படுத்தி அதில் வெற்றியும் காணும் நீங்கள், உங்களின் தன் போக்கான குண இயல்பால் பல இன்னலும் காண்பீர்கள். உங்களின் ராசி நிலைக்கு குரு பாகவான் களத்திரஸ்தானமாகிய 7ஆம் இடம் அமைகின்றார். குடும்ப நிலையில் சற்று அனுகூலமான நன்மைகளும் நற்பலனும் அமையும் நிலையுண்டு. தொழில் நிலை சார்ந்த முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். பணவரவு தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையுண்டு. தொழில் நிலை சார்ந்த முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். பணவரவு தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலை உண்டு. உறவினர்களின் மூலமாக நன்மைகள் இருக்கும். எதிர்பார்ப்புகளில் ஓரளவிற்கு அனுகூல நன்மைகள் அமையும். எதிர்பாராத திடீர் நன்மையான பலனும் ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் அனுகூலமா னதாக அமையும் நிலையிருக்கும். பெண்களுக்கு மனச் சந்தோஸம், குடும்ப நிலையில் மனநிறைவும் அமையும். மாணவர்களின் கல்வி நிலையில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகள் அமையும். பொதுவாகவே இந்தக் குருப்பெயர்ச்சி எல்லா வகையிலும் நன்மைகளும் சிறப்புகளும் தரக்கூடியதாய் அமையும் நிலைகள் உண்டு. அதற்கு ஏற்ப பொறுமை நிதானமுடன் செயற்பட்டு நல்ல அனுசரணையுடைய பலன்கள் பெற்றுக்கொள்ள உங்கள் முயற்சியை மேற்கொள்க!

## கன்னி (உத்தரம் 2,3,4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)




புதனின் ஆதிபத்தியம் கொண்ட கன்னிராசி அன்பர்களே!
மிகத் தெளிவான செயற்திறனும், அமைதியாகவே இருந்து ஆளுமையான செயல்கள் செய்யும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு குருபகவான் சஞ்சாரம் ரோகஸ்தானமாகிய 6ஆம் இடம் அமைகின்றார். எடுக்கின்ற முயற்சிகளில் சற்று இழுபறிகள் மந்த நிலைகள் இருக்கும். தொழில் நிலைகளிலே சிறு சிறு பிரச்சினைகளைக் கொடுக்கும். இருப்பினும் பெரும் சிரமம் அமையாது. பொதுவாக குருபகவான் உங்களின் தனஸ்தான ராசியை 5ஆம் 9ஆம் பார்வை கொள்வதனால் எதிர்பாராத திடீர் நன்மைகள் அனுகூலங்கள் அமையும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளைப் பூர்த்தி செய்யும். உங்களின் பகைவர்கள் மறைமுகமாக சிரமங்களை கொடுக்கும் நிலைகள் இருக்கும். அதற்கு ஏற்ப மிகவும் பொறுமை நிதானமுடன் செயற்பட்டுக் கொள்வது மிகமிக நல்லது. குடும்ப நிலையில் சிறு சிறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையிருக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் சற்று மந்தமான நிலையிருக்கும். மிகவும் பொறுமை நிதானமுடன் செயற்படுவது நல்லது. கடன் பிரச்சினைகளிலும் சிக்கல், இழுபறி நிலைகள் அமையும். அதற்கு ஏற்ப செயற்பட்டு வெற்றி பெறுக. பொதுவாக இந்தக் குருப்பெயர்ச்சி பெரும் சிரமம் கொடுக்காது இருப்பினும் இடையிடையே சஞ்சல நிலை இருக்கும். அதற்கு ஏற்ப நல்ல சிந்தனை, செயல் கொண்டு அனுகூலமான வெற்றிகளை பெறுங்கள்.

## துலாம் (சித்திரை3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்)




சுக்கிரனின் ஆதிபத்தியம் கொண்ட துலா ராசி அன்பர்களே!
எதையும் நியாய பூர்வமாக செய்யும் குண இயல்பும் கடமை தவறாத செயல்பாடும் அனைவரையும் வசீகரிக்கும் இயல்பும் கொண்ட உங்களுக்கு பஞ்சமஸ்தானமாகிய 5ஆம் இடம் குருபகவான் சஞ்சாரம் அமைகின்றது. எடுக்கும் முயற்சிகளில் அனுகூலமான வெற்றிகள் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக இருக்கும். தொழில் நிலை சார்ந்த மேன்மைகள், லாபகங்கள் அமையும் குடும்ப நிலையில் எதிர்பாராத திடீர் நன்மைகள் அமையும். உறவினர்களின் மூலமாக அனுகூலங்கள் அமையும். வெளிநாட்டு பிரயாணம் அமைகின்ற நிலைகளும் ஏற்படும் வழக்கு விவகார நிலைகளில் நன்மைகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவும் அமையும். குடும்பத்தில் சுபகாரிய பலன்கள் ஏற்படும். நீண்டகால திட்டங்கள் அனுகூலமானதாக அமையும். மனதிலே மகிழ்வும் சுபமான செயற்பாடும் ஏற்படும். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியும் நிறைவும் இருக்கும். உறவினர்களின் மூலமாக அனுகூலமான பலனிருக்கும். மாணவர்களின் மூலமாக அனுகூலமான பலனிருக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகள் ஏற்படும். பொதுவாக இந்தக் குருப்பெயர்ச்சி பல வகையிலும் உங்களுக்கு சிறப்பான அனுகூலமான நன்மைகள் கொடுக்கும். எதிர்பார்ப்புகளை வெற்றி பெறக்கூடிய நிலைகள் அமையும். எனவே எல்லா வகையிலும் நற்பலன்கள் பெறக்கூடிய காலமாக இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்கு அமையும் நிலையுண்டு.

(தொடரும்)

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....



மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...

தமிழ் மக்களின் நம்பிக்யைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும் 'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் இறக்குமதி செய்துள்ளார்கள்.

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழதத்துக்கள்!**





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# தனிச்சிங்கள தேசமாக்கும் சட்டம்?

**- தீபச்செல்வன்**

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மாபெரும் இனவழிப்பை சந்தித்த பிறகும் அந்தக் குருதி காய்வதற்கு முன்னரே ஒரே நாடு ஒரே சட்டம் இயற்றுவதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. ஸ்ரீலங்காவில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற சட்டத்திற்காக அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியில் தமிழர்கள் இல்லை என்ற குறை ஈழத் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா அரசால் எந்த வித்தத்தில் அணுகப்படுகிறார்கள் என்பதைதான் தெளிவாக உணர்த்துகிறது. இதில் தமிழர்கள் வருந்துவதற்கு அவசியம் இல்லை. ஆனால் தமிழர்கள் தங்கள் இருப்பு குறித்து மிகுந்த சிரக்தை எடுத்துக்கொள்ள வேண்டியதைதான் உணர வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் அடிப்படையில் ஜனாதிபதி அதிகாரத்தின் கீழ் இச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. ஒன்பது சிங்களவர்களையும் சிங்களப் பேரினவாதிகளைவிடவும் பேரினவாதக் கொள்கைகளுக்கு துணைபோகக் கூடிய முஸ்லீம்கள் நான்கு பேரும் இந்த செலயணியில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் தலைமைப் பொறுப்பை கலாகொட அத்த ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ளமைதான் நகைச்சுவையான அதே நேரம் பயங்கரமான தீர்மானமாகும். "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற விடயதானத்தை ஆராய்ந்து, அதற்கான சட்டங்களை மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைகளை முன்வைப்பதே இந்த செயலணிக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். இதில் தமிழர்கள் இல்லை என்று ஊடங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தமிழர்களுக்கு எதிரான சட்டம் இயற்ற தமிழர்கள் தேவையில்லை என்பதுதான் அரசின் கொள்கையாக இருக்கலாம்.

கொழும்பில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் ஞானசார தேரரின் பொதுபலசேனா அமைப்பு வைத்திருந்த கொடியை யாரும் எளிதில் மறந்துவிட மாட்டார்கள். ஸ்ரீலங்கா கொடியில் தமிழ், முஸ்லீம் இனங்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற வண்ணங்களை நீக்கிய தனிச் சிங்களக் கொடியையே ஞானசார தேரரின் பொதுபலசேனா பயன்படுத்தியிருக்கிறது. அத்துடன் இது சிங்கள நாடு என்று பேரினவாதக் கடும் போக்கில் இவர் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் சிறுபான்மை மக்களை பெரும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

2009 இற்குப் பிறகு மகிந்த ராஜபக்ச காலத்தில் பொதுபலசேனா உருவாக்கப்பட்டது. இதன் பின்னணியில் இன்றைய ஆட்சியாளர்களே இருப்பதாக ஸ்ரீலங்கா எதிர்கட்சிகள் குற்றம் சுமத்தின. ஸ்ரீலங்கா அரசின் பேரினவாதக் கடும்போக்குக் கருத்துக்களை பரப்புகின்ற முகவராக அவர் செயற்படுவதாகவும் தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்க பயன்படுத்தப்படுகின்ற கருவியாகவும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லீம்மக்கள்மீது கடுமையான வெறுப்பை ஞானசார தேரர் கக்கி வந்தார்.

2017 இல் ஸ்ரீலங்கா பொலிசாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ஞானசாரதேரருக்கு பின்னர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு ஆறு ஆண்டு சிறைதண்டனை வழங்கப்பட்டது. 2019 இல் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவருக்கு பொதுமன்னிப்பு அளித்தார். இப்படிப்பட்ட ஒருவரைத்தான், நீதிமன்றத்தை மதிக்காத சட்டத்தை மதிக்காத ஒருவரைத்தான் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற சட்டத்தை இயற்ற ஜனாதிபதி கோத்தபாய தெரிவு செய்துள்ளார் என்றால் அந்தச் சட்டம் எப்படி இருக்கும் என்பதை உணரலாம்.

உண்மையில் ஸ்ரீலங்கா ஒரு விசித்திர நாடுதான். இங்கே போராளிகளைப் பயங்கரவாதிகள் என்பார்கள். குற்றவாளிகளை நீதிபதிகள் ஆக்குவார்கள். சட்டத்தை மதிக்காதவர்களை சட்டம் இயற்றும் செயலணிக்கு தலைவராக்குவார்கள். இனப்படுகொலை செய்பவர்களை ஆட்சியாளர்கள் ஆக்குவார்கள். கொலைகளை செய்பவர்களுக்கு விடுதலை கிடைக்கும். அப்படியொரு நகைச்சுவைக் கூத்தாகவே ஞானசாரதேரர் தலைமையிலான ஒரே நாடு ஒரே சட்டம் இயற்றலும் தொடங்கப்பட்டுள்ளது. அதேநேரம் இதில் உள்ள ஆபத்துக்களை நாம் அவதானத்துடன் உணரை வேண்டும். ஞானசார தேரரின் உருவாக்கமும் நோக்கமும்கூட இந்த சந்தர்ப்பத்தில் அம்பலமாகியுள்ளது.

1958 இல் தனிச்சிங்கள சட்டத்தை அப்போதைய பிரதமர் பண்டார நாயக்கா உருவாக்கிய போது அதற்கு பின் தளத்தில் நின்றவர்கள் இன்றைய ஞானசார தேரர் போன்ற பிக்குளே. தனிச்சிங்கள சட்டம் இலங்கையில் பெரும் இரத்த ஆற்றை ஓட வைத்தது. ஆயிரக் கணக்கான தமிழர்களை கொன்றழிக்கும் கருவியானது. இரும்புக் கம்பிகளை காய்ச்சி தமிழர்களினக் முதுகில் ஸ்ரீ என முத்திரையிட்ட கொடூரங்கள் அரங்கேற்றப்பட்டன. தமிழ் மக்கள் தனிநாடு குறித்து சிந்திக்கவும் அதுவே நியாயமென்ற மனநிலைக்குச் செல்லவும் தனிச்சிங்களச் சட்டம் வழிகோலியது.

58 ஆம் ஆண்டில் இந்தக் கொடுமை நடப்பதற்கு சுமார் பத்து ஆண்டுகளுக்கு முந்தைய நிலையில் ஸ்ரீலங்காவின் சுதந்திரத்திற்காக தமிழர்களும் உழைத்தார்கள். தனிச்சிங்கள சட்டத்தை இயற்றிய பண்டார நாயக்காவை பிரித்தானிய சிறையில் இருந்து மீட்டு வந்தார் சேர் பொன் இராமநாதன். இலங்கைத் தீவு இரண்டாகப் பிரிக்கக்கூடாது என்ற நிலைப்பாடு எடுத்த தமிழ் தலைவர்களுக்குப் பரிசாக 58 இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது தனிச் சிங்களத்தை பிரகடனப்படுத்தும் சிங்கள தேசத்திடமிருந்து தமிழர் தேசத்தை விடுவித்து பிரிந்து செல்வதே வழி என்றும் அத்தகைய தீர்மானத்திற்கு தமிழர்களை தள்ளியது பண்டாரநாயக்கா என்றும் அன்றைய சிங்கள தலைவர்களே குரலிட்டனர்.

அதற்கு ஒப்பான ஒரு நிகழ்வைத்தான் தற்போதைய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச எடுத்திருக்கிறார். ஸ்ரீலங்கா தற்போது பெரும் பொருளாதார பின்னடைவில் பெரும் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. தென்னிலங்கையில் ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக கடும் அலைகள் வீசத் தொடங்கியுள்ளன. தற்போதைய அரச தலைவர் பெரும் வீழ்ச்சியையும் பொதுமக்களின் எதிர்ப்பையும் பெற்று வருகிறார். இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக இத்தகைய சட்டம் ஒன்றை உருவாக்கி தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாத அலையை ஏற்படுத்தி தொடர்ந்தும் ஆட்சியைத் தக்க வைப்பதுவே திட்டமாகும்.

"தனியார் சட்டங்களை மனித உரிமைகள்சார் தரத்திற்கு அமைவாக மாற்றியமைப்பதாக இருந்தால், அதனைச் செய்வதற்கான இயலுமையும் நேர்மையுடைய பிரதிநிதிகளால் வழிநடத்தப்படுகின்ற தேர்ச்சிபெற்ற குழுவொன்று அவசியமாகும். இருப்பினும் தற்போது ஞானசாரதேரர் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய புதிய ஜனாதிபதி செயலணி அதற்கு முற்றிலும் நேர்மாறானதாகவே காணப்படுகின்றது. எனவே செயலணி தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் உடனடியாக இரத்துச்செய்யவேண்டும்" என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

எனினும் இலங்கையில் தற்போதுள்ள சட்டங்களே சிறுபான்மையினரை குறிப்பாக ஈழத் தமிழ் மக்களை ஒடுக்கி அழித்து துடைக்கின்ற வகையில் இருக்கிறது. இந்த நிலையில் கோத்தபாயவின் சிந்தனையில் ஞானசார தேரரின் தலைமையில் இயற்றப்படுகின்ற ஒரே நாடு ஒரே சட்டம் என்பது இலங்கைத் தீவு முழுவதையும் ஒரே இனம் ஆக்கும் திட்டத்தையே கொள்ளலாம். அதாது தமிழ் பேசும் மக்கள் இல்லாதொழிக்கப்பட்டு இலங்கைத் தீவு முழுதையும் சிங்களவர் வசமாக்குவதாகவே அமையும்.

காலம் காலமாக ஸ்ரீலங்கா அரசின் சட்டங்களும் நடவடிக்கைகளையும் தமிழ் மக்களை ஸ்ரீலங்கா பிரஜைகள் இல்லை என்பதையே உணர்த்தியும் நடைமுறைப்படுத்தியும் வருகிறது. இதன் இன்னொரு உச்ச வடிவமாக பெரும் அபாயமாக ஒரே நாடு ஒரே சட்டம் இயற்றும் முயற்சி நடக்கின்றது. தமிழர்கள் ஸ்ரீலங்கன் இல்லை என்பதை ஸ்ரீலங்கா அரசு உணர்த்துகின்ற போதெல்லாம் தமிழர்கள் தமது அடையாளத்தையும் இருப்பையும் தமது நிலத்தையும் பாதுகாக்க அறிவுபூர்வமாக செயல்படவேண்டும்.


20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans
- Cheque Cashing rate of 2.5%

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
#4986,4980,#0372,#1520,#4993,#4998,Cr53,Cr245,Cr50,Cr66,Cr54,Cr246,Cr226,Cr157,Cr167,Cr187

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

We offer:
Gift cards and all top up
(domestic and international)



தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# அன்பின் தொனி - 628

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**கடவுளை அறிகிற அறிவு அவசியம்**

**3. தேவனுடைய ஆளுகை** - The Soverignity of God

தேவனுடைய ஆளுகை என்பது அவருடைய உன்னதமான நீதியான செயற்பாட்டை விபரிக்கிறது. சகல படைப்புகளுக்கும் மேலாக உயர்த்தப்பட்டவர், தம்முடைய விருப்பப்படி சகலத்தையும் நடப்பிப்பவர், சுயாதீனமாக செயற்படுபவர், ஏதும் அவருடை ஆளுகையை தடை செய்யவோ, நிறுத்தவோ முடியாது என்பதை அவருடைய வார்த்தையே விபரிக்கிறது.

அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன், என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி, உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக்கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன், அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன், அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன். - **ஏசாயா 46: 10-11**

பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள், அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீ ரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன். - **தானியேல் 4: 35**

**4. தேவனுடைய மாறாத தன்மை** - The Immutability of God

என்றுமே மாறாத தேவனுடைய தன்மை அவருடைய தெய்வீக பூரணத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அத்தன்மையை அநேகர் சரிவரப் புரிந்குகொள்ளவில்லை, சகல படைப்புகளிலும் காணப்படாத, காணமுடியாத மேன்மையான ஒரு ஸ்தா னத்திலே அவருடைய மாறாத நிலை அமைந்துள்ளது. தேவன் நித்தியமாகவே மாறாதவராய் இருக்கிறார், அவருடை தேவத்துவம் எந்நிலையிலும் மாறுபடாது மாறுபடவும் மாட்டாது. மனிதன் மாறுவான் ஆனால் தேவன் மாறுவதற்கு அவர் மனிதனல்ல, எனவேதான் அவரை “கன்மலை” என்று விபரிக்கிறோம். சமுத்திரம் மும்முரமாகக் கொந்தளித்தபோதும் அதன் நடுவிலுள்ள கற்பாறை அசைக்கப்படாதபடி இருப்பதுபோல தேவனும் அசைக்கப்படாதபடி என்றும் மாறாதவராய் இருக்கிறார்.

அவர் கன்மலை, அவர் கிரியை உத்தமமானது, அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர். - **உபாகமம் 32: 4**

கர்த்தரைப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை, உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை, எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை. - **1 சாமுவேல் 2: 2**

பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதி ருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? - **எண்ணாகமம் 23: 19**

இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை, தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை, மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான். - **1 சாமுவேல் 15: 29**

ஆரம்பமும் முடிவும் இல்லாத நித்திய தேவன் மாற்றத்தை தெரியாதவர் மாறவேமாட்டார். அவர் நித்திய பிதா, அவரிடத்தில் மாற்றமுமில்லை எந்தவொரு நிழலும் இல்லை.

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது, அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. - **யாக்கோபு 1: 17**

தேவன் மாறாதவர் என்பது அவருடைய தெய்வீக தத்துவத்தில் முதல் இடத்தைப்பெறுகிறது. நித்தியமானவர் என்பது அவருடைய சாதாரண இயல்பு, எனவே அவர் மாறுவர் என்பதற்கு எந்தவித சந்தேகமோ சம்பந்தமோ இல்லை. அவர் இல்லை என்ற நிலையில் ஒருபொழுதும் இருந்ததில்லை, அப்படி அவர் இல்லாமல் போகிற நேரமோ, காலமோ வரப்போ கிறதுமில்லை. அவர் உருவாக்கப்பட்டவருமல்ல, அவருக்குள் வளர்ச்சி என்றும் விருத்தி என்றும் ஒன்றில்லை. இன்று அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே ஏற்கனவேயும் இருந்தார், இனிமேலும் இருப்பார், வரும் காலங்களிலும் அப்படியே இருக்கப்போகிறார். நான் கர்த்தர், நான் மாறாதவர் என்பது அவர் வாக்கு. நான் கர்த்தர், நான் மாறாதவர், ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை. - **மல்கியா 3: 6**

நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர், அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம், அவைகளை ஒரு சால்வையைப் போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர், உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. - **சங்கீதம் 102: 25-27**

**5. தேவனுடைய பரிசுத்தம்** - The Holiness of God

கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாய் இருக்கின்றன. தேவன் ஒருவரே தனித்துவமாகவும், நித்தியமாகவும், மாறாதவராகவும் இருக்கிற பரிசுத்தர். பரிசுத்த வேதாகமம் அவரை “ஒரே பரிசுத்தர்” என்பதை எப்பொழுதும் தெளிவுபடுத்துகிறது, ஏனெனில் அவருக்குள் சகலதும் திறம்பட நிறைவு பெற்றதாய் காணப்படுகிற நற்குணர். பாவ நிளல்கூட படாத தூயவர். பரிசுத்தம் அவருடைய அதி உன்னதமான தெய்வீக இயல்பு. அவருடை பரிசுத்தத்தை மேலும் இப்படியாக பரிசுத்த வேதாகமம் விபரிக்கின்றது: தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே.தேவன் பரிசுத்தத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறார்.

தொடரும்...


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.




4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

# இவ்வார ராசிபலன்

**05-11-2021 வெள்ளி தொடக்கம் 11-11-2021 வியாழன் வரையும்**

**மேஷம்:** வம்புதும்புகள் ஒழியும் வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. ஆபரணப் பொருள் களவு போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் ஏற்படும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்களின் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் உருவாகும். தனவரவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். பாதிப்புகள் அகலும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலைகட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,2,8,3
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U

**ரிஷபம்:** புதிய முயற்சிகளால் சாதனை படைக்கக்கூடிய வாரம். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் சார்ந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். முதுகில் வலி வந்து போகும். சக ஊழியர்கள் உதவி கிட்டும். சம்பள உயர்வு கிட்டும். காதல் கை கூடும். விவாக முயற்சிகள் வெற்றி தரும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நிதி நிலைமை சீராகும். பணிவான பேச்சு அவசியம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்பு கிட்டும். வேலை வாய்ப்புக்கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. ஞாபக மறதி ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் தேவை. உழைப்பிற்கான பலன் கிடைக்கும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். புதிய சொத்து சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,0
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,W

**மிதுனம்:** தடைகள் விலகும் வாரம். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தன வரவுகள் உண்டு. குதூகல எண்ணம் அதிகரிக்கும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். பூர்வீக சொத்துக் கிடைக்கும். நினைத்தது நடக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். சுபச் செலவுகள் உண்டு. நண்பர்களால் பாராட்டு கிட்டும். உத்தியோக வாய்ப்பு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்கலச் செய்தியால் மனம் மகிழும். பங்குச்சந்தை லாபம் தரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பழைய கடன் குறையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். அரசியலில் ஆதாயம் உண்டு. பிரச்சனைகள் முடிவுக்கு வரும். நீண்ட நாள் கனவு பலிதமாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் தேடி வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். பேச்சில் பணிவு தேவை. சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பழைய பாக்கி வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். களவுப்போன பொருள் கைக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நட்சத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,5,1,4
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,X

**கடகம்:** வியாபாரம் விருத்தியாகும் வாரம். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். கல்வியில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தாராளமான வருமானம் உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். அரசியலில் ஆர்வம் கூடும். நினைவாற்றல் பெருகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரம் கவனம் தேவை. குதூகல எண்ணம் உருவாகும். கௌரவம் உயரும். தெய்வீகப் பற்று கூடும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபார அபிவிருத்தி ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 1,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K

**சிம்மம்:** சிம்மம்: வெற்றிகள் குவியும் வாரம். தாய், தந்தை உதவி உண்டு. பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப்பெண்கள் கவனம் தேவை. கால்நடைகளால் லாபம் உண்டு. கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. முயற்சிகள் வெற்றிகள் தரும். தீர்த்த யாத்திரை உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி உருவாகி மறையும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். மன அமைதி சீர்குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். செய்தொழில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D

**கன்னி:** புதிய முயற்சிகள் பலன் தரும் வாரம். தொழில் வளம் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளி போடுங்கள். உடல்நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். மன அமைதி கிட்டும். கடன் கச்சைகள் தீரும். மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பாராட்டுக்கள் கிடைக்கும். பெண்களுக்கு மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்தொழில் முன்னேற்றம் உண்டு. உத்தியோக வாய்ப்பு கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவர். ஒரு சிலருக்கு கௌரவப் பதவி தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,7,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


**துலாம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். போதிய தனவரவு இருக்கும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கை தரம் உயரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணியில் இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். எண்ணம் வண்ணமயமாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். பொருளாதாரம் உயரும். நண்பகலில் நல்ல தகவல் வரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். பணியில் பாராட்டு கிடைக்கும். கூட்டுத் தொழிலில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். பயணம் அனுகூலம் தரும். கண்ணாடிப் பொருட்கள் சேதமடையும். கலக்கமான மனநிலை காணப்படும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். சேமிப்பு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். பெண்களுக்கு யோகம் கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். தொட்ட காரியங்கள் ஜெயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,1,8,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: FT

**விருச்சிகம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். கலை ஆர்வம் கூடும். வளமான சிந்தனைகள் உருவாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். இடையூறுகள் அகலும். எதிரிகள் தொல்லை குறையும். உல்லாசப் பயணம் இனிக்கும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். கன்னிப்பெண்களின் எண்ணம் ஈடேறும். வெளி வட்டார பழக்கம் நலம் தரும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப் பலன் கூடும். உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. ஞாபகத்திறமை அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிடைக்கும். முன் கோபத்தை குறைத்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கஷ்டகாலம் மறையும். சந்தோஷமான காலம் உதயமாகும். பணியில் உயர்வு உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 3,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K

**தனுசு:** திட்டமிட்ட காரியம் வெற்றி கிடைக்கும் வாரம். மதிப்பும், மரிதையும் உயரும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுதுறையில் ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். புதுமையை விரும்புவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. வீடு, மனை யோகம் உண்டு. ஆபரணத்தொழிலில் கவனம் தேவை. பங்குத் தொழிலில் லாபம் தரும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்டநாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கல நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,9,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T

**மகரம்:** தேக ஆரோக்கியம் மிளிரும் வாரம். எண்ணங்கள் பலிதமாகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். உடல்சோர்வு ஏற்படும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. நட்பு வட்டம் விரிவடையும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் வளம் பெறும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். எதிரிகள் தொல்லை ஒழியும். உற்சாகம் மேலோங்கும். தொழில், போட்டி மறையும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். விபரீத எண்ணம் விலகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களால் வெகுமதி கூடும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 9,2,6,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K

**கும்பம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். வார்த்தைகளில் கவனம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதார வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. புதிய வாய்ப்புகள் வரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். நல்லச் செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 4,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,A

**மீனம்:** மாற்றுச் சிந்தனை உதயமாகும் வாரம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம்புரியாத சந்தோ'ம் ஏற்படும். பிள்ளைகளால் தன வரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வெகுமானம் கிடைக்கக்கூடிய அற்புதமான காலம். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். வறுமைகள் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 1,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,L

# தீபாவளி புனைகதைகள் தமிழ் இலக்கியமா?

## மின்னல் வானொலியின் "அமுதே தமிழே" நிகழ்ச்சியில் தமிழ்த் துரோகம்



நக்கீரன்

கோலாலம்பூர், நவ.05:

கல்வியிலும் மொழிசிந்தனையிலும் மற்றும் இலக்கியப் படைப்பிலும் சமயம் கலவாதிருத்தல் சிறப்பு. மொழி அறிஞர்களின் பார்வையும் அதுதான். அந்த வகையில் மலேசிய அரச தமிழ் வானொலியான மின்னல் பண்பலையில் தமிழ் இலக்கியத்திற்காக உருவாக்கப்பட்ட "அமுதே தமிழே" என்னும் நிகழ்ச்சியில் வாரம் தப்பாமல் சமய இலக்கியமும் இடம்பெறுவது பொருத்தமா என்பதையும் ஏற்புடையதுதானா என்பது குறித்தும் சான்றோர் பெருமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவ்வாறாக ஒரு சமய சார்புடைய கருத்து மட்டும் தொடர்ந்து இடம்பெற்றால், "அமுதே தமிழே" என்னும் நிகழ்ச்சி தன்னுடைய இலக்கியப் பாட்டையை இழக்க நேர்வதுடன் அன்றி, தமிழை தாய்மொழியாகக் கொண்ட பிற சமயத்தவர் இந்த நிகழ்ச்சியைப் புறக்கணிக்கவும்கூடும்.



அல்லது "அமுதே தமிழே" நிகழ்ச்சியில் எல்லா சமயங்களுக்கும் வாய்ப்பளித்து, அது இலக்கிய நிகழ்ச்சி என்பதையும் மாற்றிவிட வேண்டும்.

இதைவிட, 2021 அக்டோபர்த் திங்கள் நிறைவு நாளில் (தீபாவளி பண்டிகைக்கு முந்தைய ஞாயிறு) இடம்பெற்ற வாராந்திர நிகழ்ச்சியான "அமுதே தமிழே"-வில் தீபாவளி புனைகதைகளை தமிழ் இலக்கியம் என்பதாக வரையறுத்தனர். இது, அப்பட்டமான தமிழ் துரோகம் ஆகும்.

மீனா குமாரி என்னும் அறிவிப்பாளர், ராஜ சேகரன் காலத்தில் அரச தமிழ் வானொலியான் மின்னல் பண்பலை வானொலியில் இருந்து இடைநீக்கப்-பட்டவர் அதன்பின் டிஎச்ஆர் ராகா வானொலியில் அறிவிப்பு பணி மேற்கொண்டிருந்தார். இப்பொழுது, மின்னல் வானொலியின் நிருவாகியான கிரு'ணமூர்த்திக்கு மிகவும் பழக்கமானவர் என்பதால், மீண்டும் திடீரென்று மின்னல் வானொலியில் குதித்திருக்கிறார்.

அவர் படைத்த அமுதே தமிழே நிகழ்ச்சியின்போதுதான், தீபாவளி புனைகதைகளை தமிழ் இலக்கியம் என்று வலிந்து வலிந்து சொன்னார்.

உலகின் தொல்குடியினரான தமிழரின் ஆன்மிகப் பயணம் மிகமிக நெடியது ஆதித் தமிழனின் ஆன்மிக எண்ணம், முதன்முதலில் பயத்தில்தான் உருவானது. "ஆ.." என்னும் அலறல் சத்தத்தால் மருண்டபொழுதும் "ஓ"வென்ற மிரட்சிகலந்த ஓல ஒலியால் நடுங்கி ஒடுங்கிய வேளையிலும் உருவானதுதான் ஆதித் தமிழனின் ஆன்மிகப் பயணத்தின் தொடக்கப்புள்ளி.

இடி, மின்னல், சூரைக் காற்று, காட்டுத் தீ, திடீரென எதிர்ப்படும் கொடிய வன விலங்குகள் ஆகியவற்றைக் கண்டு மிரண்ட அந்நாளையத் தமிழன், இன்னொரு வகையாலும் இரவில் தூக்கத்தைத் தொலைத்து நிம்மதியை இழந்தான்.

வேட்டை வாழ்க்கையை மேற்கொண்டிருந்த அக்காலத் தமிழன், காட்டை ஒட்டியப் பகுதிகளில் குறிப்பாக புதர்களை அண்டி அடைக்கலம் தேடிக் கொண்டிருந்தான். அந்த நாட்களில் தன்னுடன் வாழ்ந்த ஒருவன் இறந்து விட்டால், அவன் இறந்து விட்டான் என்பதை அறியாமலேயே, அசைவற்று நிலத்தில் சரிந்துகிடந்த சகமனிதனை தான் வாழ்ந்துவந்த புதருக்கு அருகிலேயே கிடத்திவிடுவான்.



இரண்டொரு நாட்களில் அந்த உடல் கெட்டு, அழுகுவதால் எழும் சகிக்க முடியாத நாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியாதவனாகவும் அதிலிருந்து மீளும் வழிவகை அறியாதவனாகவும் பரிதவித்தான் போதாக் குறைக்கு, அழுகிய உடல்களை பிய்த்துத் திண்பதற்காக இரவு நேரங்களில் ஒன்றுகூடும் ஓநாய், நரி போன்ற விலங்குகளுடன் பிணந்தின்னி கழுகுகளும் பாம்புகளும் கூடி ஒன்றையொன்று அடித்துக் கொண்டு எழுப்பும் சத்தத்தாலும் கழுகுகளின் இரைச்சலாலும் நரிகள் எழுப்பும் ஊளையினாலும் இரவில் தூங்க முடியாமல் கொடுந்துன்பத்தை அனுவிப்பது அன்றாடம் தொடர்ந்தது.

இந்தக் கட்டத்தில்தான் அடைக்கலத்தைத் தேடி, தன்னைச் சூழ்ந்திருக்கும் இயற்கை அன்னையின் பல்வேறு வடிவங்களை வணங்க முற்பட்டான்.

பொழுது புலரும்பொழுதும் சாயும்பொழுதும் தோன்றும் செஞ்சூரியன், மழை, நெருப்பு, அருவி போன்ற இயற்கை வடிவங்களைத் தொழ தொடங்கியவன், கூடவே, வாலைக் குமரி வடிவினளான இளங்குமரியை உருவகம் செய்து, அவளின் கைகளில் வேட்டைக் கருவிகளையும் வைத்து வணங்க முற்பட்டான்.

இந்த முறைதான் பின்னர் கொற்றவை வணக்க முறையாக உருமாறி, இப்பொழுது இந்து சமயத்தில் இடம்பெற்றுள்ள ஆறு கொள்கைகளில்(பெயருக்குத்தான் ஆறு ஐயப்பன் வழிபாடு, அனுமன் வணக்கம், முனியாண்டி சாமி வணக்க முறை, சாய் பாபா வழிபாடு, காட்டேரி வழிபாட்டு முறை, சனி பகவான் வழிபாடு, குல தெய்வ வணக்கம், வீட்டுக்கு வீடு கடைப்பிடிக்கப்படும் முன்னோர் வழிபாடு, இடுகாட்டிலும் சுடுகாட்டிலும் அதிர்'ட தேவதையை வரவழைத்து வணங்குதல், அருள் வந்ததாகவும் வாக்கு சொல்வதாகவும் காட்டிக் கொண்டு ஆடும் மனிதர்களின் காலில் விழுதல், பலவித காவடிகளை சுமந்து செல்வோரிடம் சிரம் பணிதல், அன்னை-தந்தையின் தாள் பணிதல், நெருக்கடியான நேரத்தில் உதவி செய்பவரை "குறுக்கே வந்த கும்பிடபோன தெய்வம்" எனல், மந்திரித்த கயிறை கையிலும் தாயத்தைக் கழுத்திலும் அணிதல், இல்லத்தரசியர் கணவனையே கண்கண்ட தெய்வமாக வணங்குதல் என்றெல்லாம் கணக்கிட்டால் இந்து சமயத்தில் இடம்பெற்றுள்ள ஆன்மிகக் கொள்கைகளுக்கு எண்ணிக்கையே இல்லை) ஒன்றான சக்தி வழிபாட்டு முறை.



ஆதிகாலம், கற்காலம், உலோகக் காலம், பொது மறுமலர்ச்சிக் காலம், நதிக்கரையோரம் மலர்ந்த வேளாண்தொழில் நாகரிகக் காலம், மனிதன் நவீன நாகரிகத்தை எட்டியபின் தோன்றிய இயந்திர தொழில் காலம், காகிதமும் அச்சுத் தொழிலும் மலர்ந்த புதுயுகம், மொழியும் கல்வியும் உருவாகி அறிவியலுக்கு அடித்தளம் அமைத்த காலம் என தொடர்ந்து தமிழனின் ஆன்மிக எண்ணத்திலும் வழிபாட்டிலும் மாற்றம் நிகழ்ந்து கொண்டே வந்தது.

இதற்கிடையில், ஆட்சி நிருவாகம், உள்ளூரிலும் கடல்கடந்தும் மேற்கொண்ட வணிகம், அரசியல் சிந்தனை என புதுப்புது பாங்கு மனிதனிடத்தில் மலர்ந்ததால் அந்தந்தக் காலத்தே சமய சிந்தனையும் அடுத்தடுத்து மறுமலர்ச்சி கண்டு வந்தன.

இப்படியாக தமிழன் தன்னுடைய ஆன்மிகப் பயணத்தை காலந்தோறும் பரிமாண வளர்ச்சிக்கு உட்படுத்தி வந்த வேளையில், முல்லை நிலத்து மக்கள் தங்களின் வழிபாட்டு நாயகனாகக் கொண்டது தமிழ்க் கடவுள் என்னும் முருகனைத்தான்.

அதையடுத்து சைவ நெறி தழைத்தது. சைவ நெறியைப் பொறுத்தவரை, அது ஒரு முதிர்ச்சிபெற்ற முழு சமயமாக தமிழர்க்கு வாய்த்தது. காரணம் சக்தி வழிபாட்டையும் உள்ளடக்கிய முழுமுதற் கடவுளான சிவபெருமானை வழிபாட்டு நாயகனாகக் கொண்ட சமயமாக சைவம் விளங்கியது.

சைவ நெறிக்கு ஏராளமான சிறப்புகள் உண்டு. தமிழரை தமிழர் ஆட்சி புரியாத காலத்தில் தமிழ் மொழி தழைக்கவும் துணை நல்கிய சமயம், சிவமயமான சைவ சமயம். ஆழ்வார் பெருமக்களும் நாயன்மார் சான்றோரும் போற்றிய சைவத்தில் பூசை, புனஸ்காரம, அபிஷேகம், ஆராதனைக்கு வேலை இல்லை.

தொண்டறம்.. தொண்டறம்.. தொண்டறம்.. என, தொண்டறமே சைவத்தின் மூலமாக அமைந்தது.

அடியார் பெருமக்கள், தன்னைக்கூட வணங்காமல், பிற அடியார்க்கு செய்யும் தொண்டையே தனக்கான தொண்டாகக் கருதிய சிவபெருமான், அத்தகைய சிவத் தொண்டர்களைத் தானாக அணுகி, அவர்களுக்கு அருளளித்த வரலாறு சைவ நெறியில் ஏராளம் உண்டு. அதனடைப்படையில், சைவக் குரவர்களை ஆண்டவனே இறங்க வந்து ஆட்கொண்ட வரலாறு சிவத்திற்கே உரிய தனிச் சிறப்பு. இதற்கு சரியான சான்று சிறு தொண்டர் வரலாறு. இப்படிப்பட்ட சிவநெறிக்கு ஓர் அபகீர்த்தியும் உண்டு.

சைவம் உருவாதற்கு முன் தமிழர்கள் பற்றி இருந்த பெருஞ்சமயம் சமணம். சமணத்திற்கு சற்றே முன் உருவாகி பரந்துபட்ட மதமாக விளங்கியது பௌத்தம். மௌரிய சக்கரவர்த்தி அசோகப் பெருமன்னன் கலிங்கப் போரின் வெற்றிக்குப் பின் மனம்மாறி, போரை வெறுத்து, அமைதி மார்க்கத்தை மேற்கொண்டு பௌத்தத்தை ஏற்று அதை உலகெங்கும் பரப்பினான்.

அதனால்தான், இலங்கை, சீனா, ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்னாம் போன்ற நாடுகளிலெல்லாம் பௌத்தம் இன்று பரவி விரவி இருக்கிறது.

அப்படிப்பட்ட பௌத்தம் இன்று இந்தியாவில் இல்லை என்றே கூறலாம் அதேவேளை, பாடலிபுத்தரத்தை(இன்றைய பாட்னா) மையம் கொண்டிருந்த பௌத்தம் தமிழ் நாட்டிற்கு எட்டவில்லை. பௌத்தத்தைவிட வலிமையான நன்னெறியும் உயிரணைய கட்டொழுங்கும் சமணத்தின் மூல ஆதாரமாக இருந்தன.

திருக்குறளின் கடவுள் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினவன், வேண்டுதல் வேண்டாமை இலாதவன், இருள்சேர் இருவினையும் சேராதவன், ஐந்தவித்தவன், தனக்குவமை இல்லாதவன், அறவாழி அந்தனன், எண்குணத்தான் என்னும் கடவுளர் பெயரனைத்தும் சமணக் கடவுளைக் குறிக்கும் சொற்களாகும். திருக்குறளில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்துகூட திருவள்ளுவரால் இயற்றப்படாமல், பின்னர் இடைச்செருகலாக இணைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுவதுண்டு. ஆனாலும், திருக்குறள் சமண இலக்கியத்தை சார்ந்ததுதான். சமண வழிபாட்டு நாயகனுக்கு உருவம் இல்லை அவர் அருவ நிலையை எய்தவர்.

தவவாழ்வையும் கடுந்துறவறத்தையும் வலிந்து ஏற்றுக் கொண்ட சமண வாழ்க்கை முறையில் சிற்றின்பத்திற்கோ களியாட்டத்திற்கோ சிறிதும் இடம் இல்லை. தமிழிலக்கியத்தின் பெருமையை பறைசாற்றும் ஐம்பெரும் காப்பியங்-களில் மக்கள் காப்பியம் என புகழப்படும் சிலப்பதிகாரமும் ஆன்மிக எல்லையை வரையறுத்துக் கொண்ட மணிமேகலையும்கூட சமண சமய கருத்துகளைக் கொண்ட இலக்கியப் பெட்டகங்கள்தான். நாலடியார் என்னும் நன்னெறி இலக்கியமும் சமண நெறிக்குரியதுதான்.



அப்படிப்பட்ட சமண மதத்தினர் 10 ஆயிரம் பேரை ஒரே சமயத்தில் கழுவில் ஏற்றிக் கொன்றுவிட்டு, அந்த அதிரடியில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதுதான் சைவம். ஆக, குருதி சகதியிலும் மனித மாமிசத்திலும் தவழ்ந்து தவழ்ந்து அசைவமான முறையில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டதுதான் சைவம்.

இவை யாவும் ஒருபுறமிருக்க, பௌத்தம், சமணம், சைவம் ஆகிய மூன்று சமய நெறிகளில் பௌத்தமும் சமணமும் வழக்கழிந்து ஒழிந்துவிட்டன. சைவமும் ஏறக்குறைய அந்த நிலையை எட்டி வருகிறது. 20-ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதிவரை "தமிழும் சைவமும்" தமிழர்க்கு இரு விழிகளைப் போன்றவை என்று சொல்லப்பட்ட நிலைமாறி, இன்று "தமிழும் சமயமும்" தமிழர்க்கு இருவிழியென சொல்லும் நிலையை ஆரியம் ஏற்படுத்திவிட்டது தமிழரின் சைவ சமயத்தை இந்து சமயம் விழுங்கி விட்டது.

**நக்கீரன்** - Nakkeeran **013-244 36 24**

*(தொடர்ச்சி அடுத்த வாரம்...)*


## CAREGIVER WANTED (LIVE-IN)

- Looking for a Male caregiver to look after a 91-year-old father and 78-year-old mother
- The language requirement will be English and Tamil
- Someone who is caring, trustworthy and who would live with them like a part of the family
- Previous experience, related training and passion for the job will be an asset
- Salary will be negotiated
- Interested candidates, please email your resume to **nmaithely@gmail.com**


*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 33)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

இவற்றைக் கேட்டு இளவரசர் வியப்படைந்தார். தன் முடிவை உறுதிப்படுத்தினார். இப்படி என் தந்தைக்கும் ராஜ்ஜியத்திற்கும் பெரும் அபாயம் உள்ள வேளையில் என் தந்தை அருகில் இருப்பதே மேல் என்று தன் முடிவில் உறுதி கொண்டார். பூங்குழலியை அழைத்து, 'சமுத்திரக் குமாரி நீ என்னை தொண்டைமான் ஆற்று முகத்துவாரத்திற்கு அழைத்துச் செல். எனக்ககாக காத்திருக்கும் கப்பலில் ஏறி தஞ்சை போக வேண்டும்' என்றார். அப்பொழுது பூங்குழலி, 'இது என்ன நான் அவரைக் காப்பாற்ற வந்தேன்! இவர் அகப்படுகிறேன் என்கிறாரே! என்று ஆதங்கப்பட்டபடி, ஆகட்டும் வழிகாட்ட நான் வருகிறேன்' என்றாள். பின்னர் இளவரசரும், சேனாதிபியும், வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் குதிரையில் புறப்பட்டனர். பூங்குழலி யானை மீது சென்றாள். பாத்திபேந்திரன் விடை பெற்றான். இராஜபாட்டையின் ஊடாக பிராயணத்தை மேற்கொண்டனர். இளவரசர் வருகிறார் என்று அறிந்த சனங்கள், கும்பல் கும்பலாக கூடி, 'இளவரசர் அருள்மொழிவர்மர் வாழ்க! சேனாதிபதி கொடும்பனார் வேளாளர் வாழ்க!' என்று கோகூஷமிட்டனர். பிரயாணம் பெரும் தடங்கலாக நடைபெற்றது. இதனால் காட்டுவழியில் தம் பயணத்தை மாற்றிக் கொண்டனர். சிறிது தூரம் சென்றதும் மீண்டும் ஓர் சனக் கும்பல் தாரை, தப்பட்டை, கொம்பு, பேரிகை முழங்கினர். உடனே சேனாதிபதி அங்கு சென்றார். மக்கள் திரளோ, 'ஈழத்தரசர் அருள்மொழிவர்மர் வாழ்க! அரசர் அருள்மொழிவர்மர் வாழ்க!' என்ற கோஷத்தை ஓயாது திரும்ப திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு இடைவிடாது ஒலிக்கும் இந்த கோஷத்தின் பொருள் என்ன? என்று அறிந்துகொள்ள அந்தக் கூட்டத்தின் தலைவனை அழைத்தனர். அவன் மிகப் பணிவுடன், 'அரசே பன்னெடுங் காலமாக இந்த ஈழநாடு ஒரு நிலையான அரசு இல்லாமல் அவதிப்பட்டு வருகிறது. பொன்னியின் செல்வர் ஈழநாடு அரசர் ஆக வேண்டும். எங்கள் கோரிக்கையும், இந்த நாட்டில் வாழும் எல்லா ஜனங்களுடைய விருப்பமும் அது தான். தமிழர்கள், சிங்களவர்கள், சைவர்கள், பௌத்தவர்கள், துறவிகள், இல்லறத்தார் எல்லோரும் அதையே விரும்புகிறார்கள். இளவரசருக்கும், அவரைச் சேர்ந்தவர்களிற்கும் நாம் விருந்து ஏற்பாடு செய்துள்ளோம். விருந்து உண்டு மகிழ்ந்து போகும்படி வேண்டிக் கொள்கிறோம்' என்றான். இதே வேளை ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் பேசிக் கொண்டனர். 'இது எல்லாம் சேனாதிபதியின் வேலை!' பிரயாணத்தை தாமதப்படுத்துகிறார். ஈழத்தரசர் அருள்மொழிவர்மர் வாழ்க என்ற கோஷத்தை மக்களைப் போடவைத்து, நேற்று பிக்குகளிடம் இலங்கையில் மணிமுடி வேண்டாம் என்று மறுப்புத் தெரிவித்ததை மாற்றப் பார்க்கிறார்! அல்லது என்னதான் சேனாதிபதியின் நோக்கம்? தன் குடும்பப் பெண் வானதியை இளவரசருக்கு மணம் முடித்துக் கொடுக்க அவரை இலங்கை அரசராக்கி, மணிமுடி சூட வைக்க வேண்டும். இதற்காக புத்த பிக்குகளை ஏவிவிட்டவரும் அவரே! என்றனர். இங்கோ பூங்குழலி தாமரைக் குளத்தருகில் நின்று, 'இது என்ன இளவரசரைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் சுற்றிக் கொண்டிருக்கிறதே! எப்படி அவரிடம் நான் என் எண்ணங்களை வெளியிடுவேன்? என் ஆசை மண்ணோடு மண்ணாகப் போகிறது! காப்பாற்ற வேண்டிய இளவரசரைக் காட்டிக் கொடுக்க அழைத்து வர வைத்துவிட்டார்கள். நான் என்னை மாய்த்துக் கொள்வதே நல்லது' என்று எண்ணுகையில் அவள் அருகில் ஒரு கத்தி வந்து விழுந்தது. 'இது என் கத்தி வந்தியத்தேவன் என்னிடம் இருந்து புதறில் எறிந்த கத்தி எபபடி இங்கே? யாரோ என்னைக் கொல்ல முயற்சிக்கின்றார்கள். நல்லது நல்லது' என்று சொல்லிக் கொண்டாள். அதன் பின்னர் பிரயாணம் மீண்டும் தொடர்ந்தது. காட்டு வழியில் செல்லும் போது அம்பு ஒன்று இளவரசரைக் குறி பார்த்து வந்தது. தற்செயலாக அவர் தப்பிவிட்டடார். எல்லோரும் திகைத்து நின்றனர். 'சேனாதிபதி அவர் வீரர்களுக்கு, உடனே பகைவனைக் காட்டுக்குள் தேடி வரும்படி கட்டளையிட்டார். ஆனால் யாரும் அகப்படவில்லை. சேனாதிபதி நான் உயிரோடு தஞ்சை செல்ல விரும்பகிறேன். நான் குற்றமற்றவர், எனது தந்தையிடம் செல்ல விரும்பகிறேன். இதற்கு நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன். எனக்கு யானையின் பாசை தெரியும்! யானைகளும் நான் சொல்வதைக் கேட்கும். இதனால் நான் யானைப் பாகன் வேடம் போடுகிறேன்' என்றார் இளவரசர். அதற்கு சேனாதிபதி விருப்பமின்று 'ஆம் ஆம்' என்றார். உடனே இளவரசர் பூங்குழலி சென்ற யானையில் பூங்குழலிக்கு யானைப் பாகனானார். பூங்குழலி மனதில் இன்பம் கடல் போல் பரந்து விரிந்து சமுத்திரமாகியது. இளவரசர் பூங்குழலியைப் பார்த்து, நான் உன்னுடன் இருப்பது பற்றி ஏதாவது கலக்கமாக இருக்கிறாயா? என்றபடி யானையை வேகப்படுத்தினார். 'உனக்கு பயமா?' என்றும் வினவினார். பூங்குழலி, 'இது என் பாய்க்கியம் இளவரசர் நீங்கள் பக்கம் இருக்க எந்த ஆபத்து வந்தாலும் வரட்டும்' என்றாள். 'சரி நீ இருக்கின்ற பீடத்திற்கு அருகில் உள்ள கயிறுகளால் உன்னைக் கட்டிக் கொள்' என்றார் இளவரசர். பின்பு யானையின் மந்தகத்தை தடவியபடி அதன் காதில் ஏதோ சொல்ல, யானையும் வேகமாக நடக்கத் தொடங்கியது.

மேலும் ஏதோ சொல்ல ஓட்டமும், நடையுமாக பிளிறியபடி ஓடத் தொடங்கியது. பூமி அதிர்ந்து, எட்டுத் திசையும் நடுங்க யானை அடவியுள் நுழைந்தது. பூங்குழலியோ சாவின் துயர் கண்டாள். யானை, யானை இறவுத் துறையை அடைந்து நின்றது. மரங்களால் சூழப்பட்ட குளக்கரைப் பகுதியில் யானையில் இருந்து இளவரசர் இறங்கினார். பூங்குழலிக்கு சொர்க்கத்தில் பயணம் செய்தது போல் இருந்தது. அவளால் இறங்க முடியவில்லை. இளவரசரோடு பிரயாணம் செய்த இன்பமான நேரத்தை அவளால் மறக்க முடியவில்லை. அந்த நேரம் இளவரசரும், 'பூங்குழலி உன்னை எனக்கு மிகவும் பிடித்துள்ளது' என்றார். அதனால் அவள் மனம் ஆனந்த நீரோட்டத்தில் அலைபாய்ந்தது. யானை மீது இருந்து இறங்கிய பூங்குழலியும், அருள்மொழிவர்மரும் குளக்கரையில் இருந்தபடி உரையாடினர். அந்த உரையாடலில் இளவரசர், 'பூங்குழலி இலங்கைத் த°வில் வாய் பேசதா பெண் ஒருத்தி பித்துப் பிடித்தவள் போல் அலைந்து திரிகிறாள். அவளை உனக்குத் தெரியுமா? அவளிற்கும் உனக்கும் என்ன உறவு என்று எனக்கு தெரியவில்லை' என்று வினவினார். பூங்குழலி வியப்புடன் இளவரசரைப் பார்த்தாள். 'நான் என் குழந்தை வயதில் தாயை இழந்தேன். தாய் அன்பைக் கொடுத்து என் குருவாய், தெய்வமாய் அந்த மூதாட்டியே இருக்கிறாள். இவள் இலங்கையின் அருகே உள்ள பூதத் தீவில் ஒரு பாறைக் குகையில் இருக்கிறாள். தங்களையும் அங்கு பார்த்தேன். அதனால் தான் முதல் முதலில் கோடிக் கரையில் உங்களைப் பார்த்ததும் வியந்து நின்றேன். அங்குள்ள சித்திரங்களில் உள்ள அதே உருவம் என்று ஒப்பிட்டு தெரிந்து கொண்டேன். இந்த இளவரசர் எப்படி அந்த ஓவியத்துள் என்று திகைத்தேன்! என்ன உறவு என்று புரியவில்லை' என்றாள். 'அந்த மூதாட்டி என் பெரிய தாயார்! தஞ்சாவூர் சிங்காசனத்தில் வீற்றிருக்க வேண்டிய பெண்ணரசி! ஆனால் விதியின் எழுத்து விட்டுவிடவில்லை. மதியின் வலிமை தோற்றுவிட்டது. கதியின் நிலை இப்படியாக இருக்கிறது. நான் தஞ்சாவூர் போக வேண்டியது எத்தனை முக்கியம். நீ செய்த உதவி எத்தனை பெருமிதம்' என்றார் இளவரசர். மேலும், 'பூங்குழலி கேள் என் தந்தை மனவேதனையுடன் நோயுற்றும் இருக்கிறார். காரணம் என் பெரிய தாயார் இறந்து விட்டதாக எண்ணுகிறார். அதனால் பெரிய தாயார் இறக்கவில்லை என்ற செய்தியை என் தந்தையிடம் சொல்ல வேண்டும். இதைப் பற்றி யாரிடமும் சொல்ல விரும்பவில்லை. உன்னிடம் ஒன்று சொல்லுகிறேன் சோதிட சாத்திரப்படி என் கையில் உள்ள சங்கு சக்கர ரேகை எனக்கு சக்கரவர்த்திப் பட்டமும், சிங்காசனமும் பெற்றுத் தரும். அதே வேளை பல அபாயங்களும், கண்டங்களும் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். முடி சூடி, நாடாளும் ஆசை என்னிடம் இல்லை. இந்தப் பிராயணத்தில் அப்படி எனக்கு ஏதாவது ஏறபட்டால், என் தந்தையை சந்திக்க முடியாவிட்டால் இந்தச் செய்தியை என் தந்தையிடம் நீ சொல்ல வேண்டும்!' என்றார். 'இளவரசே தங்களிற்கு ஒரு கண்டமும் நேராது. எந்த அபாயமும் நெருங்காது. நிச்சயம் தஞ்சாவூர் போய் சேர்வீர்கள்' என்று ஆறுதல் கூறினாள் பூங்குழலி. அத்துடன் 'இது எனக்கு கிடைத்த பாய்க்கியம்' என்றாள். பின்னர் தொண்டைமான் நதியின் முகத்துவாரத்தை நெருங்கினர். தொண்டைமான் ஆற்றுக் கரையில் இளவரசரை சிறைப் பிடிக்க வந்த மரக்கலங்களைக் காணவில்லை. பூங்குழலிக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அங்குமிங்குமாக தேடினாள். கப்பலைப் பார்த்த இடத்தை நெருங்கி வந்தாள். அப்பொழுது கப்பல் ஒன்று தண்ணீரில் மூழ்கிக் கிடந்ததைக் கண்டாள். இளவரசர் தண்ணீரில் இறங்கி அங்கு தெரிந்த புலிக் கொடியை எடுத்தார். அவர் மன வேதனையுடன் 'சோழ நாட்டு மாலுமிகள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கப்பல் விட்டுப் பழக்கமுள்ள பரம்பரையில் வந்தவர்கள். ஏன் இப்படி கரையருகில் வந்திருக்க வேண்டும்? இதில் இருந்த வீரர்களுக்கும், மாலுமிகளுக்கும் என்ன நடந்திருக்கும்' என்றவாறு மற்றைய கப்பல் எங்கே என்று தேடினார். பூங்குழலியோ மிகுந்த ஆனந்தமாக, 'அதுவும் மூழ்கிவிட்டதோ?' என்றாள். 'இல்லை சற்று நதிக் கரையோரமாக சென்று பார்ப்பபோம்' என்றார் இளவரசர். இருவரும் நடந்து சென்றனர். பயன் எதுவுமில்லை. இளவரசர், 'பூங்குழலி நீ எனக்கு செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். நீ போய் வா! நான் இந்தக் கப்பல் அருகில் இருக்கிறேன். என்னைத் தேடிக் கொண்டு சேனாதிபதியும், என் நண்பர்களும் வருவார்கள்.' என்றார். அதற்கு பூங்குழலி, 'நான் உறங்கி, உண்டு இரண்டு நாளாயிற்று இப்பொழுது இருட்டியும் விட்டது. நாளை போகின்றேன்' என்றாள். இளவரசர் பூங்குழலியின் பசியைப் போக்க எண்ணினார். அதே சமயம் இளவரசரின் பெரியன்னை ஊமை ராணி அங்கு வந்தாள். வரகரிசிச் சோறும், வள்ளிக் கிழங்கும் உணவாக அளித்தாள். பூங்குழலியும், இளவரசரும் வயிறு நிறைய உண்டு, உறக்கம் கொண்டனர். காலைப் பொழுது புலர்ந்தது. இருவரும் எழுந்து கடலை நோக்கினர்.




அப்பொழுது கடலில் வெகு தூரத்தில் பெரிய கப்பல் ஒன்றும், சிறிய படகு ஒன்றும் கரை நோக்கி வருவது தெரிந்தது. கடற்கரைக்குப் போய் இருவரும் நின்றார்கள். படகில் சேனாதிபதி பூதி விக்கிரமகேசரியும், ஆழ்வார்க்கடியானும் சில வீரர்களும் இருந்தனர். இளவரசரின் கண்கள் வந்தியத்தேவனைத் தேடியது. கரையோரம் வந்த படகில் இருந்து இறங்கிய சேனாதிபதி இளவரசரைக் கட்டித் தழுவினார். 'யானையின் மதம் எப்படி அடங்கியது' என்று ஆவலாகக் கேட்டனர். எங்கே பழுவேட்டரையரின் கப்பல் என்று கேள்விமாரி பொழிந்தனர். இளவரசர், 'வந்தியத்தேவன் எங்கே? என்று கேட்க, 'அவன் அந்தக் கப்பலில் போகின்றான்' என்றார்கள். ஏன் அவன் அந்தக் கப்பலில் போகிறான்? அது யாருடைய கப்பல்? அவனை பழுவேட்டரையர்கள் பாதாளச் சிறையில் அடைக்கப் போகிறார்களே' என்று குமுறினார். 'இளவரசே உங்கள் யானைக்கு மதம் பிடித்த பின் நாங்கள் குதிரையில் ஆனை இறவுத் துறை வந்தோம். அங்கிருந்து இங்கு வரும் வழியில் ஒரு படகுக்காரர் எமக்கு உதவினார். இருள் சூழ்ந்தமையால் விடியும் வரை காத்திருந்தோம். பொழுது புலர்ந்தது படகுச் சத்தம் கேட்டது விழித்துப் பார்த்தேன். படகில் மூன்று பேர் பயணம் செய்தார்கள். உடனே படகு ஒன்று கப்பல் நோக்கிப் போகிறது என்று சேனாதிபதியிடம் சொன்னேன். அவரும் பழுவேட்டரையர் கப்பல் போல் தெரிகிறதே! அதில் இளவரசர் போகிறாரோ என்னவோ என்றபோது உடனே வந்தியத்தேவன் கடலில் விழுந்து நீந்திச் சென்றான்' என்றார் ஆழ்வார்க்கடியான். கடலில் நீந்திச் சென்ற வந்தியத்தேவன் அந்தப் படகில் ஏறிக் கொண்டான். அதில் ஒரு அராபிய மனிதனும், இரு தமிழ் நாட்டு ஆட்களும் இருந்தனர். படகு கப்பலை அடைந்ததும் மூவரும் கப்பலில் ஏறினர். வந்தியத்தேவனும் ஏறிக் கொண்டான். 'இளவரசர் எங்கே? இளவரசர் எங்கே?' என்று கூவினான். அப்பொழுது ஓர் அராபிய மனிதன் இராட்சதனைப் போல் தோன்றினான். அங்கிருந்தவர்கள் வந்தியத்தேவனை வெறித்துப் பார்த்தார்கள். வந்தியத்தேவன், 'நான் என்ன தவறு செய்தேன்? என்றபடி இது சோழ நாட்டு கப்பல் அல்ல பெரிய குதிரைகள் விற்க வந்த அரபு நாட்டு வியாபாரிகள் என்று கண்டு கொண்டான். அத்துடன் மந்திரவாதி ரவிதாசனும், அவனைச் சேர்ந்தவர்களும் அங்கிருப்பதைக் கண்டான். பார்த்திபேந்திர பல்லவனுடன் தம்பளையில் இருந்து வந்தவர்கள், இவர்களைத் தானே இளவரசரைக் கொல்ல வந்த பகைவர்கள் என்றான் ஆழ்வார்க்கடியான்! இந்த அரக்கர்களிடமும், சோழநாட்டு பகைவர்களிடமும் அகப்பட்டுவிட்டேனே. எப்படி தப்புவது? என்று வந்தியத்தேவன் சிந்தித்தான். இக் கரையில் நின்ற சேனாதிபதியும், ஆழ்வார்க்கடியானும், இளவரசரும், பூங்குழலியும் வேகமாக வரும் குதிரைச் சத்தம் கேட்டு அத்திசையை நோக்கினர். குதிரையில் ஊமை ராணி வந்தாள். உடனே இளவரசரும், பூங்குழலியும் அங்கு சென்றனர். ஊமை ராணி இவர்களை தங்களுடன் அழைத்துச் சென்றாள். சேனாதிபதியும், ஆழ்வார்க்கடியானும் தொடர்ந்து சென்றனர. ஊமை ராணி எறி வந்த குதிரை அரபு நாட்டு உயர் சாதிக் குதிரை. இதை இவள் எங்கே பெற்றிருக்க வேண்டும்? என்று சேனாதிபதி யோசித்தார். அவள் தன் குதிரையை நிறுத்தினாள். ஆங்காங்கே பலர் இறந்துகிடந்தனர். பிணங்களின் இரத்தவாடை அடித்தது. இளவரசர் குதிரையில் இருந்து இறங்கி, இது எப்படி நடந்தது! இவர்கள் தமிழ் நாட்டு வீரர்கள்' என்றபடி அங்குமிங்கும் யாராவது உயிரோடு இருக்கிறார்களா என்று தேடினார். அப்பொழுது ஓர் கலபதி, மரக்கலத் தலைவன் குற்றுயிராகக் கிடந்தான். அவன் நடந்தவற்றை விளக்கினான். முதலில் தன் கையில் இருந்த ஒலையை இளவரசர் கையில் கொடுத்தான். அதில், பொன்னியின் செல்வரைக் கைது செய்யுமாறு எழுதப்பட்டிருந்தது. 'இந்த ஓலையுடன் இரு கப்பல்களில் நாகபட்டினம் இருந்து புறப்பட்டேன். இதில் பழுவேட்டரையரின் ஆட்களும் சிலர் இருந்தனர். இந்த ஓலையை இளவரசரிடம் கொடுத்து, அவரை சிறைப்படுத்தி அழைத்து வரவேண்டும்! சேனாதிபதிக்கு எதுவும் தெரியலாகாது என்று கட்டளையிட்டனர். என் கப்பலில் இருந்த வீரர்களில் பலருக்கு இது பற்றித் தெரியாது. தெரிந்து கொண்டதும் அவர்கள் என்னுடன் சண்டை செய்து விட்டு, தாங்கள் பொன்னியின் செல்வனிடம் செல்வதாக சென்றுவிட்டார்கள். நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு வந்து, ஒன்று கூடி ஆலோசித்தோம். அந்த நேரம் அராபிய மூர்க்கர்கள் சிலர் வந்து தாக்கினார்கள். நாங்கள் எதிர் பார்க்கவில்லை எங்களிடம் எந்த ஆயதமும் இருக்கவில்லை. இந்த நிலைக்கு ஆளானோம்' என்றான். அவன் உயிரும் பிரிந்தது. இளவரசரின் கண்களும் கண்ணீர் பொழிந்தது. உடல்களை மரக்கட்டைகளை அடுக்கி தகனம் செய்தனர்.

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**

**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

# பருத்தித்துறை தும்பளை கலைக் குரிசில் பா. இரகுவரன்



பருத்தித்துறையிலே தும்பளை என்றொரு அமைதியான கிராமம் இருக்கிறது. அக் கிராமத்தின் ஒரு பகுதியாக ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பண்டிதர்கள், விவசாயிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அரச உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாக தனக்கே உரிய தாற்பரியங்களுடன் கோவில்கள், தேவாலயங்கள் சூழ்ந்த அழகிய ஒரு சிறிய பகுதியாக தும்பளை மேற்கு என்ற கிராமம் இருக்கிறது. தும்பளை மேற்கில் கொம்பலட்டியில் விசித்த திரு. பாலகிருஷ்ணன் (1931-1991) திருமதி கமலாம்பிகை பாலகிருஷ்ணன் (1938-2009) தம்பதிகளுக்கு இணுவில் மக்லியொட் மருத்துவமனையில் 12.09.1959 இல் பிறந்தவர்தான் இரகுவரன்.

சிறு வயதிலேயே கல்வியிலும், கலைகளிலும், விளையாட்டிலும் மிக ஆர்வமுள்ளவர். சரஸ்வதி பூஜை நாட்களில் கலை நிகழ்வுகளை ஒழுங்கமைத்து இரகுவரன் நடத்துவார். ஒரு பழைய ரங்குப் பெட்டியில் (Trunk) மேளம் அடித்து "லிப் ஸ்டிக்கும் பூசிக் கொண்டு குயிடெக்ஷும் அப்பிக் கொண்டு ஆச்சி ஓடிப் போட்டா" "ஆய் ஊய் மீனாச்சி எலிகள் பட்டாளம்" என்ற pop பாடல்களை இசைத்து எம்மையெல்லாம் மகிழ்விப்பார். ஒரு பெட்டியினுள் மின் குமிழை ஒளிரச் செய்து ஒரு சிறிய சதுர வடிவான துவாரத்தை ஏற்படுத்தி. அதனூடாக வருகின்ற ஒளியின் முன்னே தடித்த மட்டையில் ஆண், பெண், விலங்குகள் போன்ற உருவங்களை அசைத்து காட்டி அதன் விம்பத்தை சுவரிலே விழுத்தி அதன் மூலம் கதைகளை சொல்லி சிறுவர்களை பரவசப் படுத்துவார். இதிலிருந்து ஆரம்பித்தது அவரது கலைப் பயணம்.

இரகுவரன் சிறுவனாக இருக்கும் போதே அவரது தந்தையார் புத்தகங்கள் வாங்கி வாசிக்கும் பழக்கம் உள்ளவராக இருந்தமையினால் இரகுவரனுக்கும் அம்புலிமாமா வாங்கி கொடுப்பார். அதை அவர் விருப்புடன் வாசிப்பது மட்டுமல்லாது சிறுவர்களாக இருந்த எமக்கும் வாசிக்கத் தருவார். சிறிது சிறிதாக கல்கி, சிரித்திரன், வீரகேசரி பிரசுரங்கள் என ஏனைய புத்தகங்களையும் சிறு வயதிலேயே வாசிக்கப் பழகிக் கொண்டார். பிற்காலங்களில் பருத்தித்துறையில் இருந்த மயில்வாகனம் வாசிகசாலையும் நண்பர் குலசிங்கம் அவர்களின் புத்தக கடையும் அவரின் அறிவுத் தேடலுக்கு தீனி போடும் இடமாகியது.

தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்ப கல்வியை ஆரம்பித்தவர், 1972 இல் ஹாட்லி கல்லூரி அனுமதி பரீட்சையில் சித்தி பெற்று அக் கல்லூரியில் உயர்தரம் வரை பயின்றார். சிவப்பிரகாச வித்தியாசாலையில் நாடகம், விளையாட்டு ஆகியவற்றுக்கான வலுவான அடித்தளம் இடப்பட்டது. சிவப்பிரகாச வித்தியாசாலையில் குமணன், சங்கிலியன் போன்ற நாடகங்களில் நடித்திருக்கிறார். நாடகப் போட்டிகளிலும் பங்கு பற்றினார். 1971 இல் சங்கிலியன் நாடகத்தில் காக்கைவன்னியனாக நடித்திருக்கிறார். சிவப்பிரகாசாவித்தியாசாலை சார்பாக ஓட்டப் போட்டிகளிலும் ஏனைய பாடசாலைகளுடன் போட்டியிட்டு சான்றிதல்களைப் பெற்றிருக்கிறார்.

ஹாட்லி கல்லூரியில் படிக்கும் காலத்தில் யுடிசயாயஅ இல்லத்தின் சிறந்ததொரு மெய் வல்லுனராக குறிப்பாக ஓட்டப் பந்தய வீரனாக தட கள போட்டிகளில் தனது திறமையினை வெளிப் படுத்தி இருந்தார். 1973 ஆம் ஆண்டு Under-13 இல் 200m, 300m ஓட்டப்போட்டிகளில் முதலிடம் பெற்றார். அதுவே ஹாட்லி கல்லூரியில் அவரது விளையாட்டுத்துறையின் ஆரம்பமாகும். க. பொ. த. உயர்தரத்தில் உயிரியல் பாடத்தில் சிறப்பாக பயின்று கொண்டிருந்தார். இவ்வாறான திறமைகளை பாடசாலை நாட்களில் வெளிப் படுத்தி இருந்தமையினால் மாணவர் தலைவராக (Prefect) பொறுப்பேற்று தனது ஆளுமையையும் தலைமைத்துவ பண்பையும் வெளிப் படுத்தி இருந்தார்.

க.பொ. த. உயர் தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி பயின்றார். படிப்பிலும் தனது திறமையை வெளிப் படுத்தி இருந்தார். வைத்தியராக வருவார் என்று ஊரவர்களின் எதிர்பார்ப்பு, அப்போது அறிமுகமான தரப்படுத்தல் முறையினாலும், அப்போதைய அரசினால் புதிதாக அறிமு-கப் படுத்தப் பட்ட பாடத்திட்டத்தில் இருந்து கூடுதலான மாணவர்கள் உள் வாங்கப் பட்டதனாலும் பழைய பாடத் திட்டத்தை தொடர்ந்த ரகுவரனுக்கு துரதிஷ்ட்ட வசமாக பல்கலைக் கழக அனுமதி கிடைக்கவில்லை. அதன் பின்னர் CME என்கின்ற டியூட்டோரியில் விஞ்ஞான பாடத்தை கற்பித்தார். 1984 இல் அரசாங்க விஞ்ஞான ஆசிரியராக களுத்துறை மக்கோனா அல் - ஹசனியா மகாவித்தியாலயத்தில் ஆசிரிய பணியை ஆரம்பித்தார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இருபாலையில் இயங்கிய நேரத்தில் ரகு-வரனும் ஆசிரிய பயிற்சியை இரு வருடங்கள் (1988-1989 ஆகிய ஆண்டுகளில்) தொடர்ந்தார்.

குயிலோசை என்றொரு கை எழுத்து சஞ்சிகை தும்பளை மேற்கு சனசமூக நிலையத்துடன் தொடர்புடைய இளைஞர்களால் எழுபதுகளின் பிற்பகுதியில் வெளியிடப் பட்டது. அதனுடன் சம்பந்தப் பட்டவர்களை சரியா-கத் தெரியவில்லை. எனினும் இரகுவரனும் அதில் ஈடுபாடு காட்டியிருந்தார். சி-றுகதைகள் எழுதும் ஆர்வத்தை தூண்டியது குயிலோசை என்ற கையெழுத்து சஞ்சிகைதான். 1982 இல் சிரித்திரன் நடாத்திய பாரதி நூற்றாண்டு விழா சி-றுகதைப் போட்டிக்காக பாலரகு (பாலகிருஷ்ணன் ரகுவரன்) என்ற பெயரில் காக்கை குருவி எங்கள் ஜாதி என்ற ஒரு சிறுகதையை எழுதி இரண்டாம் பரிசை தட்டிக்கொண்டார். இதுவே அவரின் அங்கீகாரம் பெற்ற முதலாவது சிறுகதையாகவும், எழுத்தாளராக பரிணாமம் அடைவதற்கு இரகுவரானால் போடப் பட்ட பிள்ளையார் சுழியாகவும் இருந்தது. இதன் உத்வேகத்தால் எழுதப் பட்ட சூரியனும் கறுத்துப் போச்சு என்ற மற்றுமொரு சிறுகதை 1986இல் சிரித்திரனில் வெ-ளியாகியது. இதன் களமாக எமது வீட்டில் இருந்த பதுங்கு குழியே அமைந்தது. 1987 இல் மல்லிகையில் நிலாக்காலத்து சோகம் என்ற சிறுகதையை-யும் எழுதி இருந்தார்.

ஒரு விடயத்தை வாசித்தால் அது பற்றி மேலும் பல தேடல்களை மேற்கொண்டு பல ஆய்வுகள் செய்து பூரண அறிவைப் பெறுவதிலும் ஆர்வம் அதிகம் உள்ளவர். பறவைகள் பற்றி அறிய ஆர்வம் கொண்டு அது பற்றிய நூல்களை கற்று. காணும் பறவைகளின் பின்னால் திரிந்து அதன் நடத்தைகள் பற்றி நிறையவே அறிந்ததை நான் அறிவேன். வானில் தோன்றும் உடுக்களைப் பற்றி சில காலங்கள் ஆராய்ந்தார். அதற்காக இரவி-னில் வீட்டுக் கூரையின் மேல் ஏறி நிற்பதை நான் எங்கள் வீட்டிலிருந்து பார்த்திருக்கிறேன். நாட்டுக் கூத்துக்கள் பற்றிய ஆராய்ச்சியின் போது இரவி-னில் கூட உடுக்கு அடித்து பாடுவது எங்கள் வீடு வரை கேட்டிருக்கிறது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் மன்றத்தின் தலைவராக இருந்ததனால் பல விடயங்களை செய்வதற்கு முடிந்தது. போதை என்ற வைத்தியர்களின் கட்டுரைகள் அடங்கிய நூலை தமிழ் மன்றத்தின் ஆதரவுடன் தொகுப்பாளராக இருந்து 1989 இல் வெளியீடு செய்தார், இங்கிருக்கும் போது யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாக இருந்த பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் மௌனகுரு, கலாநிதி குழந்தை சண்முகலிங்கம், கலாநிதி சிதம்பரநாதன் போறவர்களுடனும், மாணவர்களாக இருந்த (தற்போது விரிவுரையாளராக இருக்கின்ற) ஜெய்சங்கர், சிறீ கணேசன், அகி-லன் போன்றோரின் தொடர்பு ஏற்பட்டது. அதனால் நாடகம் சம்பந்தமான அறிவுத் தேடலுக்கு சரியானதொரு இடம் அமைந்தது. இக் காலப் பகுதியில் தான் பேராசிரியர் மௌனகுருவும், கலாநிதி சண்முகலிங்கமும் இணைந்து உருவாக்கிய மகாகவியின் "புதியதொரு வீடு" நாடகத்திற்கான பயிற்சிப் பட்டறையை சில மாதங்கள் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் மூலம் நாடக நடிப்பு சம்பந்தமான நுணுக்கங்களை அறியக் கூடிய அரிய வாய்ப்பு ரகுவரனுக்கு கிடைத்தது. 1989 இல் பேராசிரியர் மௌனகுரு, கலாநி-தி சிதம்பரநாதன், பிரான்சிஸ் ஜெனம் ஆகியோரின் வழிகாட்டலில் ஒரு வருட நாடக களப் பயிற்சியைப் பெற்றார். இதில் ஏற்பட்ட உந்துதலினால் 1991 இல் நாடகமும் அரங்கியலும் பட்டப் படிப்புக்கு தன்னை ஒரு வெளிவாரி மாண-வனாக இணைத்துக் கொண்டார். 1996 இல் BA (Honours) Special in Drama and Theatre பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்திட்டத்தில் வெளிவாரியாக பட்டம் பெற்ற முதல் மாணவனும், கடை-சி மாணவனும் ரகுவரனே என்பது தும்பளையைச் சேர்ந்த எமெக்கெல்லாம் பெருமையே. வடமராட்சியில் நாடக மரபுகள் என்கிற தலைப்பில் ஆய்வு செய்து படப் பின் படிப்பு செய்வதற்கும் (MPhil) அவருக்கு அனுமதி கிடைத்தது.

1990.01.01 இல் ஹாட்லிக் கல்லூரியிற்கு விஞ்ஞான ஆசிரியராக அளுத்கம இலிருந்து மாற்றலாகி வந்தார். நாடகமும் அரங்கியல் என்கின்ற பாடத்தையும் கற்பிக்கத் தொடங்கினார். ஹாட்லியும் ஐந்து ஆண்டுகள் இடம்பெயர்ந்து விட்டு தனது சொந்த மண்ணுக்கு வந்தது. 1988 இல் நடந்திருக்கவேண்டிய ஹாட்லியின் 150 ஆவது ஆண்டுவிழாவை 1990 இல் கல்லூரியில் நடத்தத் தீர்மானித்து இருந்தனர். "ஆச்சிசுட்ட வடை" என்ற சிறுவர்நாடகத்தைப் பழக்கி 150 ஆவது ஆண்டுவிழாவில் ஹாட்லி கல்லூரியில் அரங்கேற்றினார். 1990 இலிருந்து 2019 வரையிலான 30 ஆண்டுகள் ஹாட்லி கல்லூரியிலும் வேறு பல பாடசாலைகளிலும், புலோலி ஞானசம்பந்தர் கலை மன்றத்திலும் சொந்தமாக தயாரிக்கப்பட்ட பல நாடகங்களும், குழந்தை சண்முகலிங்கம், பேராசிரியர் மௌனகுரு போன்றோர்களின் பல சிறுவர் நாடகங்களும் ரகுவரானால் பயிற்றப் பட்டு மேடையேற்றப்பட்டன. சமுதாயத்தில் உள்ள பிரச்சனைகளும், சூழல் மாசடைவதை தடுப்பதற்கான விழிப்புணர்வுகளும் அவரது அநேக நாடகத்தில் பிரதான களமாக இருந்தது.

தும்பளைக் கிராமத்திலே ஒரு பெரும் வரலாறே புதைந்திருக்கிறது என்று அது பற்றி அறிவதற்காக பல வீடுகளுக்கும் ஏறி இறங்கியதிலுருந்து ஆரம்பமானதுதான் அவரது சமூகவியல் பற்றிய ஆராய்ச்சிகள். அவ் ஆராய்ச்சியின் பலனாக 2001 இல் உருவானதுதான் அவரது முதலாவது சமூகவியல் ஆவணமான தும்பளையின் வரலாற்றை, கலாச்சாரத்தை, கல்வியை, கலையை பற்றி கூறும் ஊரும் வாழ்வும் என்ற நூல். அந்த நூலுக்கு நல்ல வரவேற்பு இருந்த போதும் எதிர் விமர்சனகளும் இருந்தது உண்மைதான். ஆயினும் தனி ஒருவனாக நின்று அந்த நூலை வெளியிட்டது ஒரு பெரும் வெற்றி தான். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 2012 இல் பருத்தித்துறையின் வரலாறு, வாழ்கை முறை, பாடசாலை மரபுகள், விளையாட்டு மரபுகள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் என்பவற்றை கூறும் "பருத்தித்துறையூராம்" என்ற இரண்டாவது சமூகவியல் ஆவணத்தையும் வெளியிட்டிருந்தார். கல்லூரி நாடகங்கள், பண்டைத் தமிழர் நாடகங்கள், வடமராச்சியில் நாட்டுக் கூத்துக்கள் என்ற நாடகம் சம்பந்தமான நூல்களும் கண்டல் தாவர சாகியம் என்ற சூழலியல் சம்பந்தமான நூலும் தொடராக இரகுவரானால் வெளியிடப்பட்ட நூல்கள் ஆகும்.

பிற் காலத்தில் சூழல் வளங்களையும் தொல் பொருட்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற பேரவாவில் முகப்பு புத்தகம் மூலம் பல விடயங்களையும், விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்த முயற்சி செய்திருக்கின்றார். குறைந்த பட்ஷம் அவை அழிவதற்கு முன்னும் புகைப்படம் எடுத்து அதனை அதனை ஆவணப் படுத்த வேண்டும் என்கின்ற நோக்கில் அலைந்து திரிந்து பலவற்றை சேர்த்தும் வைத்துள்ளார். இந்த விடயத்தில் அவருக்கு தேவை-யான ஆளணியும் நிதி வசதியும் இருப்பின் இன்னும் நிறையவே அவரால் செய்ய முடிந்திருக்கும்.

இவரின் திறமையையும், கலையை வளர்ப்பதில் இவரின் சேவை-யையும் இனம் கண்டுகொண்ட தும்பளை மேற்கு கலை பண்பாட்டுக் கழகத்தினர் "நாடகச் செம்மல்" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தனர். தொடர்ந்து கலைவாருதி, யாழ் முத்து என்கின்ற பட்டத்திற்கும் சொந்தக்காரர் ஆனார். அவர் நாடகத்திற்கு ஆற்றிய சேவைக்காக அண்மையில் (October 2021) வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு அவரிற்கு கலைக் குரிசில் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்து இருக்கிறது.

திருவாளர் இரகுவரன் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து இன்னும் பல சேவைகளை கலைக்கும் நம் சமூகத்திற்கும் ஆற்றவேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறோம்.

**- கலாநிதி க. வாகீசர்**

**வீணாவின் கவிக்கணை**

உயிருள்ள முகங்கள் எல்லாம்,
உயிரற்று கிடப்பதனால்,
உயிரற்ற ஏதோ ஒன்றை
உயிரென்று நினைத்து
உறவு கொள்கிறதாம்
உலகெல்லாம் முகநூலில்,
உலகறியா புதினமல்ல இது,
உலகறிந்தும் அறியாத புதினமிது.



# சித்திரவதையில் ஈடுபட்ட அதிகாரிகள் குறித்து அறிக்கை கோரப்பட்டுள்ளது

பயங்கரவாத சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக சாட்சியமளிக்குமாறு, சித்திரவதைக்கு உட்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவை குற்றவாளியாக்குவதற்காக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர், சித்திரவதை செய்ததாகக் காவலில் உள்ள சேவ் தி பேர்ல்ஸ் அமைப்பின் மொஹமட் சுல்தான் கோட்டை நீதவா-னிடம் தெரிவித்துள்ளார். சந்தேகநபர், தன்னை சித்திரவதை செய்த மூன்று பேரின் பெயர்களை கோட்டை நீதவான் பிரியந்த பெர்னாண்டோவிடம் தெரிவித்துள்ளார்.

பதினெட்டு மாதங்களுக்கு முன்னர், ஒரு மதரஸாவில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காக மொஹமட் சுல்தான் கைது செய்யப்பட்டார்.

சித்திரவதை காரணமாக தனக்கு இன்னும் முதுகுத்தண்டு குறைபாடு இருப்பதாக அவர் கூறியதையடுத்து, அவரை சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்பத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, சட்டத்தரணி ஹிஸ்புல்லாவை குற்றவாளியாக்கும் நோக்கில், சித்திரவதை செய்யப்பட்டதாக, அல் சுஹாரியா அரபுக் கல்லூரியின் இரண்டு ஆசிரியர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். மொஹமட் சுல்தானை பிணையில் விடுவிப்பதற்கு, பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் மறுப்பு வெளியிடப்பட்ட நிலையில், நவம்பர் 10ஆம் திகதி வரை மொஹமட் சுல்தான் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு அன்றைய தினத்தில், வைத்திய மற்றும் பொலிஸ் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்ற சட்டத்தரணி, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், ஏப்ரல் 2020 இல் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டதோடு, மேலும் அவர் மத்ரஸா பாடாலையில் விரிவுரை நடத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## கடந்தவையும் கடப்பவையும் (8)

- உமா மோகன் -

முள்ளின்மேல் இருப்பது போல் எண்ணியதால் துள்ளிக்கொண்டு போவதில்லை அப்பள்ளிக்கு
கள்ளமோ படிக்க என்று கனகதைகள் வந்திடுமே
மெள்ளமாய் சொல்வதுண்டு ஈரிடத்தில் - ஒன்று

வீட்டில் இருந்து இடதுபக்கம் கொஞ்சம்
எட்டி நின்றே பார்க்க வேண்டும்
இயற்கை வழிபாடு இருந்ததன் ஆதாரம்
செயற்கையாய் ஏதும் இருந்ததில்லை - அன்று

மேற்கூரை ஏதுமில்லை தட்டையான பீடம்
கீழிருக்க அதன்மேலே அவர் இருப்பார் - கருணையோடு
வெண் பளிங்கே அவர் தோற்றம் - பெரிய
தம்பிரான் என்றே சொல்வதுண்டு

சிறு கட்டிடம் ஏதுமில்லை - அங்கு
பெரு விருட்சம் ஒன்று தான்
பேரழகைக் கொடுத்திடும் - அதன்
வேரழகும் தனி அழகே

எண்ணற்ற விழுதுகள், தள்ளிய வேர்களோ
மண்ணுக்கு மேலாக சிறு படிகள் போல் - அங்கு
சருகுகட்கும் குறைவில்லை - பெரும்
சாரைப் பாம்புகட்பும் குறைவில்லை

புற்றுக்களும் ஏராளம் என்பதனால் நாகமும் - இறை
பற்றோடு அரவமேதும் இல்லாமல் அடிக்கடி வருவதுண்டாம் - அங்கு
மரத்தோடு அண்டி ஒரு சூலம் உண்டு
தெருப்போக்கர் சூடமது ஏற்றிடவே- அதன்

முன்னால் ஒரு பெரும் கல்லும் உண்டு
அங்கு ஒரு நிமிடம் நின்று, மனம்
நொந்தபடி மிதி உந்தில் சென்று - பாடசாலை
வாசலில் வந்து நின்று மற்றவரைப் பார்ப்பதுண்டு
பாச அங்குசம் ஏந்தியவர் பாசக்காரரும் தான்

முன்னர் பார்த்துப் பழக்கம் ஆனவர் - நெடியகாட்டுப் பிள்ளையார்
என்ன சொன்னாலும் கேட்பார் அவர்
கணங்களுக்கு அதிபதி அவரையும்
வணங்கிவிட்டு உள்ளே போனால் - அங்கு

கூட்டுப்பிரார்த்தனை முடிந்து கூட்டம் கலைந்து
நீட்டுக்கு நடந்து தொடர் வகுப்பறையைக் கடந்து - எம்
வகுப்பறைக்குள் புகுந்து பைகளைத் துறந்து
எடுப்பதற்குள் புத்தகத்தை - எடாதே என்பது போல்

இரைந்து கொண்டு வந்துவிடும் வேவு பார்க்க - அது
பரந்த பெரு வட்டமிட - எங்கும்
ஆரவாரம் தொடங்கிவிடும் ஆரவாரம் அடங்குதற்குள் - தம்
பாரமது தாங்காது பறிப்பதற்காய்

இரைந்து கொண்டு இரண்டு ஏனும் வந்துவிடும்
சரிந்து ஒரு வட்டம் ஒன்றைப் போட்ட பின்பு
மேலிருந்து விண் எனவே கூவிக்கொண்டு குத்தணவே
தாழப் பறந்து வந்து குண்டுகளைத் தட்டிவிட்டு- அது


மேலே கிழம்பும் போது - காதுகள்
ஏலாது இனிக் கேட்க என்பதுபோல் ஆகிவிடும்
அத்தகைய பேரிரைச்சல் அடங்குதற்குள்
எங்கேயோ அது போட்ட குண்டுகளின் சத்தம்!!!

குலை நடுக்கம் கொள்ள வைக்கும்
விலை மதிப்பு இல்லா உயிர்
ஆர் உயிர் போனதோ அன்று என - மனம்
பேர் இடர் கொள்ளும் அன்று - பின்பு

படிப்பது அங்கு ஏது? - அன்று
அடுத்தவர் ஆரையேனும் எதிர்பாராது
எடுப்பரே ஓட்டம் எல்லோரும் - அங்கு
தடுக்கியும் விழுவர் பலர்

ஆண்டுகள் இரண்டு இப்படியே - மிக
நீண்டதாய் கழிந்தது அங்கு. (தொடரும்)


SSSGC - Canada



GLOBAL AKHANDA BHAJAN

NOVEMBER 13, 2021, 5:15 PM EST- NOVEMBER 14, 2021 6:00 PM EST

"Devotional singing (bhajan) must become an unbroken stream of bliss on your tongues and in your hearts; it must confer on you the uninterrupted awareness of soham, of the unity of I and He."
- SRI SATHYA SAI BABA (SSS IX, 41-42)

Sri Sathya Sai Baba Centre of Scarborough
5321 Finch Ave E, Scarborough, ON M1S 5W2

Listen in live at:
www.sssgc-canada.org

Subject to a maximum of 50% capacity. Devotees will be allowed inside on a first come, first served basis.

Please note: If you choose to visit the centre in person, you are required to wear a face mask/covering which covers your nose, mouth and chin at all times both inside and outside the Centre and you are required to maintain a physical distance of at least 2 meters from every other person, unless you are with someone who lives in your same household or you have a caregiver. You will also be required to sign-in at the Centre upon your arrival.

TAMILS SOCIETY OF PEEL
பீல் தமிழ் முதியோர் சங்கம்
Not profit Registration # 1406004 (Established in 1999)

JOB POSTING – PROJECT COORDINATOR DATE NOVEMBER 1 2021

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors & others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active & healthy lifestyle by organizing weekly activities and health seminars.
The project coordinator will report to the STSP secretary & will work on.

- Ensuring project activities adheres to provided timelines & deliverables
- Ensuring documentation is maintained throughout the length of the project
- Communicating plans, actions, & issues with Board of directors
- Working with the STSP treasurer to record all financial transactions & creating monthly financial reports for projects
- Analyzing project data & producing progress reports
- Teaching basic computer programs such as Word, Excel & Zoom to seniors
- Maintaining & updating the STSP Webpage periodically
- Support in organizing the weekly activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:

- Diploma/Degree in Accounting & Computer programs
- Two years' experience working on computerized accounting such as Quick Books
- Experience in teaching basic computer programs
- Experience on designing & updating websites
- Effective interpersonal, communication & organizational skills
- Working knowledge of community resources & services for seniors in Peel & relevant government programs and policies
- Ability to work with a teams of seniors
- Fluency in Tamil & English languages

Salary and benefits: Negotiable & according to the experience
Duration of engagement:
Minimum of one year on part time basis with possible extension.
Minimum 20 hours per week working hours required.

Deadline for application: November 10, 2021
Please forward your application with your updated resume by email to:
info@peeltamilseniors.ca
Nadarajah Moorthy
Secretary
Cell: (416) 473-5380, nmoorthy10@gmail.com

250 Dundas Street West , Unit 206, Mississauga, Ontario, L5B 1J2
Tel: 905-290-3000
Email: info@ peeltamilseniors.ca, peelseniortamils@hotmail.com
Visit us at www.peeltamilseniors.ca

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25
வருடங்கள்

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

**நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய**

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

**416 269 7198**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 971



## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருகோணமலை

*"நல்லதைச் சொல்லென்றும் நல்லதைச் செய்யென்றும்*
*நயம்படச் சொல்லும் தாயே*
*நஞ்சு எண்ணங் கொண்டு இச்சையாய் அலைவாரை*
*நசுக்கிடும் அன்னை நீயே*
*பொல்லாத செயலினைப் பொடிப் பொடியாக்கிடும்*
*பொன்சுடர் தீபம் நீயே*
*புகழுடைய வாழ்விற்கு பொன்முடி சூட்டியே*
*பூத்தூவி வாழ்த்துவாயே."*

இச்சம்பவத்தின் பின்னர், இத்தகைய உக்கிரமூர்த்தியால் மக்களுக்கு இன்னல் ஏற்படும் என்பதை உணர்ந்து, மந்திர, தந்திர கிரியைகளால் வைர-வரை இடம்பெயர்த்துத் தூரத்திலுள்ள ஒரு மலையில் கொண்டுபோய் நிறுவினர். இவ்வாறான கர்ண பரம்பரைக்கதைகளும், வாய்மொழியாக நிலவுகின்ற கதை-களும், மக்களிடையே பயங்கலந்த ஒருவித பக்தியை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளிடம் ஏற்படுத்தியுள்ளது.


இந்து மதத்தில் காணப்படும் வழிபாடு மற்றும் நம்பிக்கைகள் பரம்பரை பரம்பரையாக மக்களிடையே நிலை கொண்டு காணப்படுகின்றது. அறிவு வளர்ச்சி மேலோங்கிக் காணப்பட்டபோதிலும், இவ்வாறான வழக்கிலுள்ள கதைகளால் மக்கள் ஈர்க்கப்பட்டு, தொடர்ந்தும் தமது நம்பிக்கைகளை வளர்த்து வருவது கண்கூடு. சிலவேளைகளில் சிலருடைய வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் இந்த நம்பிக்கைகளுக்கு மேலும் உரமூட்டுவதாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்திலே பூசை செய்து வந்த அந்தணர் ஒருவருக்கு ஏற்பட்ட சம்பவமொன்றை இதற்குச் சான்றாகக் கூறலாம். ஒருநாள் இவ்வாலயத்துள் சுருண்டு படுத்திருந்த ஒரு சர்ப்பத்தின்மீது தவறுதலாகப் பாரமான கிடாரமொன்றை அந்தணர் ஒருவர் தூக்கி வைத்துவிட்டார். கிடாரத்தினடியிலிருந்த சர்பம் நசுங்கி இறந்துவிட்டது. அந்தச் சர்ப்பத்தின் சாபத்தால் இவ்வாலயத்திலே பூசை செய்து வந்த அந்தணர் பரம்பரையில், ஏழு சந்ததிக்கு ஆண் குழந்தையே பிறக்கவில்லை. ஏழு சந்ததிக்குப் பின்னரே ஆண் குழந்தை பிறந்தது. இக்கதையோடு தொடர்புடைய அந்தணர் பரம்பரை இக்கோயிலில் பூசை செய்து வருவது இக்கதை வெறும் கட்டுக்கதையல்ல என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி, தெய்வநம்பிக்கை மேலும் வலுவடைய ஊன்றுகோலாகக் காணப்படுகின்றது.

ஸ்ரீ பத்தரகாளி அம்பாள் மீது மக்கள் கொண்ட ஆராத பக்தியால், இவ்வாலயத்தின் புனருத்தாரணவேலைகள் காலத்திற்குக் காலம் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, பிரம்மஸ்ரீ சு.கு. சோமாஸ்கந்தக்குருக்கள் காலத்தில் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர் தமது பதினாறாவது வயதில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பூசைப் பொறுப்பை ஏற்று நடத்த ஆரம்பித்தார். இவர் பொறுப்பேற்ற காலத்திலே ஆலய கர்ப்பக்கிரகமும், ஏனைய மண்டபங்களும் பழுதடைந்த நிலையிலே காணப்பட்டது. 1933 ஆம் ஆண்டு சில திருத்தவேலைகளைச் செய்து கும்பாபிஷேகமும் நடைபெற்றது. தொடர்ந்தும் பல திருத்த வேலைகள் இடம்பெற்றன. ஆலயத்தின் மகா மண்டபம், கோபுரமண்டபம் ஆகியவற்றைத் திருத்தியமைத்து 1947 ஆம் ஆண்டு மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. வசந்தமண்டபத் திருத்த வேலைகளும், வேறு சில திருத்தவேலைகளும் நடைபெற்று மீண்டும் 1962 ஆம் ஆண்டு மூன்றாவது தட-வையாகக் கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. 1979 ஆம் ஆண்டு கற்பக்கிரகத்தைபூரணமாகத் திருத்தியமைத்து, அதிலே சுதைச் சித்திரங்களாகச் சப்தகன்னியர்கள் அமைக்கப்பட்டன. அர்த்த மண்டபத்தின் தென்புறத்திலே முச்சக்திகளும், வடபுறத்தில் அம்பாள், விநாயகர், முருகனும் அமைக்கப்பட்டனர். மகாமண்டபத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் திருவுருவமும், விமானத்தில் கௌரி அம்பாளும் நிறுவப்பட்டனர். ஸ்நபனமண்டபம் சிற்ப சித்திர வேலைப்பாடுகளோடு அழகுற அமைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் மேற்தளத்தில் அட்டநாகபந்தனம், ராசிச்சக்கரம் என்பன சுதையினால் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் தெற்குப்பக்கம் மகாலெட்சுமியும், வடக்குப்பக்கம் சரஸ்வதியும் பரிவார மூர்த்திகளாக எழுந்தருளியுள்ளனர். சிம்மம், பலிபீடம், கொடித்தம்பம், மூலாதாரகணபதி என்பனவும், நாகதம்பிரான், பைரவர் ஆலயங்களும் அழகாகக் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. வெளிமண்டபத்தில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவுருவம் சுதையினால் சித்தரிக்கப்பட்டுள்ளது. மண்டப வாசலுக்கருகே மணிக்கூட்டுக்கோபுரத்தை நாற்பதடி உயரத்திற்கு உயர்த்திக்கட்டி, அறுநூறு இறாத்தல் எடையுள்ள கண்டாமணி ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறான திருப்பணிகள் யாவும் காலக்கிரமத்தில் நடைபெற்று 1980 ஆம் ஆண்டு மீண்டும் கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெற்றது. இவ்வாறாகப் பல கும்பாபிஷேகங்கள் இவ்வாலயத்திலே நடைபெற்றுள்ளது.

காரணம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும், ஆலய அமைப்பு முறை-களையும், கும்பாபிஷேக நித்திய, நைமித்திய விழா நெறிகளைத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. ஏன் இவ்வாறான கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன என்பதை அறிவது அவசியம். கும்பாபிஷேகம் நாலு வகைப்படும். அவை ஆவர்த்தம், அனாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீகம் எனப்படும். கோவில் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து புதிதாக விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தால், அதனை அனாவர்த்தம் என்று அழைப்பர். முன்பு ஆலயம் இருந்து இயற்கையின் சீற்றத்தினாலோ அன்றி வேறு வகையாலோ அழிவுபட்டு பின்னர் வரலாறுகளின் மூலமோ அன்றிக் கர்ணபரம்பரைக் கதைகளின் மூலமோ கண்டுபிடிக்கப்பட்டுச் சிறு ஆலயமாக வழிபாடியற்றப்பட்டு வந்து, புதிதான ஆலயத்தைப் பழைய இடத்திலே நிர்மாணித்து பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தம் எனப்படும். ஆலயத்திலுள்ள வர்ணங்கள் மற்றும் விக்கிரகங்களில் பிழை ஏற்பட்டாலும், மருந்து என்று கூறப்படும் அ்டபந்தனம் பழுதடைந்தாலும் செய்யப்படும் கும்பாபிஷேகம் புனராவர்த்தனம் என அழைக்கப்படும். கள்ளராலோ மற்றும் வேறு காரணங்களாலோ நித்திய பூசை தடைப்படால் செய்யப்படுவது அந்தரீதம் எனப்படும். ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பல தடவைகள் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இதனைப் பெருஞ்சாந்தி விழா எனவும் அழைப்பர்.

வளரும்...

கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

ஜீவன் முக்தி (பகுதி ) 129

# ஒவ்வொரு எண்ணத்தையும் தனித்தனியே எதிர்கொள்ளுங்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு தலையில் வந்த வலியும், எட்டு ஆண்டுகளுக்க முன்பு வந்த வலியும், இரண்டு ஆண்டுகளுக்க முன்பு வந்த வலியும் நேற்று வந்த வலியும் தனித்தனியான அனுபவங்கள்.

ஆனால் நாம் எப்போது எனக்குப் பன்னிரெண்டு வருடமாகத் தலைவலி இருக்கிறது என்று மனதில் நினைத்து விடுகிறோமோ, அப்போதே என்ன ஆகிவிடுகிறது?
அது மனதில் ஒரு பூதாகரமான துக்கமாக மாறிவிடுகிறது. நம்மால் ஜெயிக்க முடியாத துக்கமாக மாறிவிடுகிறது. நம்மால் ஜெயிக்க முடியாத துக்கமாக ஆகிவிடுகிறது.

ஒவ்வொரு எண்ணத்தையும் தனித்தனியாக எதிர்கொள்ளுங்கள். ஜீவன்முக்தியை வாழும் ஜீவன்முக்தர்களாளாவீர்கள்.
இந்த வினாடி மட்டும் உங்களுடைய உடல் எப்படி இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

உங்களுடைய மனம் எப்படி இருக்கிறது என்று நேரடியாகப் பாருங்கள். தனித்தனியாக பார்த்தீர்களானால வாழ்க்கை துக்கமாகவே இருக்காது. ஏதோ ஒரு துக்கமோ, வலியோ வந்தாலும்கூட, இந்த வினாடி வருகின்ற துக்கத்தை அழிக்க முடியும்.

இந்த வினாடி உங்களுக்குள்ளே உள்ள உணர்வு ஒரு யூனிட் என்றால் உங்களுக்கு வருகின்ற துக்கமும் ஒரு யூனிட்டாகத் தான் இருக்க முடியும்.

இந்த ஒரு யூனிட் உணர்வால் ஒரு யூனிட் துக்கத்தை அழித்துவிட முடியும்.

ஆனால் நீங்கள் கடந்த கால துக்கம் மொத்தத்தையும் எடுத்துவந்து, ஒரு இருபது யூனிட்டை எடுத்து வந்து, உங்களுடைய ஒரு யூனிட் உணர்விற்கு முன்பு நிறுத்தினீர்கள் என்றால் என்னவாகும்?

வேறு வழியில்லாமல், உங்களைத் துக்கம் ஜெயித்து விடுகின்றது.
ஒரு போர்வீரனைக் கொண்டு ஒரு வீரனைத்தான் அழிக்க முடியும்.
அழகான ஜென் கதை.....
ஒரு கோட்டைக்குள்ளே அரசன் ஒருவன் தனியாக மாட்டிக்கொண்டான். கோட்டைக்கு வெளியே சுற்றிலும் எதிரிகள், எதிரி நாட்டு போர்வீரர்கள் ஒரு லட்சம் பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவன் தன் இராஜகுருவை நினைத்து வழிபடுகிறான். 'குருவே வழிகாட்டுங்கள். நான் எப்படி தப்பிப்பேன்?' என்று.
அந்த குரு, ஒரு அசரீரியாக சொல்கிறார், ஸூ கவலைப்படாதே, கோட்டைவாசலை திறந்து வை, ஒவ்வொரு போர்வீரராக உள்ளே வருகின்ற மாதிரி வாசல் கதவை திறந்து வை. ஒவ்வொரு போர்வீரராக உள்ளே வரட்டும். ஒருவன் மட்டும் உள்ளே வருகின்ற மாதிரி வாசல் கதவை திறந்து வை. ஒவ்வொருவராக வர வர வெட்டி அழித்துக்கொண்டே இரு. இந்த எளிமையான நுட்பத்தை செய்து அரசன் ஜெயித்தே விட்டான்.

அதே மாதிரிதான் நம் மனமும், நீங்கள் தனியாக உங்களுடைய உடம்பிற்குள் மாட்டிக்கொண்டு இருக்கிறீர்கள். வெளியில் ஒரு இலட்சம் போர்வீரர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.
ஒரு இலட்சம் துக்ககரமான எண்ணங்கள் காத்துக்கொண்டு இருக்கின்றன.

தப்பிப்பதற்கான ஒரே வழி, அதையும் ஏற்கனவே யோசித்து யோசித்து கடவுளே வழியும் கண்டுபிடித்து இருக்கிறார்.
உங்களுடைய மனமெனும் கோட்டைக் கதவானது, ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு எண்ணம் மட்டும் வருகின்ற மாதிரித்தான் இருக்கின்றது. நன்றாக யோசித்துப் பாருங்கள், உங்களுக்கு ஒரு வினாடியில் ஒரு எண்ணத்திற்கு மேல் வரமுடியுமா? முடியாது. ஒரு எண்ணம் போனபிறகு இன்னொரு எண்ணம் வரமுடியும். அந்த எண்ணம் போனபிறகுதான் மூன்றாவது எண்ணம் வரமுடியும்.

ஒவ்வொரு எண்ணமாக அழியுங்கள். ஒவ்வொரு எண்ணமாக உங்களை விடுபடுத்திக் கொள்ளுங்கள். எதிரியைப் பலவீனப்படுத்துதல்.
ஒவ்வொரு எண்ணமாக எதிர்கொண்டால் எதிரி பலமிழப்பான். அசுரனாய்த் தெரியும் மனமே வலுவிழந்து, பலம் இழந்துவிடும்.

## ஆழ்ந்த பொறுமை ஆழமான நிர்விகல்பத்தை உருவாக்கும்.

இது ஒரு சின்னச் சோதனை.
எவ்வளவு நேரம் முடிகிறதோ அவ்வளவு நேரம் கண்களை மூடி வெறுமனே வேறு எந்தத் தியானமும் செய்யாமல் உங்களோட நீங்களே அமர்ந்திருங்கள்.
நமக்கு நாமே வைத்துக்கொள்ளும் சிறிய சோதனை இது.
தொடர்ந்து அமருங்கள்.
முடிந்த அளவு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அமருங்கள்.
21 நிமிடங்களுக்கு பிறகு (பரமஹம்ஸர் அங்கு தியானம் செய்த மக்களோடு தொடர்கின்றார்...)

5 நிமிடத்திற்கு மேலே உட்கார முடியவில்லை பாருங்கள்.
எத்தனை பேரால் வெற்றிகரமாக சாட்சியாக பார்க்கமுடிந்ததோ, நீங்கள் எல்லோரும் உங்களுக்குள் ஆழந்த அமைதி இருப்பதை உணர்வீர்கள். பார்க்க முடியாமல் தடுமாறுகிறவர்கள் குறைந்த பட்சம் உங்களுக்குள் இருக்கின்ற ஓய்வற்ற தன்மையாது உணர்ந்து இருப்பீர்கள்.

இதுதான் விடுபடுத்திக் கொள்ளுதல் என்கிறோம்.
நன்றாக ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள். இரண்டு, மூன்று சத்தியங்களை இப்போது பார்க்கப்போகிறோம்.
முதல் சத்தியம் எல்லா துக்கத்திற்கும் மனமே காரணம். உடல் வலி உட்பட எல்லாவற்றிற்கும் மனமே காரணம்.

இரண்டாவது சத்தியம். மனதிலிருந்து உங்களை விடுபடுத்திக் கொள்வதுதான் வாழ்க்கையின் இலட்சியம்.
மூன்றாவது சத்தியம் அதற்கான ஒரே வழி விடுபடுத்திக் கொள்ளுதல் என்று சாட்சியாகத் தள்ளி நின்று பார்த்தல்.
அதற்கான ஒரு அருமையான ஆழமான தியானத்திற்குள் நுழைவோம். இந்த தியானத்திற்கு நித்திய தியானம் என்று பெயர்

மொத்தச் சாரத்தையும் சொல்லும் சூத்திரம்.
இருபது வருட ஆராய்ச்சியின் சாரம்
நித்தய தியானம்தான் என்னுடைய ஆன்மீக ஆராய்ச்சியினுடைய சாரம்.
சின்ன வயதில் இருந்தே ஆன்மீக விஷயங்களை ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்தோம். பல ஆண்டுகளாக
நான் ஆராய்ச்சி செய்ததின் சாரம். அதாவது பத்து வயதில் துவங்கிய அந்த ஆராய்ச்சி, இருபத்திரண்டு வயதில் ஞானமடையும் வரை பன்னிரெண்டு



ஆண்டுகள் நடந்தது.
அதன்பிறகு, அடுத்த மூன்று ஆண்டுகள் அதை மற்றவர்களுக்கு சொல்வதற்கான சூத்திரத்தை வகுப்பதற்காக ஆராய்ச்சி செய்தேன். அதன்பிறகு ஐந்து வருடமாக பலரோடு இந்த சூத்திரத்தை நடைமுறை ஆராய்ச்சி செய்து பாரர்த்திருக்கிறோம். முதலில் செய்த பன்னிரெண் வருடம், அதன்பிறகு செய்த மூன்று வருடம் அதன்பிறகு ஐந்து வருடம்.

மொத்தம் இருபது ஆண்டுகள் என்னுடைய ஆன்மீக ஆராய்ச்சியினுடைய பலன் இந்த நித்திய தியானம். அந்த சாரத்தை ஆழ்ந்து உள்வாங்கிக் கொள்ளுங்கள். உடலும் மனமும் முழுமையாக உங்களுக்குள் மலரும்.

நன்றாக தெரிந்து கொள்ளுங்கள் அறுபது சதவிகித இந்தியர்கள் தன்னுடைய உடல் முழுவளர்ச்சி அடையாமலேயே இறந்துவிடுகிறார்கள்.

தன்னுடைய உடல் முழு வளர்ச்சி அடைவதற்கே அனுமதிப்பதில்லை.
நம்முடைய உடல் முழு வளர்ச்சி அடையாமல் இருப்பதற்குக் காரணம் மனதினுடைய தலையீட்டால்தான்.

மனம் உடலை வைத்து அழுத்தும்போது உடல் முழுமையாக இயங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லாமல் போய்விடுகிறது.
உங்கள் உடலும் மனமும் மலர்வதற்கான ஒரு அருமையான தியானநுட்பம் நித்திய தியானம்.
முதல 7 நிமிடங்கள் வஜ்ராசன நிலையில் அமர்ந்து கண்களை மூடியும், உங்கள் கைகளை இடுப்பின்மேல் வைத்தும் சீரற்ற முறையில் சுவாசிக்க வேண்டும்.
ஆழமாகவும், ஒழுங்கற்ற முறையிலும் மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடவேண்டும். உங்களுடைய முழுக்கவனமும் சுவாசத்திலேயே குவியச் செய்யுங்கள். உங்களுடைய இருப்பே சுவாசமாக மாற வேண்டும்.

### முதல்படி. (காலஅளவு 7 நிமிடம்.)

இந்த ஆழமான சீரற்ற சுவாசமுறை உங்கள் தசைகளில் உள்ள இறுக்கத்தையும், சமஸ்காரங்களையும் விடுபடுத்தி, வெளியேற்ற ஆரம்பித்துவிடும்.

### இரண்டாம்படி ( காலஅளவு 7 நிமிடம்)

இரண்டாவது 7 நிமிடங்கள். இந்த இரண்டாவது பகுதியில் வஜ்ராசன நிலையில் அமர்ந்து கைகளில் சின் முத்திரை உருவாக்கி உங்கள் முட்டிப்பகுதியில் வைக்க வேண்டும். பின் கண்களை மூடியவாறே உங்களால் எவ்வளவு நீளமாக முடியுமோ அவ்வளவு நீளமாக, எவ்வளவு ஆழமாக முடியுமோ அவ்வளவு ஆளமாக, எவ்வளவு சப்தமாக முடியுமோ அவ்வளவு சத்தமாக மஹாமந்திரத்தை உச்சாடனம் செய்ய வேண்டும்.

உங்களுடைய முழு விழிப்புணர்வையும் உச்சாடனத்தில் குவியுங்கள்..
உச்சாடனமாகவே மாறுங்கள். இது உங்களின் உள் எண்ண ஓட்டத்தைக் குறைக்கும்.

### மூன்றாவது படி: (கால அளவு 7 நிமிடங்கள்)

இந்த மூன்றாவது படியில் நீங்கள் வஜ்ராசன நிலையில் அல்லது விரும்பினால் பத்மாசனத்தில் அமரலாம். இப்பொழுது உங்களது விழிப்புணர்வை ஒவ்வொரு சக்கரத்திற்கும், மூலாதாரத்திலிருந்து சஹஸ்ராரம் வரை செலுத்த வேண்டும்.

நோய்களின் வேர்களே நமது மனம்தான். நோய்கள் உருவாகுவதற்குக் காரணமாக இருக்கும் நம் உடலுக்கும், மனதுக்கும் இடையே உள்ள இணைப்புபற்றி நமக்குப் புரிவதில்லை. ஒரு சக்தி மையம் அடைபடும்போது அந்த மையத்திற்கு அருகில் உள்ள உடலின் பகுதிகளும் பாதிப்படைகின்றன. ஒளியால் இருள் மறைவது போன்ற, எதிர்மறை உணர்ச்சிகள் விழிப்புணர்வு என்னும் ஒளியை ஏற்றியதும் தானாகவே மறைந்து விடும்.
விழிப்புணர்வை வெள்ளம் போல் நீங்கள் செலுத்தும்போது எதிர்மறைகள் அழிந்து விடும்.
நீங்கள் விழிப்புணர்வை ஒவ்வொரு சக்தி மையத்திலும் செலுத்தும்போது அந்த சக்திமையமாகவே நீங்கள் மாறிவிடுவீர்கள். ஜீவசக்தி மையமாக மாறும்வரை, அதை முழுவதுமாக உணருங்கள். இந்தப் படியின் இறுதியில் நீங்கள் சக்தியடைந்தவராகவும் இலேசானவராகவும் மாறிவிடுவீர்கள்.

### நான்காம்படி (கால அளவு 7 நிமிடங்கள்)

இந்த நான்காவது படியில், உங்களுடைய எண்ணங்கள் ஒன்றுக்கொன்று இணைக்கப்படாதவை என்ற புரிந்து கொள்ளுதலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இயல்பாகவே சாட்சியாக பார்க்கும் விழிப்புணர்வு உங்களுக்குள் நிகழத்துவங்கும்.

இந்தப் புரிதலோடு அமைதியாக அமர்ந்த அடுத்த ஏழு நிமிடங்களில் எண்ணங்களை இணைக்காத நிலையை அனுபவித்து சுத்தமான ஜீவனின் நிலையையும், ஆனந்தத்தையும் பெறுங்கள்.

### ஐந்தாம் படி(கால அளவு 7நிமிடங்கள்)

அமைதியாக அமர்ந்து, ஆனந்தமயமான உணர்வில் ஒலிக்கப்படும் மந்திரங்களைக் கவனியுங்கள்.
பிரபஞ்சத்துடன் இணைக்கப்பட்டதாக உணருங்கள்.

மந்திரங்கள் நேர்மறை அதிர்வுகளைப் பெற்றிருப்பதால் அது உங்கள் ஜீவனில் ஊடுருவி ஆனந்தத்தைக் கொடுக்கும்.
இந்த தியானத்தை தினமும் ஒரு முறையாவது செய்தால், உங்கள் ஜீவனின் புதிய பரமாணத்தை அனுபவிக்கத் தொடங்குவீர்கள்.

இந்த நுட்பம் உங்கள் உடலையும், மனதையும் முழு விழிப்புணர்வு நிலையையும் ஆனந்தத்தையும் அனுபவிக்கத் தயார் செய்யும்.
, ஆழமாகச் சுவாசித்தல்.
, மஹா மந்திர உச்சாடனம் செய்தல்
, சக்கரங்களின் மீது விழிப்புணர்வை செலுத்துதல்.
, எண்ங்களைக் கோர்த்துப் பார்க்காமை.
, பிரபஞ்சத்தோடு கரைதல்.
ஆழந்த பிரார்த்தனை உணர்வோடு, ஜீவன் முக்தன் நிலையில் வாழவேண்டும்என்று இந்தப் பிரபஞ்ச சக்தியை இறை சக்தியை ஆழ்ந்து தியானியுங்கள். இந்த பிரபஞ்ச சத்தியை இறை சக்தியை ஆழ்ந்து தியானியுங்கள். இந்த ஐந்து படிகளும் சேர்ந்ததுதான் நித்திய தியானம்.

மொத்த ஆன்மீகத்தின் சாரத்தையம், இந்த நித்ய தியானத்தில் வகுத்துக் கொடுத்து விட்டோம்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

You're Invited!

# JJ PRINT

புதிய முகவரியில் உங்கள் அபிமான அச்சகத்தின்

கோலாகல திறப்புவிழா

## GRAND Re-Opening

AT OUR NEW LOCATION

SATURDAY, NOVEMBER 6TH
3:00 P.M. TO 8:00 P.M.

585 Middlefield Road, Unit 7
Middlefield & Finch
(NEXT TO DATTA FOOD)

Grand Opening Special
Black & White Copies 5¢ each
Colour Copies 20¢ each
Some conditions apply



Sothy 416-298-9322 or 647-409-8966 | jjprinters@gmail.com | jjprint.ca

# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

- 4-Year MD Program for Undergrad
- 5-Year MD Program for High School Grads
- Clinicals conducted at USA teaching hospitals
- Pre-Medical Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

- 4-year DDS Program for Undergrads
- 5-Year DDS Program for High School Grads
- Doctor of Dental Surgery Program conducted in Aruba
- Pre-Dental Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**

**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**

# எம்மை விட்டுப்பிரிந்த தெய்வத்தின்
# 14ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்:
26-01-1929



விண்ணில்:
04-11- 2007

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வசித்து வந்தவருமான

## அமரர் சத்தியசீலன் செல்லத்துரை

அவர்களின் 14ம் ஆண்டு நினைவாஞ்சலி.
(முன்னாள் முறைமுக அதிகாரசபை ஊழியர், கொழும்பு)



பதிநான்கு ஆண்டு காலம் எப்படியோ ஓடியது
எதுவும் பேசாமல் எமைவிட்டுப் பிரிந்து
காலனோடு கைகோர்த்துச் சென்றீர்கள்
கலங்கிய இதயங்களை எமக்கு தந்துவிட்டு..

என்றும் நீங்கள் எம்மோடு வாழ்வீர்கள் என்று
எப்போதும் எண்ணியிருந்தோம் இறுதியில் ஏமாந்தோம்
நீங்கள் மறைந்ததனால் நாங்கள் கருகிய புற்களானோம்
கலங்கிய நீரோடையானோம். இயங்காத இயந்திரமானோம்
இலைகள் உதிர்ந்த மரங்கள் ஆனோம்
எமக்காய் வாழ்ந்தவரே உம் வாழ்வைத் தொலைத்தீரோ
எத்தனையோ ஆசைகளை இடையில் துறந்தவர் நீர்
அர்ப்பணிப்பு என்பதற்கு அடையாளம் நீங்கள் தான்
அன்பரே உங்கள் அன்பு எமக்குத் தேவை
அருகில் இருத்தலும் எமக்கும் ஆறுதலைத் தரும்
நம்பியிருந்தோம் அது நிறைவேறவில்லை
நற்றாற்றில் கவிழ்ந்த படகு போல் எங்கள்
இதயங்கள் துன்பத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து வெடிக்கின்றன.
என்றென்றும் நெகிழ வைக்கும் நின் பணி
தலைமுறைக்கும் தொடரட்டும்.

**உங்கள் பிரிவால் துயருறும்**

**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்கைள், பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்**

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்:

03 - 07 - 1935

மண்ணில் அடியில்:

06 - 10 - 2021

## திரு. தம்பு நடராஜா

(Retired Labour Officer, Labour Department, Colombo, Sri Lanka)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், Anderson Flats, Colombo மற்றும் Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடராஜா அவர்கள் ஐப்பசி 6ம் திகதி (October 6, 2021) அன்று மேல் மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தி திருவடி நிழலில் சரணடைந்தார்.

16ம் நாள் அன்னாரின் இல்லத்தில், அந்தியேட்டி கிரியையும், 05-11-2021 அன்று வவுனியாவில் உள்ள காப்பகம் ஒன்றில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

அன்னார் சிவபதமடைந்த செய்தியறிந்து நேரில் வந்தவர்கள், தொலைபேசி, முகநூல் ஆகியவற்றின் மூலமும் இதர வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்கள், மற்றும் மலர்வளையங்கள் வைத்தவர்கள், இறுதிக்கிரியைக-ளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்கள், உணவளித்தவர்கள், மந்திரங்கள் ஓதி இறுதிவணக்கம் செலுத்திய ஓம் சக்தி மன்ற சக்திகள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப்பராத்தனையும் அந்தியட்டிகிரியையும் நடைபெற்று. கோவில்குளம், வவுனியாவில் உள்ள அகிலாண்டேச்வரி அருளகத்தில் உள்ள முதியோர் மற்றும் சிறுவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள். மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு:
உமா (மகள்): (647) 284-2530
நாதன் (மகன்): (416) 724-5044 / 647-554-9013

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE · TRANSMISSION · RUSTPROOFING · OILCHANGE · TYRES · AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1335 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 5, 2021

# சனிக்கிழமை நடைபெற்ற "உதயன்" வெள்ளி விழா மற்றும் "நண்பன்" விருது விழா ஆகியவற்றில்

## *மத்திய அமைச்சர் உட்பட எட்டு அரசியல் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்

## *ஐந்து சேவையாளர்கள் 'நண்பன்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர்











சனிக்கிழமை நடைபெற்ற "உதயன்" வெள்ளி விழா மற்றும் "நண்பன்" விருது விழா ஆகியவற்றில் கனடிய மத்திய அமைச்சர் ஒருவர் உட்பட எட்டு அரசியல் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் ஐந்து சேவையாளர்கள் 'நண்பன்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர்

அழைக்கப்பெற்ற சிறப்பு விருந்தினர்களாக மத்திய அமைச்சர் மேரி இங். ஒன்றாரியோ மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவி அன்றியா ஹார்வர்த். தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரி ஆனந்தசங்கரி. மற்றும் சல்மா சாகிட். மாகாண பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் லோகன் கணபதி. அரிஸ் பாபிக்கியன் மற்றும் குளொவர். நகரசபை உறுப்பினர் ஜனிபர் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அன்றையதினம் வழங்கப்பெற்ற தமிழ்நாட்டின் "நண்பன்" விருதுகளை ஐவர் பெற்றுக்கொண்டனர். செல்வி அபினா நிமல்ராஜ். திருவாளர்கள். சோம. சச்சிதானந்தன். ஜெயானந்தன் பூத்தப்பிள்ளை ஜெயச்சந்திரன் தியாகராஜா. விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை. ஆகியோரே இந்த ஐவராவர். இங்கே காணப்படும் படங்களில் அனைவரும் காணப்படுகின்றனர்.

## வர்த்தகப் பிரமுகரும் வீடுகள் கட்டடங்கள் மதிப்பீட்டாளருமான எஸ். கே. பாலேஸ் "உதயன்" வெள்ளிவிழா சிறப்பிதழைப் பெற்றார்



"உதயன்" பத்திரிகையின் நீண்ட கால விளம்பரதாரரும். வர்த்தகப் பிரமுகரும் வீடுகள் கட்டடங்கள் மதிப்பீட்டாளருமான எஸ். கே. பாலேஸ் அவர்களுக்கு அண்மையில் "உதயன்" வெள்ளிவிழா சிறப்பிதழ் வழங்கப்பெற்றது.

கனடா உதயன் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதயன் பிரதம ஆசிரியர் பிரதியை அவருக்கு வழங்குவதை இங்குள்ள படத்தில் காணலாம்.

(படம்: சத்தியன்)

## ஒன்றாரியோ சட்ட சபை உறுப்பினர் விஜேய் தணிகாசலத்தின் தொகுதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பு



ஒன்றாரியோ மாகாண சட்ட சபை உறுப்பினரும் மாகாண போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான விஜேய் தணிகாசலத்தின் தொகுதி அலுவலகத்தில் உதயன் பிரதம ஆசிரியர். அவரைச் சந்தித்து உரையாடினார்.

அப்போது உதயன் பிரதம ஆசிரியர் விஜேய் தணிகாசலம் அவர்களுக்கு உதயன் வெள்ளிவிழா சிறப்பு மலர் பிரதியை வழங்கினார். தொடர்ந்து, ஒன்றாரியோ அரசு சார்பான பாராட்டுச் சான்றிதழை வழங்கி உதயன் பிரதம ஆசிரியருக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார விஜேய் தணிகாசலம் அவர்கள்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker